# கெடிலவளம்


ஆசிரியர் :

'அகராதிக்கலை ஆசிரியர்'

பேராசிரியர் சுந்தர சண்முகனார்

தொகுப்பியல் துறைத் தலைவர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்,

தஞ்சாவூர்.


☆


திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

1985

© சுந்தர சண்முகனர் (1922)

1984 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ௧௯௨௪

விலை ரூ. 8-00

U. 21. N 9
N82

KEDILA VALAM

திருவரங்கனார் அச்சகம், சென்னை-600 013- (1/1)

## பதிப்புரை

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. பல நாடுகளின் நாகரிகத்துக்கும் வளத்திற்கும் ஆறுகள் காரணமாக இருந்து வருவதை வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன. பேரூட்டில் தேம்ஸ் நதிக்கரை நாகரிகம், எகிப்தில் நைல் நதிக்கரை நாகரிகம், இந்தியாவில் கங்கைக்கரை நாகரிகம் என ஆறுகளை முன்வைத்துச் சில இயல்புகளும், வளங்களும் பேசப்படுகின்றன.

எனவே, ஆறுகளைப்பற்றியும் அவற்றையொட்டிய வாழ்வு - வளம் - நாகரிகம் ஆகியனபற்றியும் நூல்களை வெளியிடும் நோக்குடன் தமிழகத்தில் பாயும் பொருநை காவிரி ஆகிய ஆறுகளைப்பற்றியும் அவை தரும் வளம்பற்றியும் முறையே பொருநை வளம், காவிரி வளம் என்னும் நூல்களைத் தக்க ஆசிரியர்களைக் கொண்டு எழுதச்செய்து முன்னர் வெளியிட்டோம். இப்பொழுது கெடிலவளம் என்னும் இந் நூலினை வெளியிடுகின்றோம். இது பேராசிரியர் சுந்தர சண்முகனார் இயற்றிய கெடிலக்கரை நாகரிகம் என்றும் நூலின் வழிநூலாகும்.

இதில் கெடிலத்தின் தோற்றம் - சிறப்பு முதலியன கூறப்படுகின்றன. கெடிலம் தென்னார்க்காடு மாவட்டத்தில் தோன்றி, அம்மாவட்டத்தை வளப்படுத்தி, நாகரிகத்தை வளர்த்து, வரலாற்றில் சீரிய இடம்பெறச் செய்து அம் மாவட்டத்திலேயே கடலோடு கலக்கும் மாண்பினைச் செப்புகிறது இந்நூல்.

தாள்விலை ஏற்றம் காரணமாக, இந் நூலினை மிகச் சுருங்கிய அளவில் வெளியிடுகின்றோம். எனினும் கூடுமானவரையும் இன்றியமையாச் செய்திகளைச் சேர்த்துள்ளோம். அங்ஙனமே இன்றியமையாது தேவைப்படும் 10 படங்களை இதில் இடம்பெறச் செய்துள்ளோம்.

எமது வேண்டுகோளுக்கிசைந்து 'கெடிலக்கரை நாகரிக'த்தைக் 'கெடிலவளம்' என சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வகையில் இந்நூலினை உருவாக்கித் தந்த இந்நூலாசிரியர் உயர்திரு புலவர் சுந்தர சண்முகனார் அவர்கட்குக் கழகத்தின் நன்றி என்றும் உரியதாகும்.

இஃதொரு வரலாற்று நூலாக இருப்பதால் பள்ளி, கல்லூரி, பொது நூலகங்கள் ஆகியன இந்நூலினை தத்தம் நூலகங்களில் இடம் பெறச் செய்யுமாயின் தென்னார்க்காடு மாவட்ட வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள நல்வாய்ப்பாகும் என நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## ஆசிரியர் முன்னுரை

தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஓடும் ஆறு 'கெடிலம்' ஆகும். அந்த ஆற்றைப்பற்றியும் இதன் சுற்றுச் சூழ்நிலைகளைப்பற்றியும் கூறுவதே இந்தக் 'கெடிலவளம்' என்னும் நூலாகும்.

இந்த நூல் ஒரு வழி நூலே. இதன் முதல் நூல், 1975ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற "கெடிலக்கரை நாகரிகம்" என்னும் எனது பெரிய நூலாகும். இப்பெரிய முதல் நூல், 650 பக்கங்களும் 51 படங்களும் கொண்டது.

படிப்பவர்கள் குறைந்த செலவில்-குறைந்த முயற்சியில் கெடில ஆற்றுச் சூழ்நிலையைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்குடன், 'கெடிலக்கரை நாகரிகம்' என்னும் முதல் நூலை மிகச் சுருங்கிய அளவில் 'கெடில வளம்' என்னும் இந்த நூலாகத் தருகிறோம். கெடில வரலாறு பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவோர்க்கு இந்நூல் நன்கு துணை புரியும்.

கல்வி நிறுவனங்களும் நூலகங்களும் எளியேனது இந்த நூலையும் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறேன். சிறந்த நூல்கள் எனத் தமிழறிஞர் பலராலும் பாராட்டப் பெறும் என் நூல்கள், மற்றவர் நூல்களைப் போல நூலகங்களில் போதிய இடம் பெறாமை வியப்பும் வேதனையும் அளிக்கிறது. இதற்குரிய காரணம் புரியவில்லை. எனவே, தமிழகத்தின் ஆதரவை வேண்டுகிறேன்.

'கெடிலக்கரை நாகரிகம்' என்னும் எனது பெரிய முதல் நூலைப் போலவே 'கெடில வளம்' என்னும் இந்த வழி நூலையும் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடும் சென்னை – சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு எனது நன்றி மிகவும் உரியது.

சுந்தர சண்முகனார்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆறுகளின் தோற்றமும் அமைப்பும் | 1 |
| 2. | உலக ஆறுகளுள் கெடிலம் | 5 |
| 3. | கெடிலத்தின் தோற்றம் | 8 |
| 4. | கெடிலத்தின் முடிவு | 14 |
| 5. | கெடிலத்தின் தொன்மை | 19 |
| 6. | இலக்கியத்தில் கெடிலம் | 26 |
| 7. | கெடில நாடு | 39 |
| 8. | கெடிலக்கரை அரசுகள் | 51 |
| 9. | கெடிலநாட்டுப் பெருமக்கள் | 65 |
| 10. | கெடிலக்கரைத் துறைமுகம் | 86 |
| 11. | கெடிலக்கரை ஊர்கள் | 94 |
| 12. | கெடிலநாட்டு வளங்கள் | 119 |

# கெடில வளம்

## 1. ஆறுகளின் தோற்றமும் அமைப்பும்

மலைப்பகுதியில் உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகள் உருகுவதாலும், கீழிருந்து ஊற்றுநீர் மேலெழுவதாலும், பெருமழை பெய்வதாலும் ஆங்காங்கே ஆறுகள் தோற்றம் எடுத்து, சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் சிறியனவும் பெரியனவுமாகிக் கடலை நோக்கி ஓடுகின்றன.

பெரும்பாலும் ஆங்காங்கே பெய்யும் மழையின் அளவைப் பொறுத்து ஆறுகளின் அகலமும் நீளமும் அமையும். அடுத்தபடியாகத், தம்மொடு வந்து கலக்கும் அருவிகள், கால்வாய்கள், ஓடைகள், துணையாறுகள் ஆகியவற்றின் எண்ணிக்கையையும் உருவத்தையும் பொறுத்து ஆறுகளின் அகல நீளங்கள் அமைவதுண்டு.

ஓரிடத்திலிருந்து கடலை நோக்கிச் செல்லச் செல்லத் தரை சரிவாயிருக்கும். அதனாலேயே கடலை நோக்கி ஆறுகள் ஓடுகின்றன. 'பள்ளத்தைக் கண்ட வெள்ளம் போல...' என்பது பழமொழியன்றோ? எனவே, கடலுக்கு அண்மையில் தோன்றும் ஆறுகள் நீளத்தில் குறைவாயிருப்பதும், கடலுக்கு மேலே வெகு தொலைவில் தோன்றும் ஆறுகள் நீளமாயிருப்பதும் இயல்பு. ஐக்கிய அமெரிக்காவில் ஓடும் 'மிசிசிப்பி' என்னும் ஆறு 4240 *கல் நீளம் உள்ளது. உலகிலேயே மிகவும் நீளமான ஆறு இதுதான். இந்தியாவில் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் பொருநை என அழைக்கப்படும்

---

* 1 கல் என்பதை 1·6 கிலோ மீட்டர் எனக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

தாமிரவருணி ஆறு 75 கல் நீளமே உடையது. இவ்விரண்டு ஆறுகளின் நீளத்திலும் இவ்வளவு வேறுபாடு இருப்பதற்குக் காரணம் என்ன?

மிசிசிப்பி ஆறு அமெரிக்காவின் வடமேற்கில் ராக்கி மலைப் பகுதியிலிருந்து தோன்றி, தென்கிழக்கில் மெக்சிகோ வளைகுடாவில் வந்து விழுகிறது. அது தோன்றும் இடத்திற்கும் முடியும் இடத்திற்கும் இடையே உள்ள பகுதி மிகமிக நீளமானது. அவ்விடைப் பகுதியிலே ஐக்கிய அமெரிக்காவின் பல நாடுகள் உள்ளன. எனவே, மிசிசிப்பி ஆறு அனுமார் வால் போல் நீண்டுகொண்டே போகிறது.

இந்தியாவிலோ, வடக்கேயிருந்து தெற்கே வரவர நிலப் பகுதியின் அகலம் சுருங்கிக்கொண்டே வருகிறது. இந்தியாவின் தெற்குக் கோடி தமிழ்நாடு, கேரளம் என இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தரைப்பகுதி கீழ்கடலை நோக்கிச் சரிவாயுள்ளது. கேரளத்தின் தரைப்பகுதி மேல்கடலை நோக்கிச் சரிந்துள்ளது. இரு கடல்களுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியின் நீளம் மிகக்குறைவு. ஒன்றோடொன்று மிக நெருங்கி வந்துகொண்டிருக்கின்ற இரு கடல்களுக்கிடையே, தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியாகிய திருநெல்வேலி மாவட்டத்திற்கும் கேரள நாட்டிற்கும் இடையே மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. அம் மலையின் மேற்கே தோன்றும் ஆறு மேல்கடலை நோக்கி மலையாள நாட்டிலும், அம் மலைக்குக் கிழக்கே தோன்றும் ஆறு கீழ்கடலை நோக்கித் தமிழ்நாட்டிலும் பாய்வது இயல்பு. அந்த முறையில், திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி ஆறு, மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த பெரிய பொதிகை என்னும் அகத்தியர் மலையில் தோற்றங் கொண்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடிக் கிழக்கே மன்னார் வளைகுடாவில் கலக்கிறது. ஒரு நாட்டின் ஒரு மாவட்டத்திற்குள்ளேயே தோன்றி முடியும் ஓர் ஆற்றின் நீளம் மிசிசிப்பியைப்போல் எவ்வாறு நீளமாயிருக்க முடியும்?

இதுகாறும் கூறியவற்றால், நிலப்பகுதி வரவரச் சுருங்கிக் கொண்டு போகும் தமிழகத்தின் ஆறுகள் உலக ஆறுகள் பல



வற்றைப்போல் மிகமிக நீளமாயிருக்க முடியாது என்பது தெளிவாகும். எனவே, தமிழ்மக்கள் ஆறுகளைப் பொறுத்தமட்டில், 'நாம் உலகினரோடு போட்டிபோட முடியவில்லையே' என்று ஏங்க வேண்டியதில்லை.

**தமிழக ஆறுகளுள் கெடிலம்:**

தமிழகத்தில் ஓடும் ஆறுகளுக்குள்ளேயே 75 கல் தொலைவு ஓடும் தாமிரவருணியைவிட 165 கல் தொலைவு ஓடும் வையை ஆறு நீளமானது; அதனினும், 230 கல் தொலைவு ஓடும் பாலாறு நீளமானது; அதைவிட 250 கல் தொலைவு ஓடும் தென்பெண்ணையாறு நீளமானது; அதைக் காட்டிலும், 480 கல் தொலைவு ஓடும் காவிரியாறு நீளமானது. இவ் வேறுபாடுகட்குக் காரணம் என்ன?

தாமிரவருணியும் வையையும் தமிழ்நாட்டிலேயே தோன்றித் தமிழ்நாட்டிலேயே முடிபவை. பாலாறும் தென்பெண்ணையும் தமிழ்நாட்டுக்கு அண்மையில் மைசூர் நாட்டுக் 'கோலார்' வட்டத்தில் தோன்றித் தமிழ்நாட்டில் வந்து முடிபவை; எனவே, இவையிரண்டும் முன்னைய இரண்டினும் நீளமாயுள்ளன. காவிரியோ, குடகுநாட்டில் தோன்றி மைசூர் நாட்டுள் புகுந்து கடந்து தமிழ்நாட்டில் வந்து முடிகிறது; எனவே, இது முன்னைய நான்கினும் மிகவும் நீளமாயுள்ளது.

தாமிரவருணி, வையை என்னும் ஈராறுகளை மட்டும் எடுத்துக் கொள்ளினும், இரண்டுமே மேற்குத்தொடர்ச்சி மலையில் தோன்றினாலுங்கூட, வையையாறு மதுரை மாவட்டத்தில் தோன்றி இராமநாதபுர மாவட்டத்தில் முடிகிறது. தாமிரவருணியோ, திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றி அதே மாவட்டத்திலேயே முடிந்துவிடுகிறது. அதனால்தான், வையையினும் தாமிரவருணி நீளத்தில் குறைவாயுள்ளது.

இதிலிருந்து இந்தியப் பெருநிலத்திலேயே, அகன்ற வடபகுதியில் உள்ள ஆறுகளினும் குறுகிய தென்பகுதியில் உள்ள ஆறுகளின் நீளம் குறைவு என்பதும், தென்பகுதியிலும் பல

மாநிலங்களில் ஓடும் ஆறுகளினும் ஒரு மாநிலத்தில் மட்டும் ஓடும் ஆறுகள் நீளக் குறைவானவை என்பதும், ஒரு மாநிலத்திற்குள்ளும் பல மாவட்டங்களில் ஓடும் ஆறுகளைவிட ஒரு மாவட்டத்தில் மட்டும் ஓடும் ஆறுகளின் நீளம் குறைவு என்பதும் புலப்படும். புலப்படவே, ஒரு மாவட்டத்தின் மேற்குக் கோடியிலிருந்து கிழக்குக்கோடி வரையும் ஓடிக் கடலில் கலக்கும் தாமிரவருணி போன்ற ஆற்றைக் காட்டிலும், ஒரு மாவட்டத்தின் நடுப்பகுதியில் தோன்றிக் கடலில் கலக்கும் ஓர் ஆறு மிகச் சிறியதாய்த்தான் இருக்கமுடியும் என்பதும் உடன் புலனாகும். அப்படி உள்ள ஓர் ஆறுதான் 'கெடிலம்' என்னும் ஆறு.

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் :**

* 'உடல் சிறியர் என்றிருக்கவேண்டா' என்பது ஔவை மொழி. † 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' என்பது வள்ளுவர் வாய்மொழி. இம் மொழிகள் கெடில ஆற்றிற்கு மிகவும் பொருந்தும். 'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்றபடி, கெடிலம் உருவத்தில்—நீளத்தில் சிறியதாயிருப்பினும் நீர்ப்பாசனப் பெருமை, அணைக்கட்டுப் பெருமை, துறைமுகப் பெருமை, போக்குவரவுப் பெருமை, வாணிகப் பெருமை, மண் வளப் பெருமை, பண்ணைப் பெருமை, தொழில் பெருமை, ஊர்ப் பெருமை, தலைநகர்ப் பெருமை, மலைப்பெருமை, கடல் பெருமை, மக்கள் பெருமை, அரசியல் பெருமை, ஆட்சிப் பெருமை, கோயில் பெருமை, நீராடல் பெருமை, பாடல் பெருமை, இலக்கியப் பெருமை, கல்விப்பெருமை, கலைப்பெருமை, வரலாற்றுப் பெருமை, நாகரிகப் பெருமை முதலிய அனைத்துப் பெருமைகளும் பெற்று மிளிரும் ஓர் உயிர்ப்பு உள்ள (சீவநதி) ஆறு ஆகும்.

மிசிசிப்பி ஆற்றையும் நைல் ஆற்றையும் உலகத்தார்க்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. கங்கையைப்பற்றியோ,

* மூதுரை.

† திருக்குறள்—667.



பிரம்மபுத்திராவைப்பற்றியோ இந்தியர்க்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. காவிரியையோ, பெண்ணையாற்றையோ தமிழ்மக்கட்கு அறிமுகம் செய்யவேண்டியதில்லை. இவ்வாறுகள் எல்லாம் பரவலாக விளம்பரம் பெற்றிருப்பவை. ஆனால், பல் வகைச் சிறப்புகள் நிறைந்தும், இருக்குமிடம் தெரியாமல் அடக்கமாய்த் தன் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிற கெடிலம் ஆற்றைத் தமிழ் மக்கட்கு—உலகினர்க்கு விரிவாக அறிமுகம் செய்யாதிருப்பது தவறாகும். எனவே, தமிழக ஆறுகட்கிடையே கெடிலத்தின் நிலையை ஆய்ந்து கண்ட நாம், உலக ஆறுகட்கிடையே கெடிலத்தின் நிலையையும் ஆய்ந்து அதன் தகுதியைக் கணித்து மதிப்பிட வேண்டும்.

---

## 2. உலக ஆறுகளுள் கெடிலம்

குறுகிய தொலைவே ஓடும் கெடிலம், ஏறக்குறைய 70 கல் (112 கி. மீ.) நீளமே உடையது. உலக ஆறுகளை நோக்கக் கெடிலத்தின் நீளமும் நீர்வசதியும் மிகமிகக் குறைவு.

நீளத்தைக் கொண்டுமட்டும் ஆறுகளின் பெருமை சிறுமையைக் கணித்துவிடக்கூடாது; மற்ற தகுதிகளையும் நோக்கியே கணிக்க வேண்டும். தென் அமெரிக்காவில் ஓடும் அமேசான் ஆறு 4000 கல் (6400 கி. மீட்டர்) நீளம் உடையது. ஆனால், இதனினும் மிகுதியாய் முறையே 4240 கல் (6784 கி. மீட்டர்) நீளமும், 4160 கல் (6656 கி. மீட்டர்) நீளமும் உடைய வட அமெரிக்காவில் ஓடும் மிசிசிப்பி ஆறும் ஆப்பிரிக்க ஆறான நைல் ஆறும் நீளத்தால் பெரியதாயினும் வடிகால் பரப்பில் குறைவாக இருக்கின்றன. அமேசான் ஆற்றின் வடிநிலப் பரப்பு 2368 ஆயிரம் சதுரமைல். மிசிசிப்பியின் வடிநிலப் பரப்போ 1258 ஆயிரம் சதுரமைலே. நைலின் வடிநிலப் பரப்போ 1120 ஆயிரம் சதுரமைலேதான். இதுமட்டுமா? அமேசான் ஆற்றின் சராசரி ஒழுக்கு 3800 ஆயிரம் க. அடி செக. மிசிசிப்பியின் சராசரி ஒழுக்கோ 700 ஆயிரம் க. அடி செக. தான்.

நைலின் சராசரி ஒழுக்கோ 56 ஆயிரம் க. அடி செக. அளவே தான், எனவேதான், நீளத்தால் குறைந்தாலும், வடிநிலப் பரப்பாலும் சராசரி ஒழுக்காலும் மிகுந்த அமேசான் முதல் இடத்தைப் பெற்றது. எனவே, நீளத்தின் மிகுதியை விட, வடிநிலப் பரப்பின் மிகுதியும் சராசரி ஒழுக்கின் மிகுதியும் மிகவும் இன்றியமையாதவை என்பது தெளிவு.

ஓர் ஆற்றின் நீளம், வடிநிலப்பரப்பு, சராசரி ஒழுக்கு ஆகியவற்றின் அளவுகள், ஒரு மாந்தனுடைய உயரம், பருமன், எடை ஆகியவற்றின் அளவுகளைப் போன்றனவாம். ஒருவரது தகுதியை, அவருடைய உயரம், பருமன், எடை ஆகிய உடல் பண்பைக் கொண்டு மதிப்பிடுவதில்லை. உடல் பண்பு இன்றியமையாததுதான் என்றாலும், அதற்குமேல் சிறந்தனவாக உள்ளப் பண்பு, உயிர்ப் பண்பு என இரண்டு உள்ளன. இந்த இரண்டும் உடைமையே மக்கட் பண்பு ஆகும். இன்னும் கேட்டால் நீண்டு பருத்த மரம் போல் வாட்டசாட்டமான உடல் உரம் மட்டும் பெற்று, உள்ளப் பண்பும் உயிர்ப் பண்பும் பெற்றிராதவரை மாந்தராக அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதனை 'மக்களே போல்வர் கயவர்' 'மரம் போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர்' என்னும் திருக்குறள் பகுதிகளால் தெளியலாம்.

உருவத்தால் பெரியவராயினும் மக்கட் பண்பு இல்லாத மாக்களைவிட, உருவத்தால் சிறியவராயினும் சிறந்த உள்ளப் பண்பும் உயரிய உயிராற்றலும் உடையவர் மிகவும் மதிக்கத் தக்கவர். இதுபோலவே, ஓர் ஆறு உருவத்தால் சிறுத்திருப்பினும், துறைமுகப்பெருமை, ஊர்ப்பெருமை, பெருமக்கள் பெருமை, தலைநகர்ப்பெருமை, அரசாட்சிப் பெருமை, கோயில் பெருமை, நீராடல் பெருமை, பாடல் பெருமை, பழைய இலக்கியப் பெருமை, கல்விப்பெருமை, கலைப்பெருமை, நீண்டகால வரலாற்றுப்பெருமை, உயர்ந்த நாகரிகப்பெருமை முதலிய பெருமைகளைப் பெற்றிருப்பின், மிகப் பெரிய ஆறுகளைக் காட்டிலும் அது மிகவும் உயர்ந்ததேயாம்.

ஓர் ஆற்றுக்குத் தலைநகர்ப்பெருமை, வரலாற்று நாகரிகப் பெருமை முதலியன அமைந்திருப்பது, ஒரு மனிதர்க்கு உயர்ந்த



உள்ளப் பண்பும் உயிர் ஆற்றலும் அமைந்திருப்பது போன்ற தாகும் என்னும் கருத்தைப் புரிந்துகொண்டால், உருவத்தால் சிறிய ஆருகிய நமது கெடிலத்தின் 'எவரெஸ்ட்' பெருமையை எவரும் ஏற்றுக்கொள்வர். இந்த அடிப்படையிலேயே கெடிலத்தைப்பற்றிய இந்நூல் எழுகிறது.

மிகப் பெரிய இமயமலையைப்பற்றி மட்டும் உலகத்தில் ஆராய்ச்சி நடக்கவில்லை; கண்ணுக்குப் புலப்படாத மிகவும் சிறிய அணுவைப்பற்றியும் ஆராய்ச்சி நடக்கிறது; அவ்வணுவுக்குள் அளவற்ற ஆற்றல் அடங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தவும்படுகிறது. விண்ணில் கண்ணுக்குத் தெரியும் மிகப் பெரிய ஞாயிற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்வதோடு அறிஞர்கள் அடங்கிவிடவில்லை. கண்ணுக்குத் தெரியாத மிக மிகச் சிறிய விண்மீன்களைப்பற்றியும் ஆராய்ச்சி நடத்தத்தான் செய்கின்றனர்.

எனவே, அமேசான், மிசிசிப்பி, கங்கை, நைல், காவிரி முதலியவற்றோடு ஆறுகளைப்பற்றிய நூல்கள் அமைந்துவிட வேண்டியதில்லை; அப்பர் பெருமானால் 'தென் கங்கை' என்று சிறப்பிக்கப்பெற்றுள்ள கெடிலத்தைப்பற்றியும் ஆராய்ச்சி நூல்கள் எழ வேண்டியதுதான்! அந்தப் பணியின் ஒரு கூறே இத் நூலின் எழுச்சி!

# 3. கெடிலத்தின் தோற்றம்

தமிழ்நாட்டின் மாவட்டங்களுள் ஒன்றாகிய தென்னார்க்காடு மாவட்டம், வங்காளக்குடாக்கடலையடுத்துச், செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் இடையில் உள்ளது. இம் மாவட்டத்தின் வடபகுதியாகச் செஞ்சி, திண்டிவனம், விழுப்புரம் ஆகிய வட்டங்களும், தென்பகுதியாக விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய வட்டங்களும் உள்ளன. இவற்றிற்கு இடையே மேற்கும் கிழக்குமாகக் கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர் ஆகிய வட்டங்கள் முறையே உள்ளன. இம் மூன்றனுள், மேற்கே உள்ள கள்ளக்குறிச்சிக்கும் கிழக்கே உள்ள கடலூருக்கும் நடுவே திருக்கோவலூர் வட்டம் உள்ளது. மொத்தத்தில், தென்னார்க்காடு மாவட்டத்தின் 'நட்ட நடுவே திருக்கோவலூர் வட்டம் உள்ளதெனக் கூறலாம். இந்த அடிப்படையை நினைவில் வைத்துக்கொண்டு கெடிலம் ஆற்றுக்கு வருவோம்.

**மையனூர் :**

கெடிலம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் மையனூர் என்னும் ஊருக்கு அருகில் தோன்றுகிறது. இந்த மையனூர், கள்ளக் குறிச்சிக்கு வடகிழக்கே 16 கி. மீ. தொலைவிலும், தியாக துருக்கத்திற்கு வடமேற்கே 16 கி.மீ. தொலைவிலும், ரிஷிவந்தியத் துக்கு வடமேற்கே 11 கி. மீ. தொலைவிலும், சங்கராபுரத்திற்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவிலும், திருக்கோவலூருக்குத் தென் மேற்கே 20 கி. மீ. தொலைவிலும் உள்ளது. மையனூருக்குச் சாலை வசதியின்மையால், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள தொலைவு அளவு ஒருதோற்றமாக — தோராயமாகக் கணிக்கப்பட்டதே யாகும்.


**மையனூர் மலை:**

மையனூருக்கு அண்மையில் தென்புறத்தில் ஒரு மலை உள்ளது. அஃது, எந்த மலைத் தொடர்ச்சியையும் சேர்ந்ததன்று



தனிமலையே. 'மையனூர்மலை' ஒருதோற்றம் 250 அடி உயரம் இருக்கலாம். அம் மலையைப் பின்வரும் படத்தில் காணலாம்.

இது மலைக்குக் கிழக்கே நின்று எடுத்த படமாகும். இம் மலையைச் சுற்றி வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்குமாகப் பப்பத்து (10 × 10) கி மீ. தொலைவு பரப்பளவுக்குக் காடும் மலையும் செறிந்த சூழல்தான் காட்சியளித்துக் கண்கட்கு விருந்




மையனூர் மலை

தூட்டுகிறது. தென்னார்க்காடு மாவட்டத்திலேயே கள்ளக்குறிச்சி வட்டத்தில்தான் காடும் மலையும் மிகுதி,

**கருடன் பாறை :**

மையனூர் மலையின் அடிவாரத்தில் கிழக்குப்புறத்தில் தனித்த பாறை ஒன்று உள்ளது. அது 15 அல்லது 20 அடி உயரம் இருக்கலாம். அப் பாறையின் பெயர் 'கருடன் பாறை' என்பது. அப் பாறை கருடன் அலகுபோல் இருப்பதாகவும், அப்

பாறையில் கருடன் அலகால் கீறிச் சுனை உண்டாக்கியதாகவும் அவ் வட்டாரத்து மக்களால் கூறப்பட்டு ஒருவகைப் பெயர்க் காரணம் கற்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் கருடன் பாறையை இப் படத்தில் காணலாம்.



கருடன் பாறைச் சுனை (மையனூர்)

**சுனை:**

இந்தப் படம் சுனையின் கிழக்கே இருந்தபடி எடுத்ததாகும். சுனை கருடன் பாறையின் கீழ்பால் இருக்கிறது. இந்தச் சுனை மிகவும் சிறியது; ஏறக்குறைய 4 அடி நீளமும் 2 அடி அகலமும் 3 அடி ஆழமும் கொண்டது; தென்புறத்திலிருந்து வடபுறம் வரவரக் குறுகிக் குவிந்துள்ளது. சுனைநீர் முழுவதும் தெரியாதபடி மேலே செடி - கொடி - புதர் கவிந்துகொண்



டிருப்பதைப் படத்தில் காணலாம். வறட்சிமிக்க நாளிலும் சுனையில் நீர் இருந்துகொண்டே யிருக்கும் என அங்குள்ளவர் கூறுகின்றனர். மழை நாளில் சுனையிலிருந்து ஊற்றுப்பெருக்கு வெளியேறிக்கொண்டிருக்குமாம். இந்தச் சுனைப் படம், கோடை நாளாகிய சித்திரைத் திங்களில் எடுத்தது. இதில் நீர் வெளியேற்றம் தெரியவில்லை. மழைநாளில் நீர் வெளியேறும் தெரிந்து கோடைநாளில் தெரியாவிடினும், எந்த நாளிலுமே சுனையிலிருந்து தண்ணீர் தரைக்குக் கீழே உள் ஊற்றாகச் சரிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தச் சுனைதான் கெடிலத்தின் தோற்றம் (மூலம்) ஆகும். சுனையிருக்கும் பகுதி தெய்வத் தன்மை உடையதாகப் போற்றி மதிக்கப்படுகிறது. கருடன் அலகால் கீறி உண்டாக்கிய சுனை என்று சொல்லப்படுவதிலும் ஏதோ தெய்வக் கற்பனை அடங்கியிருப்பதாகத் தெரிகிறது.

**மையனூர் ஏரி :**

கோடைநாளில் உள் ஊற்று வழியாகவும் மழைநாளில் உள் ஊற்று-மேல் ஊற்று இரண்டன் வழியாகவும் சுனையிலிருந்து தண்ணீர் வடக்குச் சரிவை நோக்கி ஓடி, அப் பகுதிக்கு வடக்கே ஒரு கி. மீ. தொலைவிலுள்ள ஓர் ஏரியில் கலக்கிறது. அந்த ஏரியிலிருந்து வாய்க்கால் வடிவத்தில் பிரிந்து செல்லும் நீரோட்டமே கெடிலம் ஆறு ஆகும்.

கெடிலத்தின் தோற்றமாகிய இவ்வேரி 'மையனூர் ஏரி' என ஊர்ப் பெயராலேயே அழைக்கப்படுகிறது. ஏரி மையனூர் மலையின் வடபால் உள்ளது; கிழக்கு மேற்காக ஒன்றரை கி. மீ. நீளம் இருக்கும். ஏரி நிரம்பி வழியும் கோடி கிழக்கேதான் உள்ளது. அந்தக் கிழக்குக் கோடிதான் ஆற்றின் இரண்டாவது பிறப்பிடம். இங்கிருந்து சித்திரைக் கோடையிலும் சிறு ஊறல் நீர் சுரந்து சென்றுகொண்டே யிருக்கிறது. இதனால்தான் கெடிலம் ஓர் 'உயிர் ஆறு' (சீவநதி) என்று சொல்லப்படுகிறது.

**இரு பிறப்பு :**

பூணூல் அணிந்துகொண்டிருக்கும் அந்தணர்களை 'இருபிறப்பாளர்' என்று சொல்வது மரபு. அவர்கள் அன்னை வயிற்றி

லிருந்து பிறந்தது ஒரு பிறப்பாம்; பின்னர்ச் சில்லாண்டுகள் கழித்துப் பூணூல் போட்டுக்கொள்வது மற்றொரு பிறப்பாம். அவர்கள் பூணூல் அணிந்த பின்னரே அந்தணர் என்னும் தகுதி பெறுகின்றனராம். அவர்களைப் போலவே கெடிலத்தையும் 'இரு பிறப்பாறு' என்று சொல்லலாம். அதன் முதல் பிறப்பு: கருடன் பாறையின் கீழ்பாலுள்ள சுனை; இரண்டாவது பிறப்பு: மையனூர் ஏரியின் கிழக்குக் கோடி. இவ்வகையில் கெடிலம் இரு பிறப்பு உடையதாகிறது. இவ்வுண்மையறியாதார் சிலர் கெடிலத்தின் பிறப்பிடம் மையனூர் ஏரி என்றே சொல்லி முடிவு கட்டிவிடுகின்றனர். சிறு வகுப்புப் பாடநூல்கள் சிலவற்றில், 'கெடிலம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் ஓர் ஏரியிலிருந்து தோன்றுகிறது' என்றே எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இதிலும் உண்மையிருக்கிறதல்லவா ?

**'நதி மூலமும் ரிஷி மூலமும்'**

கெடிலத்தின் பிறப்பிடம் மையனூர் ஏரி என்று சொல்பவர்கள், ஏரியுடன் நின்றுவிடாமல், அந்த ஏரிக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்பதையும் ஆராயவேண்டும். அண்மையில், சுனையுடன் கூடிய கருடன் பாறையை அடிவாரத்திலே பெற்றுள்ள மையனூர் மலைப்பகுதியில் ஊறும் நீர் இறங்கி வருவதால் உருவானதே மையனூர் ஏரி. அந்த ஏரி மழையை மட்டும் நம்பியதாயிருந்திருந்தால், அந்த ஏரியிலிருந்து கோடைக் காலத்திலும் நீர் ஊறி ஆறாக ஓடமுடியாது. எனவே கெடிலத்தின் முதலிடம் (மூலம்) மையனூர் ஏரியன்று; மையனூர் மலைப்பாறைச் சுனைப்பகுதியே. 'நதிமூலமும் ரிஷிமூலமும் அறிய முடியாது' என்னும் முதுமொழி ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

**துணைகள் :**

கெடிலத்தின் தோற்றம் தொடக்கத்தில் ஒரு சிறு சுனையெனினும், அஃது இடையிடையே பல துணைகளைப் பெற்றுப் பெரிய ஆறாகத் தோற்றமளிக்கிறது. துணையாறுகள் இரண்டும் துணை ஓடைகள் கால்வாய்கள் பலவும் கெடிலம் பெற்றுள்ளது.



**தாழனோடை ஆறு (சேஷ நதி) :**

முதன்முதலாகத் திருக்கோவலூர் வட்டத்தில் 'தாழனோடை' என்னும் சிறு துணையாறு வந்து கெடிலத்தோடு தென்கரையில் கலக்கிறது. இந்தக் கலப்பு, விழுப்புரம்—விருத்தாசலம் புகைவண்டிப் பாதையிடையே, பரிக்கல் நிலையத்திற்கும் உளுந்தூர்ப்பேட்டை நிலையத்திற்கும் இடையேயுள்ள பாதூர்ப் புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கே 2 கி. மீ. தொலைவு அளவில் மாறனோடை என்னும் ஊருக்கருகில் நிகழ்கிறது. இந்த ஆற்றின் நீளம் ஏறக்குறைய 20 கி. மீ. ஆகும். இதன் இடையேயும் ஒரு சிறிய அணை உள்ளது. இந்த ஆற்றுக்குச் 'சேஷ நதி' என்ற பெயரும் உண்டு.

**மலட்டாறு :**

அடுத்து, திருக்கோவலூருக்குக் கிழக்கே 6 கி. மீ. தொலைவில் வீர மடை, சித்தலிங்க மடம் என்னும் ஊர்களுக்கருகில், தென்பெண்ணை யாற்றிலிருந்து ஒரு சிற்றாறு பிரிந்து வந்து, தென் கிழக்காக 35 கி. மீ. தொலைவு ஓடி, கடலூர் பண்ணுருட்டி வட்டத்தில் அப்பர் பிறந்த திருவாமூருக்கு மேற்கே மிக அண்மையில் கெடிலத்தின் வடகரையில் அதனோடு கலக்கிறது. மலட்டாறு என்னும் பெயரைக் கொண்டு, நீர் இல்லாத ஆறு என்று எண்ணுவது பழைய கதை. பிற்காலத்தில் பெண்ணையாற்றில் அணை கட்டப்பட்டிருப்பதால் பெண்ணையாற்றிலிருந்து ஓரளவு தண்ணீர் மலட்டாற்றிற்குக் கிடைக்கிறது. இந்த மலட்டாறு, 16 கி. மீ. தொலைவு ஓடி, 4,400 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியும் செய்துகொண்டு இறுதியில் கெடிலத்தோடு கலக்கிறது.

**துணைக் கால்வாய்கள் :**

இவ்வாறாகக் கெடிலத்தோடு இரண்டு துணையாறுகள் வந்து கலப்பதன்றி, இடையிடையே கால்வாய்கள் பலவும் வந்து கலக்கின்றன. அவற்றின் பெயர்களாவன:—தாமல் கால்வாய், மல்லிகா ஓடை, மாறனோடைக் கால்வாய், நாவலோடை,

இராகவன் வாய்க்கால், நரியன் ஓடை, இலந்தை மேட்டான் ஓடை, ஆண்டிக் குப்பம் ஓடை, நடுவீரப்பட்டு வாய்க்கால் முதலியனவாம்.

துணைக் கால்வாய்கள் கெடிலத்தோடு வந்து சேர்வது போலவே, ஆற்றின் அணைகளிலிருந்தும் ஆற்றிலிருந்து நேரடியாகவும் பல கிளைக் கால்வாய்கள் பிரிந்து பாசனத்திற்குப் பயன்படுகின்றன. தான் பெறுஞ் செல்வங்களைப் பிறர்க்கு வாரி வாரி வழங்கிவிட வேண்டுமல்லவா? கிளைக் கால்வாய்க்கு ஓர் எடுத்துக்காட்டாக, 'சேந்த மங்கலத்தான் ஓடை' என்பதைக் கொள்ளலாம்.

இவ்வாறாக, கெடிலம், மையனூரிலே தோன்றித் தன் பயணத்திடையே போக்கும் வரவும் புணர்வும் உடையதாய்த் திகழ்கிறது.

---

## 4. கெடிலத்தின் முடிவு

**திரிசூலம் :**

திருவயிந்திரபுரத்துக்கும் கடலூர்ப் புதுப்பாளையத்திற்கும் நடுவே நான்கு திசையாற்றத் திருப்பங்களைப் பெற்றுள்ள கெடிலம் புதுப்பாளையத்திலிருந்து கிழக்கு நோக்கி 3 கி. மீ. தொலைவு ஓடிக் கடலில் கலக்கிறது. கடலில் கலப்பதற்கு முன்னால், கெடிலத்திலிருந்து வடக்கு நோக்கி ஒரு கிளையும் தெற்கு நோக்கி ஒரு கிளையுமாக இரண்டு கிளைகள் பிரிகின்றன. இந்த வகையில் கெடிலத்தின் தோற்றத்திற்குத் திரிசூலத்தை ஒருவாறு ஒப்பிட்டுக் கூறலாம். இதனால் கெடிலம் மூன்று இடங்களில் கடலோடு கலப்பதைக் காணலாம்.

**வடகிளை :**

கெடிலத்தின் வடகிளை அவ்வளவு சிறப்பானதன்று; அது தேவனாம்பட்டினத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டு கடலில் கலக்கிறது. கெடிலத்தின் முக்கிய நடுப் பகுதிக்கும் அதன் வடகிளைக்கும் நடுவே தீவுபோன்ற தரைப்பகுதி அமைந்துள்ளது. அதிலேதான் தேவனாம்பட்டினம் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரின் கிழக்கே கடலும், தெற்கே கெடிலமும், மேற்கிலும் வடக்கிலும் கெடிலத்தின் வடகிளையும் இருக்கக் காணலாம். இந்தத் தேவனாம்பட்டினத் தீவில் கடற்கரையை யொட்டிக் கெடிலத்தின் வடகரையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க 'செயின்ட் டேவிட் கோட்டை' பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. இதுபற்றி வேறோரிடத்தில் விளக்கம் காணலாம்.



**முக்கிய நடுப் பகுதி :**

செயின்ட் டேவிட் கோட்டைக்கு வெகு அண்மையில்தான் கெடிலத்தின் முக்கிய நடுப்பகுதி கடலோடு கலக்கிறது. ஆறு



கெடிலத்தின் முகத்துவாரம்

கடலோடு கலக்கும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியை மேலுள்ள படத்தில் கண்டுகளிக்கலாம்.

படத்தில் தொலைவில் வெண்மையாய்த் தெரிவது கடல் அலை. அதற்கு முன்னால் இருப்பது கெடிலம் ஆறு. ஆறும் கடலும் கலக்கும் இடத்தில் அலைமோதுவதைக் காணலாம்.

கெடிலத்தின் இந்த முகத்துவாரத்தை யொட்டியுள்ள சூழ்நிலை மிகவும் இனிமையானது. மாலை வேளையில மக்கள் வந்து இன்பப் பொழுதுபோக்குவதற்கு ஏற்ற இடம் இது. பணத்தைப் பாராமல் செலவுசெய்து சீர்திருத்தினால், சென்னை மெரினா கடற்கரையைப் (Beach) போல இதுவும் குறிப்பிடத்தக்க ஒரு கடற்கரையாகக் காட்சியளிக்கும். சென்னை மெரினா போல இங்கே நீளம் இல்லையெனினும் அகன்ற மணற்பரப்பு ஓரளவு உண்டு. இந்தக் கடலூர்க் கடற்கரையில் கெடிலம் ஆறு கடலோடு கலப்பது, சென்னை மெரினா கடற்கரைக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பாகும். சென்னை மெரினாவில் காற்றுமட்டுந்தான் வாங்கலாமேயொழியக், கடலோடு ஆறு கலக்கும் கண்கவர் காட்சியும், சோலைகள் நிறைந்த சூழ்நிலையும் இல்லை. மொத்தத்தில் இக் கடற்கரையின் அமைப்பு, இங்கிலாந்து நாட்டில் உள்ள 'கவுண்டி கடற்கரை' போன்றதெனப் புகழப்படுகிறது.

மாலை வேளையில் இக் கடற்கரைக் காட்சியையும் காற்றையும் நுகர ஒரு சிலரே கடலூர் நகரிலிருந்து வருகின்றனர். பலர் திரண்டு வராததற்குக் காரணம், நகரக் குடியிருப்புப் பகுதிகளினின்றும் இரண்டு மூன்று கி. மீ. தொலைவு கடற்கரை தள்ளியிருப்பதே. மாலை வேளையில் கடற்கரைக்கு நிரம்பப் பேருந்து வண்டிகள் (டவுன் பஸ்) விடுவதன் வாயிலாக இக் குறையைப் போக்கலாம். இதை யார் செய்வது? நாம் இங்கிலாந்திலுள்ள கவுண்டி கடற்கரைக்குப் போக வேண்டியதில்லையே! நம் நாட்டிலேயே இயற்கையாய் அமைந்திருக்கும் இந்த வசதியை நன்கு பயன்படுத்திக்கொள்ளலாமே! இதற்கு முயற்சி நடைபெறாமலும் இல்லை. கடலூர் நகராண்மைக் கழகம் 1938 ஆம் ஆண்டில் கடற்கரையில் மின்விளக்குப் போட்டும் பூங்கா அமைத்தும் சில ஏற்பாடுகளைச் செய்தது. ஆயினும் இந்தச் சீரமைப்பு தொடர்ந்து போற்றப்படவில்லை. இனி



யினும் தக்க சீர்திருத்தங்களைச் செய்து போதிய பேருந்து ண்டிகளை விட்டால், பொதுமக்கள் கடலூர்க் கடற்கரையைக் கவிடாமல் அதற்கும் பெருமையளித்துத் தாமும் பயன்பெறுவர். ன்றாவது ஒருநாள் இது நடந்தேதீரும்.

**தென்கிளை:**

கெடிலத்தின் போக்கில், கடற்கரைக்கு மேற்கே சிறிது தொலைவில் கெடிலத்திலிருந்து தெற்குநோக்கிப் பிரியும் கிளைதான் மிகமிக இன்றியமையாதது. இந்தக் கிளை 'உப்பனாறு' என அழைக்கப்படுகிறது இது கெடிலத்திலிருந்து பிரிந்து தெற்கு நோக்கி 4 கி. மீ. தொலைவு ஓடிக் கடலூர் முதுநகர் (Cuddalore O.T) என அழைக்கப்படும் கூடலூருக்கு அருகில் கடலோடு கூடுகிறது. இந்தத் தென்கிளையில் படகுப் போக்கு வரவு உண்டு. கெடிலத்தின் பிரிவாகிய இந்த உப்பனாற்றுப் பகுதிதான் கூடலூர்த் துறைமுகம் என அழைக்கப்படுகிறது. கூடலூர் நகரம் இந்த உப்பனாற்றின் மேற்குக் கரையில் உள்ளது.

**கழிமுகத் தீவு—அக்கரை:**

கிழக்கே உப்பனாற்றிற்கும் கடலுக்கும் நடுவில் ஒரு தீவு இருக்கிறது. இந்தத் தீவிற்குக் கிழக்கு எல்லையாகக் கடலும், வடக்கு எல்லையாகக் கெடிலத்தின் முக்கிய நடுப்பகுதியும், மேற்கு தெற்கு எல்லைகளாகக் கெடிலத்தின் தென்கிளையாகிய உப்பனாறும் அமைந்துள்ளன. இந்தக் கழிமுகத்தீவு 'அக்கரை' என மக்களால் அழைக்கப்படுகிறது. இந்த அக்கரைத்தீவில் சோணங்குப்பம், சிங்காரத்தோப்பு, கோரி என்னும் மூன்று சிற்றூர்கள் உள்ளன. இந்தத் தீவு சென்று காணத்தக்கதாகும். தீவிற்குச் சென்றுவரப் படகுப் போக்கு வரவு உண்டு.

**கூடல்—முகத்துவாரம்:**

கெடிலத்தின் காட்சிகளுள் மிகச் சிறந்த தலையாய காட்சி, கெடிலத்தின் தென்கிளையாகிய உப்பனாறு கடலோடு கூடும்

முகத்துவாரக் காட்சிதான்! ஆறு கடலோடு கூடும் இந்தக் கூடல், வரலாற்றில் குறிப்பிடத்தக்க கூடலாகும். இந்தக் கூடலினால்தான் இதன் அருகில் அமைந்துள்ள நகருக்குக் ‘கூடலூர்’ என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகிறது. இந்தக் கூடலூர் என்னும் பெயர்தான் கடலூராக மாறியிருக்க வேண்டும் எனவும் எண்ண இடமளிக்கிறது. கூடல் என்றால் ஒரு கூடல் அன்று; இரண்டு கூடல் அன்று; இங்கே நான்கு கூடல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவையாவன :

கெடிலத்தின் தென்கிளையாகிய உப்பனாறு கடலோடு கலக்கும் இடத்தில், தெற்கேயுள்ள சிதம்பரம் வட்டத்திலிருந்து பரவனாறு என்னும் ஓர் ஆறு வந்து உப்பனாற்றோடு சேர்ந்து கடலில் கலக்கிறது. எனவே, உப்பனாறு கடலோடு கூடுவது ஒரு கூடல்; பரவனாறு கடலோடு கூடுவது இரண்டாவது கூடல்; உப்பனாறும் பரவனாறும் தமக்குள் கூடுவது மூன்றாவது கூடல்; உப்பனாறும் பரவனாறும் இணைந்தபடியே கடலோடு கூடுவது நான்காவது கூடல் – என நான்கு கூடல்கள் நிகழ்கின்றன. சுருக்கிச் சொன்னால், இந்த நான்கு கூடல்களும் ஒரே கூடல் தான்; அஃதாவது, உப்பனாறும் பரவனாறும், ஒரே இடத்தில் இணைந்து கடலோடு கலக்கின்றன.

ஆறுகள் கூடும் இடத்திற்கு நேரே சிறிது தொலைவில் கப்பல்கள் நின்றுகொண்டிருப்பதைக் காணலாம். கூடலூர்த் துறைமுகத்தில் படகுகள் சரக்குகளை ஏற்றிக்கொண்டு உப்பனாற்றின் வழியாகக் கடலுக்குள் புகுந்து கப்பலில் சரக்குகளை இறக்கும்; அதேபோல், கப்பலிலிருந்து சரக்குகளையேற்றிக் கொண்டு கடலிலிருந்து உப்பனாற்றுக்குள் புகுந்து வந்து உப்பனாற்றங்கரையிலுள்ள துறைமுகத்தில் சரக்குகளை இறக்கும். இந்த ஏற்றுமதி இறக்குமதிப் பணிகளில் பரவனாற்றுக்குப் பங்கு கிடையாது; அதில் ஒன்றும் நிகழவில்லை.

---

# 5. கெடிலத்தின் தொன்மை

## கெடிலத்தின் தொன்மை:

கள்ளக்குறிச்சி வட்டத்தில் தோன்றிக் கடலூர்க் கடற்கரையில் துறைமுகப் பெருமையுடன் முடியும் கெடிலம் ஆறு வரலாற்றுக் காலத்துக்கும் அப்பாற்பட்ட தொன்மை உடையதாகும். இதற்குப் பல சான்றுகள் கூற முடியும்.

## கழிமுகத்தீவு (Delta):

கெடிலம் கடலோடு கலக்கும் முக்கிய முகத்துவாரத்திற்கு மேற்கே சிறிது தொலைவில் கெடிலத்திலிருந்து வடபுறமாக ஒரு கிளை பிரிந்து கடலில் கலப்பதாகவும், தென்புறமாக ஒரு கிளை பிரிந்து சென்று கடலில் கலப்பதாகவும், தென் கிளையாகிய உப்பனாற்றில்தான் கூடலூர்த் துறைமுகம் அமைந்திருப்பதாகவும், கெடிலத்திற்கும் அதன் வடகிளைக்கும் நடுவே தேவனாம் பட்டினத் தீவு இருப்பதாகவும், கெடிலத்திற்கும் தென்கிளைக்கும் நடுவே அக்கரை எனப்படும் கழிமுகத்தீவு இருப்பதாகவும் முன்பு அறிவிக்கப்பட்டுள்ளன. இப்படி ஓர் ஆறு கடலில் கலப்பதற்கு முன்னால் அதிலிருந்து கிளையாறுகள் பிரிவதும் அவற்றிற்கும் கடலுக்கும் இடையே கழிமுகத் தீவுகள் ஏற்படுவதும் அந்த ஆற்றின் மிகுந்த தொன்மையை (பழைமையை) அறிவிக்கின்றன என்று புவியியல் ஆராய்ச்சியறிஞர்கள் (geologists) கூறுகின்றனர். பல்லாயிரம் ஆண்டுகளாக ஆற்றில் அடித்துக் கொண்டு வரப்படும் பொருள்கள் முகத்துவாரத்தில் படியப்படிய, அந்தப் படிவுகளால் முகத்துவாரப் பகுதி மேடிடுகிறது; அதனால் ஆறு நேரே சென்று கடலில் கலப்பதற்குத் தடையேற்படுகிறது; அதனால் ஆறு கடலில் கலக்கும் இடத்திற்கு முன்னால் அதிலிருந்து கிளைகள் பிரிந்து வேறு இடங்களில் கடலில் கலக்கின்றன. அதனால் கழிமுகத் தீவுகள் ஏற்படுகின்றன. இந்த அமைப்பினைக் கொண்டு ஆற்றின் தொன்மையை அறிந்துகொள்ளலாம்.

மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி மேற்கு நோக்கி விரைவாக ஓடி அரபுக் கடலில் விழும் ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களில் கழிமுகத் தீவுகள் இல்லாமை இவண் குறிப்பிடத்தக்கது. மலை உயரத் தொடங்கியபின் நெடுங்காலத்திற்குப் பின்னால் இந்த ஆறுகள் தோன்றியதால், இவற்றிற்கு இன்னும் கழிமுகத் தீவுகள் ஏற்படவில்லை. எனவே, இந்த ஆறுகள் காலத்தால் மிகவும் பிற்பட்டவை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆற்றின் படிவு, பள்ளத்தாக்கு, அரிமானம், அரிமானச்சுற்றின் இளமை—முதிர்ச்சி—முதுமை நிலைகள், மேடு, திட்டு, தேய்வு முதலிய அமைப்புகளைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் மேற்கூறிய முடிவுகளைத் தெரிவித்துள்ளனர். இந்த ஆராய்ச்சியின்படி பார்க்குங்கால், கழிமுகத்தீவுகளைப் பெற்றுள்ள கெடிலம் ஆற்றின் தொன்மை நன்கு புலப்படும்.

**மரக்கல் (Wood Fossil) :**

கெடிலத்தின் தொன்மைக்கு மேலும் ஒரு சான்று கூறவியலும். கடலூருக்கு அண்மையிலுள்ள பாதிரிக்குப்பம் என்னும் சிற்றூரைச் சேர்ந்த முத்தால் நாயுடு என்னும் முதியவர், தம் இளமைப் பருவத்தில், அப்பர் கரையேறின பழைய கெடிலக் கரைப் பகுதியில் மண்தோண்டும் வேலையில் ஈடுபட்டிருந்த போது, கல்லாக மாறிய மரப்பகுதிகள் மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கக் கண்டதாகக் கூறினார் என்னும் செய்தி ஈண்டு அறியத்தக்கது.

கல்லாக மாறிய மரத்தைப் பார்த்தால் வெளித் தோற்றத்திற்கு மரம் போலவே இருக்கும்; ஆனால் உள்ளமைப்பு கல்லாக இருக்கும். கல்லாக மாறிய மரம் பன்னூறாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முற்பட்டதாக இருக்கவேண்டும் எனப் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நிலக்கரியின் வரலாறும் இது போன்றதுதானே! மரங்கள் புயலாலும் வெள்ளத்தாலும் புவி நடுக்கத்தாலும் கீழே விழுந்து, பன்னூறாயிரக் கணக்கான ஆண்டுகளாக மண்ணுக்கு அடியிலே கிடந்து மடிந்து மலைக்கல் போல் இறுகி மாறியதுதானே நிலக்கரியென்பது? நிலக்கரி தன்



ற்றாநிலை முற்றியநிலை ஆகியவற்றைக் கொண்டு பழுப்பாகவோ றுப்பாகவோ இன்னும் வேறு விதமாகவோ இருக்கிறது. ஆனால், மரக்கல் (Wood Fossil) மரத்தின் நிறமாகவோ கற் றையின் நிறமாகவோ இருக்கிறது. நிலக்கரி எரியும்; ரக்கல் எரியாது.

தமிழ்நாட்டில் சிலவிடங்களில் கல் மரங்களைக் காணலாம். புதுச்சேரிக்கு வடமேற்கே 21 கி. மீ. தொலைவில் செஞ்சியாறு எனப்படும் சங்கராபரணி ஆற்றங்கரையில் திருவக்கரை என்னும் ஊர் ஒன்று உள்ளது. இது திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடல் பெற்ற திருப்பதி. இவ்வூரையொட்டிச் சங்கராபரணி ஆற்றங்கரையில் பல கல் மரங்கள் படுத்துக் கிடப்பதை இன்றும் காணலாம். பார்ப்பதற்கு மரங்கள் போலவே இருக்கும். மரங்கள் போலவே என்றென்ன—மரங்களே! வேர்கள், பட்டைகள், பட்டைகளின் சுருக்கம், பெருங் கிளைகள், சிறு கிளைகள், காம்புகள், இலைகள், இலை நரம்புகள் முதலிய பல்வேறு உறுப்புக்கள் உட்பட அடிமரத்திலிருந்து நுனிமரம் வரையும் அப்படியே முழு மரத்தையும் ஒருசேரக் காணலாம். ஆனால், அவ்வளவும் கல்பாய்ந்த மாற்றம்! கல்லோடு நமக்குத் தொடர்பு எவ்வளவோ அவ்வளவே இம் மரத்தோடும்! இப்படிக் கிடக்கும் மரங்கள் இரண்டல்ல—மூன்றல்ல! பற்பல—பலப்பல! நூற்றுக் கணக்கில் என்றுங் கூறலாம்; 'படுத்துறங்கும் கல் மரக்காடு!' என்று புனைந்துரைக்கலாம்.

இந்தக் காட்சியைக் கடந்த முப்பது ஆண்டுகளில் நான் பலமுறை பார்த்துச் சுவைத்திருக்கிறேன். ஆனால், ஆனந்த விகடன் 4-9-1966 இதழில் (பக்கம்-19) திரு டி. எம். வீரராகவன் என்னும் பெரியார் எழுதியுள்ள ஒரு கட்டுரையைப் படித்தபோது ஒரு புதிய செய்தியைத் தெரிந்துகொண்டேன். அது வருமாறு:

“இங்கே கல் மரக்காடு எப்படி வந்தது தெரியுமா?

“இந்த மரங்களைப் பார்த்த பூகர்ப்ப நிபுணர்கள் ‘ஒக்’ மரம் என்கிறார்கள். ஒவ்வொன்றும் பிரமாண்டமான நீளம் இருக்கிறது. இங்கிலாந்தில் பூகம்பம் ஏற்பட்டு, ஒக் மரங்கள் பூமியில்

அழுங்கிப் போய், பின்னர், திருவக்கரையில் வெளி வந்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்."

இஃது ஆனந்த விகடன் கட்டுரைப் பகுதி. இதைப் படித்த போது புராணங்களிலும் மாயாசாலக் கதைகளிலும் வரும் நிகழ்ச்சிகளைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. இதே மாதிரியில் ஓர் அணுகுண்டை ஆனந்த விகடன் 21-8-1966 இதழிலும் கண்ணுற்றேன். அந்த இதழில் (பக்கம்-14) திரு. அமு நாரா என்பவர், 'மரம் கல்லானது' என்னும் தலைப்பில் படத்துடன் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அது, நான் பார்த்தறியாத புதிய செய்தி. அரியலூருக்கு அருகில் சாத்தனூர் என்னும் சிற்றூரில் ஓர் ஓடையின் குறுக்கே, 16 அடி நீளமும் 4 அடி சுற்றளவும் கொண்டு வேர்கள், கிளைகள் முதலிய உறுப்புக்களுடன் ஒரு பெரிய முழுக் கல் மரம் விழுந்து கிடக்கிறதாம். அம் மரத்தை இந்தியப் புவியியல் (பூகர்ப்ப) மாணவர்களும், அமெரிக்கா, ஆசுதிரேலியா, இங்கிலாந்து, பிரான்சு, சப்பான் முதலிய அயல்நாட்டுப் புவியியல் வல்லுநர்களும் வந்து பார்த்துவிட்டு மூக்கின்மேல் விரல் வைத்து வியக்கின்றனராம். அதற்குக் காரணமாக அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், தென்னிந்தியா கடலாக இருந்த சமயம் கரையில் இருந்த இம் மரம், கடல் அலைகளால் கடலில் அமிழ்ந்து நாளாவட்டத்தில் மண்ணில் புதைந்து கல்லாக மாறிவிட்டதென்று பூகர்ப்ப நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இப் பகுதி கடலாக இருந்தது என்பதற்கு அடையாளமாக இப் பகுதியில் கடல்வாழ் உயிரினங்களின் அபூர்வமான மண்டை ஓடுகளும் எலும்புகளும் காணப்படுகின்றன."

இஃது அக் கட்டுரைப் பகுதி.

கல் மரங்கள் திருவக்கரையில் ஆற்றங்கரையிலும் சாத்தனூரில் ஓடைப்பகுதியிலும் இருப்பதைக் கொண்டும் அவற்றின் தோற்றத்தைப் பற்றிப் புவியியல் வல்லுநர்கள் கூறியிருப்பதாக ஆனந்தவிகடனில் வந்துள்ள கட்டுரைப் பகுதியைக் கொண்டும்



இத்தகைய மாற்றங்கள் ஆற்றங்கரைகளிலும் கடற்கரைகளிலும் நிகழக்கூடும்' என நாம் ஒருவாறு நுனித்துணரலாம். இதைத் தெளிவு செய்துகொள்ள ஒரு துணைநாடி ஐக்கிய அமெரிக்காவுக்குச் (U. S. A.) செல்வோம்.

ஐக்கிய அமெரிக்காவின் மேற்குப் பகுதியாகிய கலிபோர்னியா, அரிசோனா ஆகிய இடங்களில் கல்மரக் காடுகளைக் காணலாம். அரிசோனா (Arizona) மாநிலத்தில் "ஃஆல்புருக்" (Holbrook) ஓடைப் பகுதிக்குக் கிழக்கே 34 கி. மீ. தொலைவில் 90,000 ஏக்கர் பரப்பில் 3 கல்மரக் காடுகள் காக்கப்பட்டு வருகின்றன. ப அடி குறுக்கு விட்டமும் 100 அடி நீளமும் கொண்ட கல்லாக மாறிய அடிமரங்கள் பல உள்ளனவாம் அங்கே. இத்தகைய கல்மரங்களின் தோற்றத்தைப்பற்றி இந்தத் (Petrification) துறையில் வல்ல அறிஞர்கள் தொகுத்துக் கூறியுள்ள கருத்துக்களாவன:

'மேட்டுப் பகுதிகளில் தோன்றி வளர்ந்து வந்த மரங்கள் ஓடைகளாலும் ஆறுகளாலும் இழுத்துக்கொண்டு வரப்பட்டுக் கரைப் பகுதிகளில் ஒதுக்கப்பட்டன. அவை நாளடைவில் மண்ணில் புதைந்து சில சூழ்நிலைகளால் கல்லாக இறுகிவிட்டன. அம் மரங்களின் உயிர் அணுக்களினிடையே, மண்ணுக்குள் உள்ள சிலிகா (Sillca) கரைசல் படிவு புகுந்து கல்போல் இறுக்கி விடுகின்றன. பின்னர் நாளடைவில் மேலேயுள்ள மண் பகுதி கரைந்து கரைந்து நீங்கிப் போக, உள்ளிருந்த கல் மரங்கள் வெளித்தோன்றிவிட்டன. இவ்வாறு கல்லாகிய மரங்கள் ஏறக்குறைய 16 கோடி (16,00,00,000) ஆண்டுகட்கு முன் தோன்றியிருக்க வேண்டும்.

இப்படியாக அறிஞர்கள் கூறியுள்ளனர். மரங்களைப் போலவே, மீன், தவளை முதலிய உயிரினங்களும் கல்லாக மாறுவதுண்டு. இஃது ஆங்கிலத்தில் 'பாலியாந்தாலஜி' (Paleontology) என அழைக்கப்படுகிறது. உயிரினங்களின் உடம்பிலுள்ள உயிர் அணுக்களுக்குள்ளே 'கால்சியம் கார்பனேட்' (Calcium Carbonate) சிலிகா கரைசல் படிவு (Sillca Deposits)

போன்றவை புகுந்து கல்லாக இறுக்கி விடுகின்றனவாம். இவ்வாறு கல்லாக மாறிய உயிரினங்கள் 45 கோடி (45,00,00,000) ஆண்டுகட்கு முன் தோன்றியிருக்கக் கூடுமாம். கடற்கரைப் பகுதிகளில் இது நடக்கக் கூடும்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் ஆராயின், திருவக்கரையிலுள்ள கல்மரங்கள் இங்கிலாந்திலிருந்து வந்தவை எனக் கொள்ளவேண்டியதில்லை. மிகப் பழங்காலத்தில் தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்த மரங்களே அவை. மேற்குப் பகுதியிலிருந்து ஆற்று வெள்ளத்தால் அவ்வப்போது அடித்துக் கொண்டு வரப்பட்டவையாக இருக்கலாம். அல்லது, திருவக்கரைக்குக் கிழக்கே 16 கி. மீ. தொலைவில் இப்போது இருக்கும் கடல், அந்தக் காலத்தில் திருவக்கரைப் பக்கமாக இருந்திருக்கலாம். கடற்பெருக்காலும் கரைப் பகுதியிலுள்ள மரங்கள் சாய்க்கப்பட்டு மண்ணுக்குள் மறைந்து இறுக்கம் பெற்றிருக்கலாம். பின்னர்க் கடல் சிறிது சிறிதாகக் கிழக்கே தள்ளிப் போய்விட்டிருக்கலாம். திருவக்கரை, அதை அடுத்துள்ள சேதராப்பட்டு முதலிய இடங்களில் மீன் போன்ற உயிரினங்கள் இறுகிக் கல்லாக மாறியுள்ள உருவங்களும் கிடைக்கின்றன. இதனால், அந்தப் பகுதி மிகப் பழங்காலத்தில் கடல் சார்ந்ததாயிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அரியலூருக்கு அருகில் சாத்தனூர் ஓடையில் காணப்படும் கல்மரம்பற்றியும் இது போன்ற கருத்துதான் சொல்லப்பட்டுள்ளது; அஃதாவது இலட்சக்கணக்கான ஆண்டுகட்கு முன் அந்தப்பகுதி கடலாக இருந்தபோது அந்த மரம் வீழ்த்தப்பட்டு மண்ணுக்குள் மறைந்து இறுகியிருக்கவேண்டும் என்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதுகாறுங் கூறியவற்றால், ஆற்று வெள்ளப் பெருக்காலோ அல்லது கடலின் சீற்றத்தாலோ ஆற்றங்கரைகளில் அல்லது கடற்கரைகளில் கல்மரங்கள் உருவாகும் என்பதும், கல்லாக மாறியுள்ள அம் மரங்கள் நூறாயிரக்கணக்கான—ஏன், கோடிக்கணக்கான ஆண்டுகட்கு முன்தோன்றியிருக்க வேண்டும் என்பதும் புலப்படும்.



இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் கெடிலத்தின் தொன்மையை நாம் கவனிக்கமுடியும். கெடிலம் திசை மாற்றம் அடைவதற்குமுன், திருப்பாதிரிப் புலியூருக்குத் தெற்கே ஓடிய பழைய ஆற்றுப் பாதைப் பகுதியில்—அஃதாவது, அப்பர் கரையேறிய பகுதிக்குப் பக்கத்தில், மண்ணுக்கு அடியில் கல்மரத் துண்டங்கள் காணப்பட்டதாக முத்தால் நாயுடு என்னும் முதியவரால் அறிவிக்கப்பட்டுள்ள செய்தியை இங்கே இணைத்துக்கொள்ள வேண்டும். கெடிலக்கரைப் பகுதியிலும் கல்மரத் துண்டங்கள் காணப்படுகின்றனவென்றால், அந்த ஆறு பல கோடி ஆண்டுகட்குமுன் தோன்றியதாக இருக்க வேண்டும். கோடிக்கணக்கில் ‘படி மரக்கால்’ போட்டு அளக்க மனம் ஒவ்வா விடினும் பல நூறாயிரக் (இலட்சக்) கணக்கான ஆண்டுகட்கு முற்பட்டது கெடிலம் என்பதையாவது ஏற்றுக்கொள்ளலாம். பல நூறாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன் கெடிலம் ஆற்றால் அடித்துக்கொண்டு வரப்பட்டு ஒதுக்கப்பட்ட மரங்கள் அந்தப் பகுதியில் மண்ணுக்குள் மறைந்து, நாளடைவில் சிலிகா கரைசல் படிவால் இறுக்கம்பெற்றுக் கல்லாகிவிட்டிருக்க வேண்டும். மண் தோண்டும்போது இந்தக் கல்மரத் துண்டங்கள்தாம் முத்தால் நாயுடு முதலிய தொழிலாளர் கண்களில் தென்பட்டுள்ளன. எனவே, வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்தில் தோன்றியது கெடிலம் என்பது உறுதி.

---

# 6. இலக்கியத்தில் கெடிலம்

**பாடல்பெற்ற கெடிலம் :**

ஒருவரோ, ஓர் இடமோ ஒரு பொருளோ அல்லது ஒரு நிகழ்ச்சியோ மக்களது பேச்சில் மட்டுமின்றி ஏட்டிலும் இடம் பெற்றுவிடின் ஒரு தனி மதிப்புதான்! ஏட்டிலும், உரை நடையினும் செய்யுள் நடைக்குச் சிறப்பு மிகுதி; செய்யுள் நடையிலும் பழங்காலச் செய்யுட்களில் சிறப்பிடம் பெற்றிருப் பின் மிகவும் பெருமை உண்டு. இந்த அடிப்படையில்தான், நாயன்மார்கள் ஆழ்வார்களின் பாடல் பெற்ற பதிகள் மிக்க பெருமைக்கு உரியனவாய்ப் போற்றப்பெற்று வருகின்றன. ஊர்களேயன்றி ஆறுகளும் பாடல் பெற்றிருக்குமாயின் மிக்க பெருமைக்கு உரியனவே. இவ்வாறு பாடல் பெற்ற பெருமை கெடிலம் ஆற்றுக்கும் உண்டு. பழைய சங்க இலக்கியங்களில் இடம் பெறும் வாய்ப்புக் கெடிலத்திற்குக் கிடைத்திராவிடினும், சங்க காலத்தையடுத்த தேவாரத்தில் இடம் பெறும் வாய்ப்பு — தேவாரப் பாடல் பெரும் பெருமை கெடிலத்திற்கு உண்டு. இனி, தேவார காலத்திலிருந்து இலக்கியத்தில் கெடிலம் இடம் பெற்றுள்ளவற்றைக் காலவரிசை முறையில் காண்பாம்.

## அப்பர் தேவாரம்

அப்பர் பெருமான் திருவதிகைமேல் பதினாறு பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றுள் எண்பத்தாறு இடங்களில் 'கெடிலம்' என்னும் பெயரைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அவருடைய பாடல் அடிகள் சில வருமாறு :—

**முதல் பதிகம்**

"அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே."

**இரண்டாம் பதிகம்**



"கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்."

**மூன்றாம் பதிகம்**

"செய்ய பொன் உரைத்தெழித் தோன்றிடும் கெடில வாணரே"
"தென்றிசைக் கெங்கைய தெனப்படும் கெடில வாணரே"

"வழிந்திழி மதுகர மிழற்ற மந்திகள்
இழிந்ததேன் நுகர்தரும் கெடில வாணரே"

"ஈண்டுநீர்க் கமலவாய் மேதி பாய்தரக்
கீண்டுதேன் சொரிதரும் கெடில வாணரே."

**நான்காம் பதிகம்**

"வண்டு கொப்பளித்த தீந்தேன்
வரிக்கயல் பருகி மாந்தக்
கெண்டைகொப் பளித்த தெண்ணீர்க்
கெடிலவீ ரட்டனாரே."

**ஏழாம் பதிகம்**

"கெடில வேலி அதிகை வீரட்டனாரே."

**எட்டாம் பதிகம்**

"...பழனஞ்சேர் கழனித் தெங்கின்
மடலைநீர் கிழியவோடி அதனிடை மணிகள் சிந்தும்
கெடில வீரட்ட மேய கிளர்சடை முடியனாரே."

"கந்திரம் முரலுஞ் சோலைக் கானலங் கெடிலத்தாரே."

**ஒன்பதாம் பதிகம்**

"மாசிலொள் வாள்போல் மறியும் மணிநீர்த் திரைத்தொகுதி
ஊசலை யாடியங் கொண்சிறை அன்னம் உறங்கலுற்றால்
பாசறை நிலம் பருகிய வண்டுபண் பாடல்கண்டு
வீசுங் கெடில வடகரைத்தே எங்கள் வீரட்டமே"

"பைங்கால் தவளை பறைகொட்டப் பாசிலை நீர்ப்படுப்பர்
அங்காற் குவளைமேல் ஆலி உயிர்ப்ப அருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ் செறிகெடிலக் கரைத்தே"

"அம்மலர்க் கண்ணியர் அஞ்சனம் செந்துவர் வாயினையார்
வெம்முலைச் சாந்தம் விலைபெறு மாலை யெடுத்தவர்கள்
தம்மருங் கிரங்கார் தடந்தோள் மெலியக் குடைவார்
விம்மு புனற்கெடிலக் கரைத்தே எந்தை வீரட்டமே"

"தூய தெண்ணீர்க் கெடிலக்கரைத் திரு வீரட்டராவர்."

பத்தாம் பதிகம்

"ஆறெலாம் திரையார் ஒண்புனல் பாய் கெடிலக்கரை"

"ஆறுடைப் புனல்பாய் கெடிலக் கரை"

"வரையார்ந்த வயிரத்திரள் மாணிக்கம்
திரையார்ந்த புனல்பாய் கெடிலக்கரை"

பதினோராம் பதிகம்

"வாளமா விழியும் கெடிலக் கரை"

"தெள்ளு நீர் வயல்பாய் கெடிலக்கரை"

"வரைகள் வந்திழியுங் கெடிலக்கரை"

"ஆலி வந்திழியுங் கெடிலக்கரை"

"மூரித் தென்திரை பாய்கெடிலக் கரை"

பன்னிரண்டாம் பதிகம்

"எறிகெடிலத்தானை"

"செழுங் கெடில வீரட்டம் மேவினானை"

"எறி கெடில நாடர்"

பதினான்காம் பதிகம்

"அலை கெடில வீரட்டத் தாள்வாய் போற்றி"

"இருங் கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி"

"கார்க் கெடிலங் கொண்ட கபாலி போற்றி"



பதினைந்தாம் பதிகம்

"திரை விரவு தென்கெடில நாடன்"

"நிறை கெடில வீரட்டம்"

"தெய்வப் புனல்கெடில நாடன்"

"திருந்துநீர்த் தென்கெடில நாடன்"

"கரைமாங் கலிக்கெடில நாடன்"

"செறி கெடில நாடர்"

"தணிபாடு தண்கெடில நாடன்"

பன்னிரண்டாம் பதிகம்

"செல்வப் புனற்கெடில வீரட்டமும்"

"தீர்த்தப் புனற்கெடில வீரட்டமும்"

"சிறையார் புனற்கெடில வீரட்டமும்"

"செழுநீர்ப் புனற்கெடில வீரட்டமும்"

"தேனார் புனற்கெடில வீரட்டமும்"

"திருநீர்ப் புனற்கெடில வீரட்டமும்"

இவை அப்பர் தேவாரப் பாடற் பகுதிகள்.

கெடிலக்கரையிலே பிறந்து கெடிலக்கரையிலே வளர்ந்து கெடிலக் கரையிலே உருவான நாவுக்கரசர் தம் தாய்த்திருக் கெடிலத்தை ஆவல்தீரப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். "கெடிலம் தென்திசைக் கங்கையாம். கெடிலம் பொன் கொழிக்கிறதாம். கெடிலத்தில் வண்டுகள் மிழற்றுகின்றன; எருமைகள் பாய்கின்றன; மலர்கள் தேன் சொரிகின்றன; மந்திகள் தேன் நுகர்கின்றன; கயல்மீன்களும் தேன் மாந்துகின்றன; கெண்டைகள் தேன் கொப்பளிக்கின்றன. ஊருக்கு வேலிபோல் உள்ளது கெடிலம். கரைகளில் சோலைகள் சூழ்ந்துள்ளன; தெங்கின் முற்றிய மணிகள் நீரில் சிந்துகின்றன; ஒள்ளிய வெள்ளிய வாள்போல் நீரில் அலைகள் எழுகின்றன; அந்த அலைகளில் அன்னங்கள் ஊசல் (தொட்டில்) ஆடிக்கொண்டே

உறங்கிவிடுகின்றன; வண்டுகள் தாலாட்டுப்பண் பாடுகின்றன. ஆற்றின் ஒருபால் தவளைகள் பறைகொட்டுகின்றன; நாரைகள் நடமாடுகின்றன; மற்றொருபால், சாந்து பூசிய மாலையணிந்த மங்கையர்கள் இடுப்பு ஒடியத் தோள் மெலியத் தெண்ணீர்ப் புனல் குடைகின்றனர். கெடிலம் மலைப்பகுதியிலிருந்து புறப்பட்டு வருகிறது. மழைபொழிய நீர் திரளுகிறது; மணிவகைகள் அடித்துக்கொண்டுவரப்படுகின்றன. ஆற்றின் செழுமையான செல்வங் கொழிக்கும் நீர்ப்பெருக்கு வயல்களில் பாய்ந்து வளப்படுத்துகிறது. ஆற்றின் இருமருங்கும் கரைகள் உள்ளன. கெடில நீர் ஒரு செல்வப் புனலாகும்—தெய்வப் புனலாகும்—தீர்த்தப் புனலாகும்"—என்றெல்லாம் அப்பர் பெருமான் கெடில ஆற்றின் வளத்தையும் மாண்பையும் வாயாரப் புகழ்ந்துள்ளார். அவர் ஓரிடத்தில் 'திருநீர்ப் புனல் கெடிலம்' என்று கூறியுள்ளார். 'திருநீர்' என்பது, தீர்த்தம் என்னும் வடசொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லாகும்.

அப்பர் பெருமான் தம் பிற்கால வாழ்க்கையில் காவிரி நாட்டில் பன்னெடுங்காலம் கழித்திருப்பினும், தமது வாழ்நாளின் முற்பகுதியைக் கெடில நாட்டிலேயே கழித்தார். அப்பர் என்னும் கட்டடத்தைக் கட்டுவதற்குச் சேறு குழப்பிய தண்ணீர் கெடில ஆற்றின் தண்ணீர்தான். கெடிலத்தை அப்பர் மறந்தாலும், அதைப் பாடுவதற்கு அவர் நா மறவாது—எழுதுவதற்கு அவர் கை மறவாது. அதனால்தான் 'தென்திசைக் கெங்கையதெனப்படும் கெடிலம்' என்று பாடினார். 'தென்கங்கை' என்பதற்கு மேல் என்ன சிறப்பு வேண்டும்?

## சம்பந்தர் தேவாரம்

திருஞான சம்பந்தர் தமது தேவாரத்தில் திருவதிகைப் பதிகத்தில் இரண்டு இடங்களிலும், திருமாணிகுழிப் பதிகத்தில் இரண்டு இடங்களிலுமாக நான்கு இடங்களில் கெடிலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். முறையே அவை வருமாறு:—



திருவதிகைப் பதிகம்:

"கெண்டைப் பிறழ் தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள் பாட..."

"கீதம் உமைபாடக் கெடில வடபக்கம்."

திருமாணிகுழிப் பதிகம்:

"சந்தினொடு காரகில் சுமந்துதட மாமலர்கள்
கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயும்மணி மாருதவி
மாணி குழியே."

"உந்திவரு தண்கெடில மோடுபுனல் சூழுதவி
மாணி குழிமேல்"

கெடிலத்தின் நீர்வளமும் அது பாயும் நிலவளமும் சம்பந்தரால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

## சுந்தரர் தேவாரம்

சுந்தரர் பெருமான் தமது தேவாரத்தில் திருவதிகைப் பதிகத்தில் பாடல்தோறுமாகப் பத்து இடங்களில் கெடிலத்தைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அவற்றுள் சில வருமாறு:—

"இருப்புனல்வந் தெறிகெடில வடவீரட்டானத் துறைவானை"

"ஏந்துநீர் எறி கெடிலம்"

எனச் சுந்தரராலும் கெடிலத்தின் நீர்வளம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

## திருமங்கையாழ்வார் திருமொழி

திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியுள் திருவயிந்திரபுரம்பற்றிய திருமொழியில் இரண்டிடங்களில் கெடிலத்தின் வளத்தைப் புகழ்ந்துள்ளார்; அவை வருமாறு:—

மூன்றாம் பத்து — முதல் திருமொழி :

"வரை வளந்திகழ் மதகரி மருப்பொடு
மலைவள ரகிலுந்தி
திரை கொணர்ந்தணை செழுநதி வயல்புகு
திருவயிந் திரபுரமே"

"...குலவுதண் வரைச்சாரல்
கால்கொள் கண்கொடிக் கையெழக் கமுகிளம்
பாளைகள் கமழ்சாரல்
சேல்கள் பாய்தரு செழுநதி வயல்புகு
திருவயிந் திரபுரமே"

கெடிலம் காட்டு விலங்குகளையும் மணமிக்க மரங்களையும் இன்னபிற மலைவளங்களையும் உந்திக்கொண்டு மலைச்சாரலில் ஓடிவருவதாகவும், கமுகஞ் சோலைகள் சூழ்ந்திருப்பதாகவும், வயல்களில் பாய்ந்து நாட்டை வளப்படுத்துவதாகவும் ஆழ்வார் அறிவித்துள்ளார். திருமங்கைமன்னர் தம் பாடல்களில் 'கெடிலம்' என்னும் சிறப்புப் பெயரால் ஆற்றைக் குறிப்பிடாமல், 'செழுநதி' எனப் பொதுப் பெயராலேயே சுட்டியுள்ளார். ஒரு வேளை, கெடிலம் நதிகளுக்குள் சிறந்தது; எனவே, நதி என்று பொதுவாகச் சொன்னாலும் அது கெடிலத்தையே குறிக்கும் என்று ஆழ்வார் சிறப்பாக எண்ணியிருப்பாரோ என்னவோ! நதியிலும் 'செழுநதி' எனச் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம்

தொல்காப்பியத் தேவர் தமது திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பக நூலில் மூன்றிடங்களில் கெடிலத்தைப் பாடியுள்ளார். அவையாவன :

"ஐயர் திருக்கெடிலம் ஆட்டி" (13)

"கைத்தலத் திருந்த புள்ளிமான் மறியர்
கடிலமா நதியதன் வடபால்" (45)



"முத்தினை முகந்துபவ ளக்கொடியை வாரி
மோதிவரு டண்டலை முறித்துமத குந்தித்
தத்திவரு சந்தன மெறிந்தகி லுருட்டித்
தாமரையு நீலமும ணிந்ததட மெல்லாம்
மெத்திவரு கின்றகெடி லத்து வடபாலே." (100)

தொல்காப்பியத் தேவர், 'திருக் கெடிலம்' எனக் கெடிலத்தின் தெய்வத்தன்மையைச் சுட்டியுள்ளார்; 'கடில மாநதி' என அதற்கு ஒரு பேராற்றின் தகுதி அளித்துள்ளார். கெடிலத்தின் வெள்ளப்பெருக்கு உயர்ந்த மணிவகைகளையும் நறிய மரவகைகளையும் உருட்டிக்கொண்டு வந்து மதகுகளுடன் மோதிச் சோலைக்குள் புகுந்து பொய்கைகளை நிறைத்துச் செல்வ ஆரவாரம் புரிவதாகப் புலவர் பெருமான் புனைந்து பாடியிருப்பது படித்துச் சுவைத்தற்கு இன்பமாயுள்ளது.

## பெரிய புராணம்

சேக்கிழாரின் பெரிய புராணத்தில் கெடிலம் பல பாடல்களில் புகழிடம் பெற்றுள்ளது. அவற்றுள் சில வருமாறு :—

தடுத்தாட் கொண்ட புராணப் பகுதி :

"விரிதிரைநீர்க் கெடிலவட விரட்டா னத்திறை." (84)

"பொன்திரளும் மணித்திரளும்
பொருகரிவெண் கோடுகளும்
மின்திரண்ட வெண்முத்தும்
விரைமலரும் நறுங்குறடும்
வன்திரைகளாற் கொணர்ந்து
திருவதிகை வழிபடலால்
தென்திசையில் கங்கையெனும்
திருக்கெடிலம் திளைத்தாடி." (89)

திருநாவுக்கரசர் வரலாற்றுப் பகுதி:

"நீரார் கெடிலவட நீள்கரையில்." (42)

"திரைக்கெடில வீரட்டானத்திருந்த." (69)

"பூவலர் சோலை மணமடி புல்லப் பொருண் மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடிலத்தைக் கடந்தணைந்தார்" (136)

கெடிலத்தின் நீர்வளத்தையும் அது பொன்னும் மணியும் பொரு கரியின் மருப்பும் மின்னும் வெண்முத்தும் மணம் நாறும் மலர்களும் மரத்துண்டங்களும் உந்தி உருட்டி வருவதையும் பாடி ஆவல் தீர்வதில் சேக்கிழாரும் பின்தங்கவில்லை. 'திருக்கெடிலம்' எனக் கூறி அதன் தெய்வ மங்கலத்தைப் போற்றியுள்ளார். சேக்கிழார்க்குக் கெடிலம் திருக்கெடிலம் மட்டுமன்று— அது செல்வக் கெடிலமாம்—காவல் கெடிலமாம்—காவல் செல்வத் திருக்கெடிலமாம்—இத்துணை அரும் பெரும் பொருள் 'காவல் செல்வத்திருக் கெடிலம்' என்னும் தொடரில் பொதிந்து செறிந்திருப்பதைக் கண்டு மகிழலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அப்பர் பெருமானின் கருத்தை அடியொற்றி, 'தென் திசையில் கங்கையெனும் திருக்கெடிலம்' எனக் கெடிலத்தைக் கங்கையோடு ஒப்பிட்டுப் புகழ்ந்து பெருமை செய்துள்ளார் சேக்கிழார் பெருமான்.

## அருணகிரிநாதர் திருப்புகழ்

அருணகிரிநாதர் தமது முதல் திருவதிகைத் திருப்புகழின் ஈற்றில் பின்வருமாறு கெடிலத்தின் வளப்பெருக்கைப் புனைந்து புகழ்ந்துள்ளார்:

"திரள்கமுகிற் றலையிடறிப் பலகதலிக் குலைசிதறிச்
செறியும் வயற் கதிரலையத் திரைமோதித்
திமிதிமெனப் பறையறையப் பெருகுபுனற் கெடிலநதித்
திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே."

இப் பாடற் பகுதியால் கெடிலக்கரையின் சோலைவளங்களும் வயல்வளங்களும் தெரியவருகின்றன. புதுப்புனல் பெருக்கெடுத்து ஓடிவருகிறதாம்; அப்போது உழவர்கள் 'திம் திம்' 'திமிதிம்' எனப் பறை கொட்டி முழக்குகிறார்களாம். என்ன அழகு! என்ன வியப்பு! கோடை கழியக், கொண்டல் பொழிய ஆற்றில் புதுப்புனல் பெருக்கெடுத்தோடி வரும்போது உழவர்கள் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்துப் பறைமுழக்கிப் பூசனை புரிந்து 'புதுப்புனல் விழா' நிகழ்த்துவது பண்டைய மரபு. அதனைத்தான் இப்பாடலில் அருணகிரியார் அறிவித்துள்ளார்.

புதுப்புனல் பெருக்கெடுத்து ஓடிவரும் மிடுக்கை அப்படியே சொல்லோவியப்படுத்திக் காட்டியுள்ளார் திருப்புகழார். மிடுக்கிற்கேற்ற சந்தம் பாடலில் அமைக்கப்பட்டுள்ளது. இப் பாடலை உரிய சந்தத்துடன் திரும்பத் திரும்பப் பாடுவோமாயின், புதுவெள்ளம் உண்மையிலேயே கமுகின் தலையை இடறுவது போலவும், வாழைக்குலையைச் சிதறுவது போலவும், கதிரை அலைப்பது போலவும், திரை மோதுவது போலவும், 'திமிதிம்' எனப் பறை முழக்குவது போலவும் உணர்ந்து வியந்து மனவெழுச்சி (Emotion) கொள்வோம்.



## திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

இலக்கணம் சிதம்பரநாத முனிவர் தாம் இயற்றிய திருப்பாதிரிப்புலியூர்ப் புராணத்தில் பல இடங்களில் கெடிலத்தைக் குறிப்பிட்டுள்ளார்; சில வருமாறு:

நலவிசிட்டச் சருக்கம்:

"துங்க வாவியே யயிந்திரம் கெடிலமேற் சொல்லும்."

பாடலேச்சுரர் சித்தராய் விளையாடிய சருக்கம்:

"சந்தனத் தருமங்களு மகில்களுஞ் சரளச்
சுந்தரத் தருமங்களுந் தொலைவில் பல்வளனுஞ்
சிந்துரத் தருக்கேசரி வயப்புலித் திரளுங்
கொந்து கொந்தாய்க் கெடிலமா நதிகொணர் தருமால்." (33)

"வரி முத்தமுங் கயமருப் பற்புத மணியும்
வாரி மிக்கெழுங் கெடில மா நதியள்ளி வந்து

வாரி மிக்கபல் கலன்களு மேற்றுதல் மான
வேரி மிக்கநீர்க் காலென வெதிர்தரு மேல்லை.'' (84)

''கெடில மாநதி பாடலேச் சுரனிகே தனத்தின்'' (45)

''கெடில மாநதி சேய்த்ததாய்க் கெழுமுவதன்றி.'' (56)

உயரிய நறிய மரங்களையும் கொடிய காட்டு விலங்குகளையும் விலையுயர்ந்த பல்வேறு மணிகளையும் கெடிலம் உருட்டிக் கொண்டுவந்து கடலிலுள்ள கப்பல்களில் ஏற்றுமதி செய்வது போல் தோன்றுவதாகப் புலவர் புனைந்துள்ளார். இவரும் கெடிலத்தை 'மாநதி' எனச் சிறப்பித்துள்ளார்.

## கரையேற விட்ட நகர்ப் புராணம்

திருப்பாதிரிப் புலியூர்ச் சிவசிதம்பரப் புலவர் அவர்கள் தமது கரையேறவிட்ட நகர்ப் புராணத்தில் கெடிலத்தின் நீர்வளம்பற்றியும் அதனால் நடுநாடு பெற்றுள்ள நிலவளம் பற்றியும் பல இடங்களில் பாராட்டியிருப்பதன்றித், திருநாவுக்கரசரையும் சேக்கிழாரையும் பின்பற்றிக் கெடிலத்தைத் 'தென் கங்கை' எனப் பல இடங்களில் சிறப்பித்துக் கூறியுள்ளார்; அவற்றுள் சில இடங்கள் வருமாறு:

திருநாட்டுப் படலம்:

''......கெடிலமாந் தகைப்பேர்
மேவு தென்றிசைக் கங்கையும் விரிந்துகால் கொண்டே
இவ்வுறுப் பெருவளஞ் செயவொளிர் நடுநாடாம்'' (1)

''விண்ணதிக் கிணையாகவே விளங்கும் ஒண்கெடிலம்
மண்ணதைத் தகைகாத்திடப் பயிரெலாம் வளர்த்தே.'' (8)

தலவிசேடப் படலம்:

''விரைக்கடித்தண் கரையேற விட்டநக ரதுதீர்த்த
வியன்தென் கங்கை'' (1)

''தென்திசையிற் கங்கையெனத் திகழ்கெடிலப்
பூம்புனலே தீர்த்தமாமால்.'' (7)



''வீறுகரை யேற்றுதல விசேடமுமற் றதன்பாலே
விளங்குங் கங்கை
ஆறெனுந் தீர்த்தக் கெடில அற்புதமும் அதற்கருகே
அமர்ந்தன் பர்க்கு......'' (17)

இவ்வாறு இன்னும் பல இடங்களில் கெடிலத்தின் மாண்பு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

## திருவதிகைப் புராணம்

திருவதிகை வாகீசபக்த நாவலர் தாம் இயற்றிய திருவதிகைப் புராணத்தில், கெடிலம் ஆற்றுக்கு என்றே இரண்டு படலங்கள் செலவிட்டுள்ளார்; அவை கெடிலோற்பவப் படலம், தீர்த்த விசேடப் படலம் என்பனவாம். இவரும் கெடிலத்தைக் கங்கையெனக் குறிப்பிட்டு இதன் பெருமையை நாவுக்கரசரும் ஞானசம்பந்தருமே புகழ்ந்துள்ளன ரென்றால் நான் எம்மட்டில் என்று கூறியுள்ளார். இதனைக் கெடிலோற்பவப் படலத்திலுள்ள,

''இத்திரு நதியே கங்கை யிதிற்படிந் தவர்க ளையச்
சுத்தபா யுறுவ ரென்று சொல்லர சறைத லோடு
முத்தராங் காழி வேந்தும் மொழிந்தன ராத லாலே
பத்தியிற் சிறிதி லாயான் பகர்வதுந் தனியே யாமால்''

என்னும் (12) பாடலால் அறியலாம். மற்றும், சிவனது உடலிலிருந்து வியர்வை நீர்போல் வெளிவந்தது கெடிலம் என்றும், இஃது ஓர் உயிர்ப்பு உள்ள அஃதாவது என்றும் வற்றாத (சீவ நதி) உயிர் ஆறு என்றும் இந்நூலாசிரியர் தெரிவித்துள்ளார். இதனைத் தீர்த்த விசேடப் படலத்திலுள்ள,

''கூடிய காலை யாங்கு குலவிய வியர்வை நீரே
நீடிய தீர்த்த மாகி நின்மலக் கெடிலம் என்ன
ஓடிய திதனைச் சீவ நதியென உரைப்பர் கற்றோர்''

என்னும் (2) பாடலால் அறியலாம். இவ்வாறு பல செய்திகள் இப் புராணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இன்னும், திருவதிகை மான்மியம், திருவதிகை உலா, திருநாவலூர்ப் புராணம், திருவாமூர்ப் புராணம், திருமாணிகுழிப் புராணம் முதலிய நூல்களில் கெடிலத்தின் ஆட்சியையும் மாட்சியையும் காணலாம்.

**கெடிலக்கரை இலக்கியங்கள் :**

இலக்கியத்தில் கெடிலம் என்னும் தலைப்பின் கீழே, மேலே, கெடிலத்தைப்பற்றிக் கூறும் பல இலக்கியப் பகுதிகளைக் கண்டோம். இந்த இலக்கியங்களையெல்லாம் கெடிலக்கரை இலக்கியங்கள் என்னும் பொதுப்பெயராலும் குறிப்பிடலாம். இப் பகுதியில் நாட்டுப் பாடல்கட்கும் குறைவில்லை.

**கெடிலக்கரைக் கல்வெட்டுகள் :**

கெடிலக்கரை ஊர்களில் நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள் காணக் கிடக்கின்றன. இவற்றைப்பற்றிய விவரத்தை இந்த நூலின் மூல நூலாகிய "கெடிலக்கரை நாகரிகம்" என்னும் பெயர் கொண்ட எனது பெரிய நூலில் ஓரளவு காணலாம்.

---

## 7. கெடில நாடு

காவிரி பாயும் நிலப்பகுதியைக் 'காவிரி நாடு' 'புனல் நாடு' என்றெல்லாம் வழங்குவது மரபு. அதுபோல், கெடிலம் பாயும் பகுதியைக் 'கெடில நாடு' என்று நாம் வழங்கலாம். இப் பெயர் புதுப்பெயர் அன்று. கெடில நாடு என்னும் பெயரை நம் இருபத்தைந்தாம் தலைமுறையைச் சேர்ந்த பாட்டனார் ஒருவர் முன்னமேயே வைத்துவிட்டுச் சென்றுள்ளார். அவர்தாம் திருநாவுக்கரசர். அவர் தமது தேவாரத்தில் பன்னிரண்டாம் திருவதிகைப் பதிகத்தில் இரண்டிடங்களில் 'கெடில நாடர்' எனவும், பதினைந்தாம் திருவதிகைப் பதிகத்தில் ஏழிடங்களில் 'கெடில நாடன்' எனவும் இறைவனைக் குறிப்பிட்டுள்ளார். 'காவிரி நாடு' என்னும் பெயர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பரால் சோழநாட்டிற்கு இடப்பட்ட பெயராகும். ஆனால், கெடில நாடு என்னும் பெயரோ, ஆறாம் நூற்றாண்டிலேயே நாவுக்கரசரால் கெடிலம் பாயும் பகுதிக்கு இடப்பட்ட பெயராகும்.

எனவே, கெடில நாடு என்பது, காவிரி நாடு என்பதனினும் அறுநூறு ஆண்டுகள் முற்பட்ட பழமையுடைய பெயராகும். இந்தக் கெடில நாடு என்ற பெயருக்கு உரியது முழுவதும் தென்னார்க்காடு மாவட்டமே. கெடிலத்தின் தோற்றம், ஓட்டம், முடிவு அத்தனையும் தென்னார்க்காடு மாவட்டத்திலேயே நிகழ்கின்றன அல்லவா? கெடில நாடு என்னும் பெயர் பொதுவாகத் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு உரியது என்றாலும், சிறப்பாக, தென்னார்க்காடு மாவட்டத்தின் நட்ட நடுவேயுள்ள கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர் ஆகிய மூன்று வட்டங்களும் சேர்ந்த பகுதிக்கே மிகவும் உரித்து. இந்த மூன்று வட்டங்களில் தானே கெடிலத்தின் தோற்றமும் போக்கும் முடிவும் நிகழ்கின்றன? இருப்பினும், வரலாற்று ஆராய்ச்சிக்குள் புகும் நாம் இந்த மூன்று வட்டங்களை மட்டும் தனியே பிரித்து வைத்துப் பார்க்க முடியாது. சுற்றுப் புறச்

ஒழுகலையும் இணைத்தாற்போல், பொதுவாகத் தென்னார்க் காடு மாவட்டம் முழுவதையும் மையமாகக் கொண்டே ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டும்.

**மலையமானாடு :**

தென்னார்க்காடு மாவட்டப்பகுதி சங்ககாலத்தில் 'மலையமானாடு' எனவும் 'மலைநாடு' எனவும், 'மலாடு' எனவும் அழைக்கப்பட்டது. இந்தப் பகுதி அக் காலத்தில் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு மலையமான் என்னும் மரபைச் சேர்ந்த மன்னர்களால் ஆளப்பட்டதால் மலையமானாடு என்னும் பெயர் பெற்றது. பின்னர் மலையமானாடு என்னும் பெயர் சுருங்கி மலாடு என மருவிற்று. இதனை இலக்கண நூலார் 'மரூஉப் பெயர்' என்பர் நன்னூலில்,

> * "இலக்கண முடையது இலக்கணப் போலி
> மரூஉஎன் றாகு மூவகை யியல்பும்......"

என்னும் நூற்பா உரையில், "...மலையமானாடு என்பதனை மலாடு என்றும், சோழ நாடு என்பதனைச் சோணாடு என்றும் .......வருவனவும் இவ்வாற்றான் வருவன பிறவும் மரூஉமொழி' என மயிலைநாதர் எடுத்துக்காட்டி யிருப்பது காண்க. அதே நன்னூலில்,

> † "செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்..."

என்னும் நூற்பாவின் விளக்க வுரையில், செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களின் (நாடுகளின்) பெயர்களைக் கூறுமுகத்தான்,

> "தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி,
> பன்றி, அருவா, அதன்வடக்கு,—நன்றாய
> சீதம், மலாடு, புனனாடு, செந்தமிழ்சேர்
> ஏதமில் பன்னிருநாட் டெண்"

* நன்னூல்—பெயரியல்—10.
† நன்னூல்—பெயரியல்—10.



என்னும் பழைய வெண்பா எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பன்னிரண்டு நாடுகளுள் 'மலாடு' என்பதும் குறிக்கப்பட்டிருப்பது காண்க. 'மலாட்டார் (மலாடு நாட்டார்) தோழியை இகுளை என்று வழங்குவர்' என உரையாசிரியர் மயிலைநாதர் குறிப்பிட்டுள்ளார்.

* 'மலாடர் கோமான்' எனச் சேக்கிழாரும் இப் பெயரை ஆண்டுள்ளார். மலாடு என்னும் பெயர் இலக்கிய இலக்கண நூல்களிலேயன்றி,

'சயங்கொண்ட சோழ மண்டலத்து மலாடான ஜகந்நாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்துத் திருக்கோவலூர்' —

'மிலாடு (மலாடு) ஆகிய ஜனநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்துத் திருக்கோவலூர்'—என்பன போலத் திருக்கோவலூர்க் கல்வெட்டுக்களிலும் ஆட்சி பெற்றுள்ளது. இதிலிருந்து, ஒரு தனி நாட்டிற்கு இருக்க வேண்டிய தகுதிகள் அனைத்தும் அந்தக் காலத்தில் மலாடு நாட்டிற்கு இருந்ததாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் மலையமான்களின் நல்ல ஆட்சியும் மாட்சியுமேயாகும். செஞ்சி வட்டத்தில் மலையமான் பெயரால் 'மலையனூர்' என ஓர் ஊர் இருப்பதும், தென்னார்க்காடு மாவட்டத்தில் மக்களுக்கு 'மலையன்' என்னும் பெயர் வைக்கும் வழக்கம் இருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. மலையமானுக்கு மலையன் என்னும் பெயர் உண்மையை, 'செவ்வேல் மலையன் முள்ளூர்'—(குறுந்தொகை312), முள்ளூர் மலையனது' (நற்றிணை—170) 'மலையன்...முள்ளூர் மீமிசை' (புறநானூறு—123) முதலிய சங்க இலக்கிய ஆட்சிகளால் அறிக.

இந்த நாட்டிற்கு மலாடு என்னும் பெயரையடுத்து, 'நடு நாடு,' 'திருமுனைப்பாடி நாடு,' 'சேதி நாடு,' 'மகதநாடு' 'சகந்நாத நாடு,' 'சனநாத நாடு' என்னும் பெயர் வழக்காறுகளும் ஏற்பட்டுள்ளன.

* பெரியபுராணம்—மெய்ப்பொருள் நாயனார்—1.

**தமிழக சுவிட்சர்லாந்து:**

நடுநாடு என்னும் பெயர் ஏற்பட்டதற்குப் பல காரணங்க கூறப்படுகின்றன. அவையாவன:

1. தொண்டைநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் நடுவே இருப்பதால் நடுநாடு எனப்பட்டது. அஃதாவது தெ பெண்ணையாற்றுக்கு வடக்கேயிருப்பது தொண்டை நாடு; வ வெள்ளாற்றிற்குத் தெற்கே யிருப்பது சோழநாடு; இந் இரண்டிற்கும் நடுவேயிருப்பது நடுநாடு.

2. மலையமான், தான் புரிந்த உதவிகளுக்காகச் சே சோழ பாண்டிய மன்னர்கள் தனக்கு அளித்த நிலப்பகுதிகளை இணைத்து, மூவர் நாடுகட்கும் எல்லை உடையதாக மூவர் நாடுகட்கும் நடுவே அமைத்துக்கொண்ட நிலப்பகுதியாதலின் நடுநாடு எனப்பட்டது.

3. முடியுடை மூவேந்தர்க்கும் பொதுவுடைமை உள்ள தாக நடுநிலைமையில் இருந்ததால் நடுநாடு எனப்பட்டது.

4. மலையமான் மரபினர் மூவேந்தரிடத்தும் நட்பு உடைய வராக - மூவேந்தரும் உதவி வேண்டிய போதெல்லாம் புரிந்த வராக - மூவேந்தர்க்கும் நடுநிலை உடையவராக இருந்தமையால் அவர்கள் ஆண்ட நாடு நடுநாடு எனப்பட்டது.

மேற்கூறிய பெயர்க் காரணங்கள் நான்கனையும் தொகுத்து இரண்டாகச் சுருக்கிவிடலாம். அவையாவன:

1. மிகப்பெரிய தொண்டைநாட்டிற்கும் மிகப் பெரிய சோழநாட்டிற்கும் நடுவே உள்ள ஒரு சிறு நாடு ஆதலின் நடுநாடு எனப்பட்டது. இந்தக் காரணம் பொருத்தமாகத்தான் தெரிகிறது.

2. முடியுடைப் பேரரசர் மூவர்க்கும் நண்பராய் - நடு நிலைமை உடையவராய் - வாழ்ந்த மலையமான் மரபினர் ஆண்ட தால் நடுநாடு எனப்பட்டது. இந்தக் காரணமும் பொருத்த



மாகத்தான் இருக்கிறது. இதன்படி பார்த்தால், இன்று உலகின் நடுநிலை நாடாகச் 'சுவிட்சர்லாந்து' என்னும் சிறு நாடு விளங்குவது போல, அன்று தமிழகத்தின் நடுநிலை நாடாக இது விளங்கியிருந்தமை புலப்படும். இந்தக் கருத்துக்கு, புலவர் கபிலர் மலையமான் திருமுடிக்காரியின் மேல் பாடியுள்ள,

"வியாத் திருவின் விறல்கெழு தானை
மூவருள் ஒருவன் துப்பா கியரென
ஏத்தினர் தரூஉம் கூழே நுங்குடி"

என்னும் புறநானூற்றுப் (122) பாடல் பகுதி தக்க சான்று.

கரையேறவிட்ட நகர்ப் புராண ஆசிரியர் நடுநாடு என்னும் பெயர் வந்ததற்குக் கூறும் காரணம் இங்கே மிகவும் குறிப்பிடப்பட்டு மகிழ்தற்குரியது. 'தொண்டை நாடு சான் றோர் உடைத்து,' 'சோழ நாடு சோறுடைத்து,' என்பன முதுமொழிகள்; இவ்விரு நாடுகட்கும் நடுவில் இருத்தலாலும், இவ்விரு நாடுகளின் தனிச் சிறப்பான சான்றோரையும் சோற்று வளத்தையும் தான் ஒருசேரப் பெற்றிருத்தலாலும் இப்பகுதி 'நடுநாடு' எனப்பட்டது" என அவர் கூறியுள்ளார்; பாடல் வருமாறு:

*"சொற்பதிரு முனைப்பாடித் தூநாட்டை நடுநாடாச்
சொல்வார் ஆன்ற
கற்றறிவினோர் அதற்குக் காரணமோக் கிடிற் சான்றோர்
கனிந்துற் றோங்கித்
துற்றதிரு நாட்டினுக்கும் சோறுகுறை வற்றவளம்
சோழநாட் டிற்கும்
தெற்றநடு ஆர்ந்து இரண்டு சிறப்பமைந்து ஓங்குகின்ற
திறத்தாற் போலும்"

இப்பெயர்க் காரணம் மிகவும் பொருத்தமாகப் புலப்படுகிறது. இந்நாடு, வீரபாண்டியன் காலத்துக் கல்வெட்டில்,

---

* கரையேறவிட்ட நகர்ப் புராணம் - திருநாட்டுப்படலம்-37.

"நடுவில் மண்டலத்துத் திருமாணிக் குழி"

என 'நடுவில் மண்டலம்' என்பதாய்க் குறிப்பிடப்பட்டிருப்பது கண்டு ஒப்பு நோக்கத்தக்கது. நடுவில் மண்டலம் என்பதற்கு நடுவே உள்ள நடுநாடு என்பதாகத்தான் பொருள் இருக்க வேண்டும்.

## திருமுனைப்பாடி நாடு

அடுத்து, திருமுனைப்பாடி நாடு என்பதின் பெயர்க் காரணம் வருமாறு:

திருமுனைந்து ஆடும் நாடு - அஃதாவது - திருமகள் மிகுந்த சிறப்புடன் வாழும் நாடு என்ற பொருளில் (திருமுனைப்பு ஆடி நாடு) திருமுனைப்பாடி நாடு எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனச் சிலர் கூறுகின்றனர். இந்தக் காரணம் பொருத்தமானதாய்ப் புலப்படவில்லை. முனை என்பது போர் முனையை—போர்க்களத்தைக் குறிக்கும்; பாடி என்றால் பாசறை—போர் மறவர்கள் தங்கியிருக்கும் இடம்; எனவே, முனைப்பாடி நாடு என்றால், போர்கள் பல நடந்த நாடு—போர் முனைகள் மிக்க நாடு—போர் மறவர்கள் நிறைந்த நாடு எனப் பொருள்படும். திரு என்பது மங்கலச் சொல். இப்படியாக—இந்தப் பொருளில் திருமுனைப்பாடி என்னும் பெயர் உருவாயிற்று என ஒரு காரணம் சொல்லப்படுகிறது. இதுதான் பொருத்தமாய்த் தோன்றுகிறது.

இந்த நாடு தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவில் இருப்பதால் வடபுல மன்னர்களும் தென்புல மன்னர்களும் பலமுறை இங்கே மோதிக்கொண்டிருக்கலாம்; முடியுடை மூவேந்தர்கள் துணை வேண்டிய போதெல்லாம் மலையமான் மரபினர் மிக்க படைவீரர்களுடன் சென்று உதவியதாய் அறியப்படுதலின், பயிற்சியும் பட்டறிவும் மிக்க போர் மறவர்கள் மிகப் பலர் இங்கே இருந்திருக்க வேண்டும்; எனவே, இந்நாடு முனைப்பாடி என்னும் பெயருக்கு ஏற்றதே. மற்றும், இந் நாடு நடுநிலை நாடாக இருந்ததால், ஒருவர் மேல் ஒருவர் படையெடுத்துச் சென்ற மன்னர் பலரின் படைகள் வழியில் இந்



நாட்டைப் பாடிவீடாகக் கொண்டு தங்கி இளைப்பாறுவதும் வழக்கமாயிருந்திருக்கலாம்; இதனாலும் இந் நாட்டிற்குத் திருமுனைப்பாடி நாடு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

திருமுனைப்பாடி நாடு என்பதற்கு எத்தனை பெயர்க் காரணங்கள் கூறினாலும் அத்தனையும் மலையமான்களை மையமாகக் கொண்டே சுற்றிச்சுற்றி வருவனவாயுள்ளன. கெடிலமும் தென்பெண்ணையும் பாயும் இத் திருமுனைப்பாடி நாட்டைப் புலவர்கள் மிகவும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். "நல்லொழுக்கம் மிக்க குடிமக்களையும் வளஞ்சிறந்த ஊர்களையும் உடையது திருமுனைப்பாடி நாடு. திருநாவுக்கரசரும் சுந்தரரும் பிறந்த சிறப்புடையது திருமுனைப்பாடி நாடு என்றால், இதற்கு மேல் அதற்கு இன்னும் வேறு பெருமை கூறவியலாது" என்னும் கருத்தில் சேக்கிழார் பெரிய புராணத்தில்,

*"கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
பங்கயம் வதனம் சேர மதியிரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு"

†"தொன்மை முறை வருமண்ணின் துகளன்றித் துகளில்லா
நன்மைநிலை ஒழுக்கத்து நலஞ்சிறந்த குடிமல்கிச்
செல்வமிகு புனையவளர் மணிமாடச் செழும்பதிகள்
மல்லிநிறைந் துளதிரு முனைப்பாடி வளநாடு"

‡"மறந்தருநெறி நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ பேறுலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு"

எனத் திருமுனைப்பாடி நாட்டைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். மற்றும், இலக்கணம் சிதம்பரநாத முனிவர் தமது திருப்பாதிரிப்

* பெரிய புராணம்—தடுத்தாட் கொண்ட புராணம்—1.
† பெரிய புராணம்—திருநாவுக்கரசர்.—2.
‡ பெரிய—திருநாவுக்கரசர்—11.

புலியூர்ப் புராணத்தில், "காஞ்சிபுர நாட்டுப் பகுதிக்குத் தெற்கிலும் காவிரி நாட்டுக்கு வடக்கிலும் உள்ளது திருமுனைப் பாடி நாடு; சுந்தரரும் நாவுக்கரசரும் தோன்றிச் சிறந்தது அந் நாட்டில்தான்; நாடுகளுக்குள் மேம்பட்டது திருமுனைப்பாடி நாடு என்று காவியங்கள் கூறுகின்றன"—என்னும் கருத்தில்,

*"இன்ன நாவலந் தீவினிற் காஞ்சியின் தென்பால்
பொன்னி நல்வளம் பரப்புநாட் டுத்தரம் பொலிந்து
தன்னை யொப்பரும் பெண்ணைநீர் பாய்ந்தகந் தழைத்து
மன்னி வாழ்வது திருமுனைப் பாடிமா நாடு"

"அன்ன நாட்டினில் ஆலால சுந்தரர் உதிப்ப
என்னையாள் வெண்ணை நாயகர் தடுத்தினி தாண்டார்
மன்னர் நாவினுக் கரசரு முனைத்திந்தக் கடலின்
மன்னி யேகரை யேறவிட் டார்புகழ் வளர்த்தார்"

"நாட்டின் மேம்படுந் திருமுனைப் பாடிநா டென்றே
ஏட்டின் மன்னிய காப்பியக் கவிகளே யிசைக்கும்"..."

என்று புகழ்ந்து பாடியுள்ளார். திருவதிகை வாகீசபக்த நாவலர் தமது திருவதிகைப் புராணத்தில்,

† "தெய்வநன் னாட்டின் மேலாம் திருமுனைப் பாடிநாடு"

‡ "திருவுறு கெடிலம் பாயும் திருமுனைப் பாடிநாடு"

என்றெல்லாம் பல பாடல்களில் பலபடப் புகழ்ந்துள்ளார். இவரும், அப்பரும் சுந்தரரும் பிறந்ததால் பெருமை பெற்றநாடு எனக் கூறத் தவறவில்லை. இதே பெருமையைச் சிவசிதம்பரப் புலவரும் தமது 'கரையேறவிட்ட நகர்ப் புராணம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர், திருமுனைப்பாடி நாட்டிற்கு 'நடுநாடு' என்னும் பெயர் உண்மையையும் குறிப்பிட்டுள்ளார்.

* திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்—திருநாட்டுப் படலம்—102, 103, 104.

† திருவதிகைப் புராணம்—திருநாட்டுப் படலம் - 3

‡ திருவதிகைப் புராணம்—திருநாட்டுப் படலம்—7



இந் நாடு 'சீராமன் வழிபட்ட நாடு' எனவும் புகழ்ந்துள்ளார். பாடற் பகுதிகள் வருமாறு:

*"ஓவு றுப்பெரு வளஞ்செய ஒளிர்நடு நாடாம்
பாவு சீர்முனைப் பாடிநாட் டணிவளம் பகர்வாம்"

"உவப்புடன் ஒரு சீராமனும் வழிபட்
டுள்ளதும் இந்நடு நாடே."

மற்றும் புலவர் வரந்தருவார் வில்லிபாரதத்தின் பாயிரச் செய்யுளில், "திருமுனைப் பாடிநாடு நீர்வளம் மிக்க நாடு; பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் முதலாழ்வார் மூவரும் கோவலூரில் ஒன்று சேர்ந்து திருமாலைத் தொழுத நாடு; தேவார ஆசிரியர்கள் மூவருள் இருவராகிய நாவுக்கரசரும் சுந்தரரும் பிறந்த சிறந்த நாடு"—என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்துள்ளார். அவருடைய பாடற் பகுதிகள் வருமாறு:

"தெய்வமா நதிநீர் பரக்குநா டந்தத்
திருமுனைப் பாடிநன் னாடு"
"பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற்
பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு
தேவரும் மறையும் இன்னமுங் காணாச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்த நாடு இந்தநன் னாடு."

இவ்வாறு புலவர் பலரால் போற்றிப் புகழப்பெற்ற பெருஞ் சிறப்பிற்குரியது திருமுனைப்பாடி நாடு. இலக்கியங்களிலே யன்றிக் கல்வெட்டுக்களிலும் 'திருமுனைப்பாடி நாடு' என்னும் பெயர் ஆட்சியைக் காணலாம்.

*கரையேற விட்ட நகர்ப் புராணம்—திருநாட்டுப் படலம்-1, 40.

*"திருமுனைப் பாடிக் கிழாமூர் நாட்டுத்
திருவாமூர் ஊரோம்"*

என்றும்,

*"திருமுனைப்பாடி நாட்டுப் பண்டையூர் மங்கலங்
கிழான்"*

என்றும் கல்வெட்டுக்களில் இப் பெயர் ஆளப்பட்டுள்ளமை காண்க.

**சேதி நாடு:**

இந்நாட்டிற்குச் 'சேதி நாடு' என்னும் பெயரும் இருப்பதை,

† *"சேதிநன் னாட்டுநீடு திருக்கோவ லூரின்மன்னி"*

என்னும் பெரிய புராணப் பாடல் பகுதியால் அறியலாம். சேதி நாடு திருமுனைப்பாடி நாட்டின் ஓர் உட்பகுதியாக இருக்கலாம்.

**மகத நாடு:**

திருக்கோவலூர் வட்டாரத்திலுள்ள ஆற்றூர் அல்லது ஆறகழூரைத் தலைநகராகக்கொண்டு வாணர் என்னும் குறுநில மரபினர் ஆண்ட பகுதி 'மகதநாடு' என அழைக்கப்பட்டது. மகத நாட்டையாண்ட மன்னர்கள் 'மகதேசர்' என அழைக்கப் பட்டனர். மகத+ஈசர்=மகதேசர். அஃதாவது, மகதநாட்டின் தலைவர். இச் செய்தியை ஏகம்பவாணன் என்னும் வாண மன்னனைப் பற்றிப் பெருந்தொகை என்னும் நூலின் 1192ஆம் பாடலிலுள்ள,

*"மகதேசன் ஆறைநகர் காவலன் வாண பூபதி"*

என்னும் பகுதியாலும், திருவண்ணாமலைக் கோயிலில் வாணவ கோவரையன் என்னும் வாண மன்னனைப்பற்றிய கல்வெட் டொன்றிலுள்ள.

* திருவாமூர்க் கோயில் கல்வெட்டு (கி. பி. 1090)
† பெரியபுராணம்—மெய்ப்பொருள் நாயனார்—1.



*"ஆறகளூர் உடையான் மகதேசன் உலகம் காத்த வாணவ
கோவரையன்"*

என்னும் பகுதியாலும், திருவயிந்திரபுரம் கல்வெட்டொன்றி லுள்ள 'மகதராஜ்ய நிர்ம்மூலமாடி' என்னும் பகுதியாலும் பிற வற்றாலும் அறியலாம்.

**ஜனநாத நாடு:**

இந்நாட்டிற்கு 'சனநாத நாடு' என்னும் பெயரும் ஒரு கால் ஒரு சிலரால் வழங்கப்பட்டமையை, திருக்கோவலூர் திரு விக்கிரமப் பெருமான் கோயிலில் இரண்டு கல்வெட்டுக்களில் உள்ள,

*"ஜனநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்து பிரம்ம தேயம் திருக்கோவலூர் ஆன ஸ்ரீ மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து திருவிடைகழி ஆழ்வார்க்கு இவ் வூர் சபையோம் விற்றுக் குடுத்த நிலமாவது..."*

*"மிலாடாகிய ஜனநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்து திருக்கோவலூர்"*

என்னும் பகுதிகளால் அறியலாம்.

**சகந்நாத நாடு:**

இதே நாட்டிற்கு 'சகந்நாத நாடு' என்னும் பெயரும் வழங்கப்பட்டதை, திருக்கோவலூர்க் கல்வெட்டொன்றிலுள்ள,

*"மலாடான ஜகந்நாத வளநாட்டுக் குறுக்கைக்
கூற்றத்துத் திருக்கோவலூர்"*

என்னும் பகுதியால் அறியலாம். சனநாத நாடு என்பது சகந் நாத நாடு எனத் தவறுதலாக மாற்றி வழங்கப்பட்டதோ அல்லது-சகந்நாத நாடு என்பது சனநாத நாடு என மாற்றி வழங்கப்பட்டதோ-தெரியவில்லை. இரண்டும் தனித்தனிப் பெயராகவும் இருக்கலாம்.

இவ்வாறு கெடில நாட்டிற்குப் பல பெயர்கள் வழங்கப் பட்டன. இப் பெயர்களுள் சங்ககாலத்தில் மலாடு என்னும் பெயரும் சங்க காலத்திற்குப் பின் திருமுனைப்பாடி நாடு என்னும் பெயருமே வழக்காற்றில் பெரிதும் இடம் பெற்றன என்பது நினைவுகூரத் தக்கது.

**உலக எல்லைக்குள் கெடில நாடு :**

கெடிலம் பாயும் தென்னார்க்காடு மாவட்டம் உலக எல்லைக்குள், வடகுறுக்கைக் கோடு (North Latitude) 10° 5′—12° 30′ ஆகிய அளவிற்குள்ளும், கிழக்கு நெடுக்கைக் கோடு (East Longitude) 78° 37°′—80′ ஆகிய அளவிற்குள்ளும் அமைந்து கிடக்கிறது. இந்தப் பொது எல்லைக்குள்ளேயே, கெடிலம் பாயும் கள்ளக் குறிச்சி வட்டம், திருக்கோவலூர் வட்டம், கடலூர் வட்டம் ஆகிய மூன்று வட்டங்களும் அடங்கிய கெடில நாடு, வடகுறுக்கைக் கோடு (North Latitude) 11° 30′ – 12° 10′ ஆகிய அளவிற்குள்ளும், கிழக்கு நெடுக்கைக்கோடு (East Longitude) 78° 40′—79° 50′ ஆகிய அளவிற்குள்ளும் அமைந்துள்ளன. இஃது, உலக எல்லைக்குள் சிறப்பாகக் கெடிலநாடு அமைந்திருக்கும் இட எல்லையாகும்.

## 8. கெடிலக்கரை அரசுகள்

கெடிலக்கரை நாடாகிய திருமுனைப்பாடி நாட்டை வரலாற்றுக் காலந்தொட்டு கி. பி. இருபதாம் நூற்றாண்டுவரை அரசாண்டுவந்த மன்னர்கள் குறித்தும் அவர்தம் மரபுகள் குறித்தும் விளக்கின் விரியும். முறையே முன் பகுதியில் (கெடில நாட்டு வரலாறு) பொதுவான குறிப்புக்களே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அம் மன்னர்கள் வரிசையில், திருமுனைப்பாடி நாட்டிலேயே பிறந்து வளர்ந்து திருமுனைப்பாடி நாட்டிலேயே தலைநகர்கள் அமைத்துக்கொண்டு அரசாண்ட மன்னர்களேயன்றி, தமிழகத்தின் வேறு பகுதிகளிலிருந்தும், பாரதத்தின் வேறு மாநிலங்களிலிருந்தும், உலகின் வேறு (ஐரோப்பா) கண்டத்திலிருந்தும் வந்து அரசோச்சிய பேரரசர்களும் இடம் பெற்றுள்ளனர். ஆனால், இந்தப் பகுதியில், திருமுனைப்பாடி நாட்டிலேயே (தென்னார்க்காடு மாவட்டத்தில்) பிறந்து வளர்ந்து திருமுனைப்பாடி நாட்டிலேயே தலைநகர்கள் அமைத்துக்கொண்டு அரசோச்சிய திருமுனைப்பாடி நாட்டு மன்னர்கள் சிலரைப்பற்றிய வரலாறுகள் மட்டுமே முறையே சங்ககாலந்தொட்டுக் கொடுக்கப்படும்.

இம் மன்னர்களுள், கெடிலம் ஆற்றிற்கு வடக்கே (6 மைல்) 10 கி. மீ. தொலைவிலுள்ள திருக்கோவலூரைத் தலைநகரமாகக் கொண்டு செங்கோலோச்சிய மன்னர்கள் மிகவும் இன்றியமையாதவர்களாகக் காணப்படுகின்றார்கள். சங்க நூல்கள், பிற்கால இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், வரலாற்று நூல்கள் ஆகியவை கெடிலக்கரை அரசுகளைப்பற்றி அறியத் துணை செய்கின்றன.

சங்க காலத்திலேயே சீர்சால் மன்னர்களால் கெடிலக்கரை நாடு மிகவும் சிறப்புற்றும் செழிப்புற்றும் திகழ்ந்தமையைச் சங்க இலக்கியங்கள் அறிவிக்கின்றனவெனில், கெடிலக்கரை நாகரிகத்தின் மாண்பு எத்துணையது என்பதை உய்த்துணரலாம்! கெடிலக்கரைக்குப் பெருமை தேடித்தந்த அம் மன்னர்களின் வரலாறுகள் வருமாறு :

## மலையமான் திருமுடிக்காரி

**பேரும் ஊரும் :**

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்று கருதப்படும் சங்ககாலத்தில் வாழ்ந்தவன் மலையமான் திருமுடிக் காரி. இவன், காரி, திருமுடிக்காரி, மலயன், மலயமான் என்றெல்லாம் இலக்கியங்களில் அழைக்கப்பட்டுள்ளான். மலைய மான் என்பது மரபுப்பெயர்; காரி இயற்பெயர்; இவனது நாடு, தென்பெண்ணையாறும் கெடிலமும் பாய்ந்து வளப்படுத்தும் திரு முனைப்பாடி நாடாகும். மலையமான் ஆண்டதால் மலையமானாடு, மலாடு என்று இது பண்டு வழங்கப்பட்டது. மலையமானாடு என்பதன் சுருக்கமான மரூஉப் பெயர் மலாடு என்பது. இது முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

காரியின் தலைநகர் கோவல் எனப்படும் திருக்கோவலூர். முள்ளூர் மலை இவனுக்கு உரிய மலை. இச்செய்திகளை அம்மூவனார் பாடிய,

> "துஞ்சா முழவின் கோவல் கோமான்
> நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறை"

என்னும் அகநானூற்றுப் (35) பாடல் பகுதியாலும், கபிலர் பாடிய,

> "ஓரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்
> முள்ளூர்க் கானம் நண்ணுற வந்து"

என்னும் குறுந்தொகைப் (312) பாடல் பகுதியாலும், கல்லாடனார் பாடிய,

> "முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி"

என்னும் அகநானூற்றுப் (209) பாடல் பகுதியாலும், கபிலர் பாடிய

> "தொலையா நல்லிசை விளங்கு மலயன்...
> பயன்கெழு முள்ளூர் மீமிசை"



...ன்னும் புறநானூற்றுப் (123) பாடல் பகுதியாலும் பிற ...ற்றாலும் அறியலாம்.

**...கொடை வீரம்:**

காரி கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகப் போற்றப் ...படுகிறான். இவன், தன்னை நாடிவரும் புலவர்கட்கும் கலைஞர் ...கட்கும் தேர்களை வழங்குவானாம்; அதனால் 'தேர்வண் மலையன்' ...(நற்றிணை—100) எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளான். முடியுடை ...மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களுங்கூட, பல ...காரணம்பற்றி இவன் உதவியை நாடுவார்களாம். இவன் அவ ...ர்க்கு வேண்டிய உதவிகளைப் புரிவானாம். இவன் உதவியால் ...முடிசூடிக்கொண்டவரும் உண்டு. இச் செய்தியைக் கபிலர் ...பாடிய

> "வீயாத் திருவின் விறல்கெழு தானை
> மூவருள் ஒருவன் துப்பா கியரென
> ஏத்தினர் தருஉம் கூழே நுங்குடி"

என்னும் புறநானூற்றுப் (122) பாடல் பகுதிக் குறிப்பால் தெரிந்துகொள்ளலாம். கபிலர், பரணர், கல்லாடனார், கோவூர் கிழர், மாறோக்கத்து நப்பசலையார், பெரிசாத்தனார், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், வடம வண்ணக்கன் பெருஞ் சாத்தனார் முதலிய சிறந்த புலவர் பெருமக்கள் பலர் மலையமான் காரியைப் புகழ்ந்து பாடியிருப்பதிலிருந்து, மலையமான் தமிழின் பால் மிக்க காதல் கொண்டவன் என்பதும், தமிழ்ப் புலவர்கட்கு வரையாது வாரி வழங்கிய வள்ளல் என்பதும் புலனாகும். சுருங்கச் சொல்லின், திருமுடிக்காரி ஒரு பெரிய கொடை மறவன் என்பது போதரும். 'இவனுக்கென ஓர் உடைமையும் இல்லை; எல்லாம் பிறருடையனவாக்கினான்' எனக் கபிலர் புறப் (122) பாடலில் கூறியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

**படை வீரம் :**

கொடைவீரம், படைவீரம் என்னும் இரண்டனுள் கொடை வீரம் அரியது; படைவீரம் எளிது. எனவே, அரிய கொடை

வீரத்திலேயே சிறந்தவனாயிருந்த காரி, எளிய படைவீரத்தில் மிகமிகச் சிறந்து விளங்கினான் என்பது சொல்லாமலே விளங்கும்.

பேரரசர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் துணை வேண்டியபோதெல்லாம் சென்று அவர்களின் பகைவர்களை வென்று அவர்களை அரியணையில் அமர்த்தியிருக்கின்றான் காரி. குதிரையூர்ந்து போர் புரிவதில் வல்லவன் இவன். இவனது குதிரைக்கும் காரி என்பதே பெயர். இவன், ஓரியுடன் போர் புரிந்து கொன்று கொல்லியைச் சேரர்க்கு ஈந்தான் என்னும் செய்தியை,

> "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
> ஓரிக் குதிரை ஓரி"

என்னும் சிறுபாணாற்றுப்படைச் செய்யுட் (110—111) பகுதியாலும்,

> "செவ்வேல், முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
> செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
> ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
> செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி"

என்னும் அகநானூற்றுப் பாடல் (209) பகுதியாலும் அறியலாம்.

முள்ளூரில் இவனை எதிர்த்த ஆரிய மன்னர் பலர், இவனது ஒரே வேல் படைக்கு அஞ்சி ஓடிய செய்தி,

> "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
> பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
> ஒரு வேற்கு ஓடியாங்கு"

என்னும் நற்றிணைப் (170) பாடல் பகுதியால் தெரிய வருகின்றது.

**மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் :**

மலையமான் மரபைச் சேர்ந்த மன்னர் பலர், திருக்கோவலூரைத் தலைநகராகவும் முள்ளூர் மலையை அரணாகவும்



கொண்டு திருமுனைப்பாடி நாட்டை ஆண்டிருப்பதாகத் தெரிகின்றது. அவர்களுள் ஒருவனே மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்பவன். இவனுக்கு மலையமான் 'சோழிய ஏனாதி திருக்கிள்ளி' என்ற பெயரும் உண்டு. இவன் சோழ மன்னரின் படைத் தலைவனாய்ப் பணி புரிந்ததால் 'சோழிய ஏனாதி' என்னும் சிறப்புப் பட்டம் அளிக்கப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. சங்ககாலக் குறுநில மன்னனாகிய இவனும், மலையமான் திருமுடிக்காரியைப் போலவே ஒரு வள்ளலாய்த் திகழ்ந்தான். இவனை மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர் பெருமான் புகழ்ந்து பாடிய பாடலொன்று புறநானூற்றில் (174) காணப்படுகிறது.

**மலையமான் மரபினர் :**

மலையமான் மரபினர்க்குத் திருக்கோவலூரேயன்றி, ஒவ்வொரு காலத்தில் ஆடையூரும் கிளியூருங் கூடத் தலைநகர்களாய் இருந்தன. கிளியூரிலிருந்து ஆண்ட மன்னர்கள் கிளியூர் மலையமான்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் ஆண்ட பகுதிக்குச் 'சேதி நாடு' என்னும் பெயரும் இருந்ததாகத் தெரிகின்றது. "கிளியூர் மலையமாந் பெரியுடையானான இராசராசச் சேதிராயனும் கிளியூர் மலையமாந் ஆகார சூரநான இராச கம்பீரச் சேதிராயனும்"—எனத் திருவண்ணாமலைக்கோயில் கல்வெட்டொன்றிலுள்ள தொடர்களை ஈண்டு ஒப்பு நோக்குக.

## மெய்ப்பொருள் வேந்தர்

**நாடும் நகரமும் :**

மெய்ப்பொருள் வேந்தர் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு மலாடு (திருமுனைப்பாடி) நாட்டை ஆண்டவர். இந் நாட்டிற்குச் சேதிநாடு என்னும் பெயரும் உண்டு. இந்தச் செய்திகளை,

> *"சேதிநன் னாட்டுநீடு திருக்கோவ லூரின் மன்னி
> மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்"

*பெரியபுராணம்—மெய்ப்பொருள் நாயனார்—1.

"இப்படி இழந்த மாற்றன் இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம் அறிந்து"

"சேதிவென் கொடிகள் ஆடும் கடிசெறு மறுகிற் போகிச்
சேதிபர்பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான்"

"இன்னுயிர் செகுக்கக் கண்டு எம்பிரான் அன்பர் என்றே
கன்னெறி காத்த சேதி நாதனு!"

எனும் பெரியபுராணப் பாடல் பகுதிகளால் அறியலாம். மெய்ப்பொருள் வேந்தரை 'மலாடர் கோமான்' எனச் சேக்கிழார் கூறியிருப்பதைக் கொண்டு, இவ் வேந்தர் மலையமான் மரபில் வந்தவர் என்பது புலனாகும். மலையமான் மரபில் வந்தவர்களுள் பல பங்காளிக் குடும்பங்கள் இருந்திருக்கலாம்; அவற்றுள் ஒரு பிரிவுக்குச் 'சேதியர்' என்னும் மரபுப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். அந்தப் பிரிவைச் சேர்ந்தவரே 'மெய்ப்பொருள் வேந்தர்'. அதனால்தான் இவர், 'சேதியர் பெருமான்' 'சேதி நாதனுர்' என்றெல்லாம் சேக்கிழாரால் குறிப்பிடப்பட்டுள்ளார். சேதியரால் ஆளப்பட்டதால் நாடு 'சேதி நாடு' எனப்பட்டது.

**ஆட்சியும் மாட்சியும்:**

மெய்ப்பொருள் வேந்தர் அறநெறி வழுவாமல் நாடு காத்தார்; சிறந்த வீரமும் வலிமையும் உடையவராய் விளங்கினர். போர்முனைகள் பல வென்றார். முத்தநாதன் என்னும் பகை மன்னன் ஒருவன் மெய்ப்பொருள் வேந்தரை வென்று சேதி நாட்டைப் பறித்துக்கொள்ளப் பல்முறை முயன்று படையெடுத்துப் பார்த்தான்; ஒவ்வொரு முறையும் தோல்வியே அவனுக்குக் காத்து நின்றது; எனவே; சூதினால் வெல்லச் சூழ்ச்சி செய்தான்.

**புராண வரலாறு:**

மெய்ப்பொருள் மன்னர் படைவீரத்துடன் கொடை வீரமும் உடையவராய்த் திகழ்ந்தார்: புலவர்களைப் போற்றினர்; சிவனடியார்களைச் சிவனாகவே கருதி வழிபட்டார்: அடியார்கள்

* பெரியபுராணம்—மெய்ப்பொருள் நாயனர், 6, 8, 24.



விரும்பியன வெல்லாம் அளித்து வணங்கினர். மெய்பொரு ளாரது இவ்வியல்பறிந்த முத்தநாதன் ஒரு சிவனடியார்போல் கோலங்கொண்டு கோவலூர் அரண்மனை யெய்தினன். அடியார் என நம்பிய மெய்ப்பொருளார் அவனை வரவேற்று வணங்கினர். தான் அரிதிற் கிடைத்த அருள் நூற்பொருள் விளக்க வந்திருப்பதாக அவன் அறிவித்தான். அவனை மேலிருத்தித், தாம் கீழிருந்து அருளுரை வழங்க வேண்டினர் மன்னர். அவன் அருந் நூலை எடுப்பவன் போல், மறைத்து வைத்திருந்த கூரிய கொலைக் கருவியை எடுத்து அரசர்மேல் பாய்ச்சி நினைத்ததை முடித்தான். அடுத்து நின்றிருந்த அரசரின் உதவியாளனாகிய தத்தன் என்பான் முத்தநாதன்மேல் பாய முனைந்தான். அரசர் தடுத்து அடியாரை நகர் எல்லை தாண்டும்வரை காவலுடன் இட்டுச் சென்று நலமுடன் வழியனுப்பி வரும்படி பணித்தார். அவனும் அவ்வாறே செய்தான். அந் நற்செய்தி யறிந்து மகிழ்ந்து மனநிறைவுடன் உயிர் நீத்தார் மெய்ப் பொருளார்—இது மெய்ப்பொருள் நாயனர் வரலாறு.

## நரசிங்க முனையரையர்

**நாடும் மரபும்:**

கெடிலக்கரை சார்ந்த திருமுனைப்பாடி நாட்டைப் பல்வேறு காலங்களில் பல்வேறு அரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். பல் வேறு மரபுகளைச் சேர்ந்த பேரரசர்கள் நேரடி ஆட்சி புரிந்திருப் பதன்றிப் பேரரசர்களின் கீழ்ப் பல்வேறு மரபுகளைச் சேர்ந்த சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் செங்கோல் செலுத்தி யுள்ளனர்; அவர்களுள் ஒருவர் நரசிங்க முனையரையர் என்பவர். இவர் நரசிங்க முனையர் எனவும் அழைக்கப்படுவதைப் பெரிய புராணத்தில் காணலாம்.

நரசிங்க முனையரையரின் குலமரபின் பெயர் 'முனைய தரையர்' என்பதாகும்; இது, 'முனையரையர்' எனவும்; 'முனையர்' எனவும் பின்னர் மருவிற்று. இம் மரபு குறுநில மன்னர் மரபாகும். நரசிங்க முனையரையர் திருமுனைப் கொடி—இலச்சினை; சிங்கம்.

பாடி என்னும் நாட்டுப் பகுதியை அரசாண்டதாகச் சேக்கிழார் தெரிவித்துள்ளார்.

> *"தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி
> நாடு ஆளும் காவலனார் நரசிங்க முனையரையர்"

என்பது பெரிய புராணப் பாடல். 'முனைப்பாடி' என்ற நாட்டின் பெயருக்கும் 'முனையரையர்' என்னும் அரச மரபின் பெயருக்கும் சொல் அளவிலேகூட மிக்க தொடர்பு இருப்பதைக் காணலாம். முனையரையர்கள் ஆண்டதால் 'முனைப்பாடி நாடு' என்னும் பெயர் ஏற்பட்டிருக்குமா? அல்லது முனைப்பாடி நாட்டையாண்டதால் முனையரையர் என்னும் பெயர் ஏற்பட்டிருக்குமா?-என்றெல்லாம் ஆராயத் தோன்றலாம். இவ்விரண்டனுள் எதற்கு எது காரணம் என்பது எளிதில் தெளிவுபடாவிடினும், இவ்விரண்டும் நெருங்கிய தொடர்புடையவை என்பது வரைக்கும் மலையத்தனை உண்மை!

திருமுனைப்பாடி நாட்டு மன்னராய நரசிங்க முனையரையர் எந்த ஊரைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தினர்? அவருடைய காலம் யாது? என்ற வினக்கட்கு விடைகாண வேண்டும்.

**தலைநகர்:**

நரசிங்க முனையரையர் திருநாவலூரில் பிறந்த நம்பியாரூரர் என்னும் சுந்தரரைத் தம் செல்லப்பிள்ளையாக எடுத்து வளர்த்து வந்தார் எனப் பெரியபுராணம் தெரிவிக்கின்றது.

> †"நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
> பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று
> விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
> அரசிளங் குமரற் கேற்ப அன்பினால் மகன்மை கொண்டார்"

* பெரிய புராணம்—நரசிங்க முனையரையர்—1.
† பெரிய புராணம்—தடுத்தாட்கொண்ட புராணம்—5.



என்பது பெரிய புராணச் செய்யுள். இது வெற்றுப் புராணச் செய்தி மட்டுமன்று; திருநாவலூர் மக்களும் வாழையடி வாழையாகச் செவிவழி அறிந்துவைத்து இச் செய்தியைத் தெரிவிக்கின்றனர்.

மற்றும் சுந்தரருங்கூட, தமது தேவாரத்தில் திருநாவலூர்ப் பதிகத்தின் இறுதிப் பாடலில், 'நரசிங்க முனையரையர் திருநாவலூரில் இருந்து இறைபணி புரிந்தார்' என்னும் செய்தியைத் தெரிவித்துள்ளார். அப் பாடல் வருமாறு:-

> "நாதனுக்கு ஊர் நமக்கு ஊர் நரசிங்க முனையரையன்
> ஆதரித் தீசனுக் காட்செயும் ஊர் அணி நாவலூரென்
> றோதநற் றக்கவன் றொண்டன் ஆரூரன் உரைத்ததமிழ்
> காதலித் துங்கற்றுங் கேட்பவர் தம்வினைக் கட்டறுமே."

'திருநாவலூர், இறைவன் எழுந்தருளியுள்ள ஊராகும்; என்னுடைய ஊருமாகும்; நரசிங்க முனையரையன் இறைவனுக்கு ஆட்செயும் ஊருமாகும்' எனச் சுந்தரர் கூறியுள்ளார். இதன் வாயிலாக, திருநாவலூர்க்கும் நரசிங்க முனையரையர்க்கும் இருந்த நெருங்கிய தொடர்பு புலப்படும்.

மற்றும், முனையரையர் மரபினர் நரசிங்கன், இராமன் என்னும் இரு பட்டப் பெயர்களையும் மாறிமாறி வைத்துக் கொண்டு நரசிங்க முனையரையர், இராம முனையரையர் என அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த நரசிங்கன், இராமன் என்னும் பெயர்கள் திருநாவலூர் வட்டாரத்து மக்களிடையே மிகுதியாய் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இதனாலும், முனையரையர் மரபினர்க்கும் திருநாவலூர் வட்டாரத்திற்கும் இருந்த உறவு அறியப்படும்.

இச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயின், திருநாவலூர் வட்டாரமே நரசிங்க முனையரையரின் தலைநகராய் இருந்திருக்கக் கூடும் என நுனித்துணரலாம். இதற்குத் தக்க சான்று வேறு ஒன்றும் கூற முடியும்:-

திருநாவலூரில் சிவன் கோயிலுக்கு எதிரேயுள்ள சிறிது மேடான நிலப்பகுதியை அவ்வூர் மக்கள் 'கச்சேரி மேடு' என

வழங்குகின்றனர். 'கச்சேரி' என்பது அரசனது திருவோலக்க அவையைக் குறிப்பதாகும். அவ்விடத்தில் அரசவை கூடி அரச வினைகள் ஆராயப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அங்கே அரசவை கூடிற்றென்றால் அதுதானே அரசனது தலைநகராய் இருந்திருக்கக்கூடும்! எனவே, நரசிங்க முனையரையர் சுந்தரரைப் பிள்ளையாக எடுத்து வளர்த்த செய்தியைக் கொண்டும், 'கச்சேரி மேடு' என்னும் பழைய வழக்காற்றுப் பெயரைக் கொண்டும், திருநாவலூர் நரசிங்க முனையரையரின் தலைநகராயிருந்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். இது குறித்து மாற்றுக் கருத்து ஒன்றும் கூறலாம்.

கெடிலத்தின் வடகரையில் உள்ள திருநாவலூருக்குத் தென் மேற்கே 4 கி. மீ. தொலைவில்—கெடிலத்தின் தென் கரையில்—சேந்தமங்கலம் என்னும் ஊர் ஒன்று உள்ளது. நரசிங்க முனையரையருக்குச் சில நூற்றாண்டுகள் பிற்பட்ட கோப்பெருஞ் சிங்கன் என்னும் வலிய மன்னனுக்குத் தலை நகராக விளங்கிய ஊர் இது. பாழடைந்த கோட்டை ஒன்றை இன்றும் இவ்வூரில் காணலாம். இவ்வூர்பற்றி 'கோப்பெருஞ் சிங்கன்' என்னும் தலைப்பிலும், 'சேந்தமங்கலம்' என்னும் தலைப்பிலும் வேறிடங்களில் விரிவாகக் காணலாம். இந்த ஊர் தான் நரசிங்க முனையரையரின் தலைநகராய் இருந்திருக்கக் கூடும் என்றும் ஒரு கருத்து கூறப்படுகிறது. திருநாவலூர்க் கோயிலில் பூசனை புரியும் பெரியார் ஒருவர் இந்தக் கருத்துப்பட என்னிடம் சில கூறினார். சேந்த மங்கலம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக இருத்தலானும், திருநாவலூருக்கு மிக அண்மையில் இருத்தலானும், இந்தக் கருத்தில் உண்மையிருக்க முடியும். அடுத்தடுத்துள்ள சேந்த மங்கலத்தில் அரசரது அரண்மனையும், திருநாவலூரில் அரசவை கூடும் மாளிகையும் இருந்திருக்கலாம். சேந்த மங்கலம் - திருநாவலூர் உட்பட 10கி. மீ பரப்புக்குத் தலை நகரப் பகுதி விரிந்திருக்க வேண்டும் என அவ் வட்டாரத்தில் சொல்லப்படுகின்றது. எது எப்படியிருந்த போதிலும், திரு நாவலூர் வட்டாரமே நரசிங்க முனையரையரின் தலைநகரப் பகுதி என்று பொதுப்படையாகக் கூறுவதில் தவறொன்றும் இல்லை.



**தெய்வீக மன்னன் :**

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு தெய்வீகன் என்னும் மன்னன் நடுநாடு எனப்படும் திருமுனைப்பாடி நாட்டை முன்னொரு காலம் ஆண்டதாக ஒரு வரலாறு சொல்லப் படுகின்றது. ஔவையார் பாரி மகளிரை இந்தத் தெய்வீக மன்னனுக்கு மணம் செய்வித்ததாகவும், இம் மன்னன் வழியில் வந்தவர்களே மலையமான் மரபினர் என்பதாகவும் பல்வேறு செய்திகள் இவனைப்பற்றிக் கூறப்படுகின்றன. இவனைப்பற்றி அறிய சங்கநூற் சான்று ஒன்றும் இலது.

## கோப்பெருஞ் சிங்கன்

**குலமரபு:**

ஒரு காலத்தில் கெடிலக் கரையில் பேரும் புகழுமாய் அர சோச்சிய கோப்பெருஞ் சிங்கன் என்னும் மன்னவன், காடவர் அல்லது காடவராயர் என்று அழைக்கப்படும் குல மரபைச் சேர்ந்தவன். இம் மரபினர் 'சம்பு குலக்காடவராயர்' என்றும் வழங் கப்படுவர். காடவர் அல்லது காடவராயர் என்பது பல்லவ மன்னரைக் குறிக்கும் பட்டப்பெயராகும். *'காடவர் கோன் கழற் சிங்கன்' என்னும் சுந்தரரது தேவாரப்பாடல் ஆட்சியினும் இதனை அறியலாம்.

தென்னார்க்காடு மாவட்டத்தில், பன்னிரண்டு—பதின் மூன்றாம் நூற்றாண்டு கால அளவில் பிற்காலப் பல்லவர்கள் சிலர் சோழப் பேரரசர்களின் சிறந்த சிற்றரசர்களாய் விளங்கிப் பகைச் சிற்றரசர் பலரை முறியடித்துச் சோழப் பேரரசுக்கு வெற்றி தேடித் தந்துள்ளனர். விக்கிரமசோழன் (1120—1135) காலத்தில் இவர்கள் மிக்க பெருமையும் செல்வாக்கும் பெற்றிருந் ததாகச் சொல்லப்படுகிறது. 12ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் கெடிலத்தின் தென்கரையில் உள்ள திருமாணிகுழி வட்டாரத்தில், வளந்தாஞர் என்ற காடவர் சோழரின் ஆணைய

* சுந்தரர் தேவாரம் — திருத்தொண்டத்தொகை — 9.

ராய் ஆட்சி நடத்தி வந்தார். அவரை யடுத்து, அவர் மரபை (வழியைச்) சேர்ந்தவர்களான ஆட்கொல்லி, அரச நாராயணன், கச்சிராயன் வீரசேகரன், சீயன் என்பவர்கள் ஆணை செலுத்தி வந்தனர். இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சீயன் என்ற காடவனின் மகன் தான் 'சீயன் கோப்பெருஞ் சிங்கன்' என்பவன்.

## ஆட்சி:

இவன், தென்னார்க்காடு மாவட்டத்தில் — திருக்கோவலூர் வட்டத்தில் கெடிலத்தின் தென்கரையில் உள்ள சேந்தமங்கலம் என்னும் ஊரைத் தலைநகராகக்கொண்டு 1243ஆம் ஆண்டு பட்டமேற்றான். இவன் வீரத்துடன் சூழ்ச்சியும் மிக்கவன்; தன்னை வலுப்படுத்திக்கொள்ளச் சோழப் பேரரசின் வீழ்ச்சியை எதிர்நோக்கிக்கொண்டிருந்தான்: சிற்றரசனாகிய தனக்கு மேல் பேரரசனாக மேலாட்சி செலுத்தி வந்த மூன்றாம் இராசராசச் சோழனிடம் அச்சமும் பணிவும் கொண்டவன் போல் நடித்துக் கொண்டே பாண்டியப் பேரரசுடன் கள்ள நட்புக் கொண்டிருந்தான். ஈழத்து இளவரசன் ஒருவனையும் தனக்குத் துணைவனாக்கி வைத்திருந்தான். சோழப் பேரரசும் தளர்ச்சியுறத் தொடங்கியது.

சோழனின் சோர்வை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்னும் பாண்டிய வேந்தன் 1230—31 ஆம் ஆண்டு கால அளவில் மூன்றாம் இராசராசச் சோழனை வென்று முடிகொண்ட சோழபுரத்தில் வெற்றிவிழாக் கொண்டாடினான். தோல்வியுற்ற சோழ மன்னவர் போசள மன்னனின் ஆதரவை நாடச் சென்றுகொண்டிருந்தான். அந்நேரம் பார்த்துக் கோப்பெருஞ்சிங்கன் தெள்ளாறு என்னும் இடத்தில் சோழனை இடைமறித்து வென்று தன் தலைநகராகிய சேந்தமங்கலத்தில் கொண்டுவந்து சிறை வைத்தான். திருவயிந்திரபுரத்திலும் சிறை வைத்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. செய்தியறிந்த போசள மன்னன் வீரநரசிம்மன் (கன்னட நாட்டான்) படையுடன் புறப்பட்டு வந்து பொருது சோழனைச் சிறைமீட்டு மீண்டும் சோழப் பேரரசின் அரி



யணையில் அமர்த்தினான். இந்தப் போரில் கோப்பெருஞ் சிங்கனின் ஊர்கள் பலவும் கடலூர்த் துறைமுகமும் வீரநரசிம்மனால் அழிக்கப்பட்டன. இச் செய்தியைத் திருவயிந்திரபுரம் கல்வெட்டொன்று விரிவாகக் கூறுகின்றது. பின்னர்க் கோப்பெருஞ்சிங்கன் போசளமன்னனைப் பெரம்பலூரில் பொருது வென்று இழிவுபடுத்தியதாகச் சொல்லப்படுகின்றது.

## நினைவுக்குறி:

பிற்காலப் பல்லவர் எனப்படும் காடவராய குலமரபின் பெருமன்னனாய்ப் பீடு பெருமையுடன் முப்பத்தேழு ஆண்டுகள் நாடாண்ட கோப்பெருஞ் சிங்கக் காடவராயனின் நினைவுக் குறியாக அவனது தலைநகராக இருந்த சேந்தமங்கலம் என்னும் ஊரில் அவனால் திருத்தி அமைக்கப்பட்ட கோட்டையும் கோயிலும் இடிந்தழிந்த நிலையில் இன்றும் இருப்பதைக் காணலாம்.

## ஏகம்ப வாணன்:

திருக்கோவலூருக்குத் தென்கிழக்கே 23 கி. மீட்டர் தொலைவில் கெடிலத்தின் தென்கரையிலுள்ள ஆற்றூர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் ஏகம்பவாணன். ஆற்றூர் 'ஆறை' எனவும் மருவி வழங்கும். வாணன் இலக்கியங்களில், ஆறையர்கோன், ஆறைநகர்க் காவலன், ஆறை ஏகம்பவாணன் என்றெல்லாம் வழங்கப்பட்டுள்ளான்.

தமிழகத்தில் இருந்த எத்தனையோ சிற்றரசர் மரபுகளுள் வாணர் மரபும் ஒன்று. அம் மரபினருள் ஏகம்பவாணன் மிகச் சிறந்தவனாக விளங்கினான். இவனும் கொடைமறமும் படைமறமும் ஒருசேர மிக்குத் திகழ்ந்தான். சோற்றுக்கு அரிசி கேட்ட புலவர் ஒருவர்க்கு இவன் யானையைக் கொடுத்தானும். இதனைப் பெருந்தொகையிலுள்ள,

"சேற்றுக் கமலவயல் தென்னாறை வாணனையான்
சோற்றுக் கரிசிதரச் சொன்னக்கால் வேற்றுக்
களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன்
அளிக்குமா றெவ்வா றவன்"

என்னும் (1189) பாடலால் அறியலாம். சிற்றரசர் பலரேயன்றி, முடியுடைப் பேரரசராய சேர சோழ பாண்டியரும் இவ் வாணனுக்கு அடங்கியிருந்தனர் எனத் தொண்டை மண்டல சதகமும் பெருந்தொகைப் பாடல்களும் தமிழ் நாவலர் சரிதைப் பாடல்களும் அறிவிக்கின்றன. வாணனது வாயிற்படியில் ஆர் (ஆத்தி), வேம்பு, பனை, அரசு, அத்தி ஆகியவை நிற்கும் என்று பெருந்தொகைப் பாடல் (1192) ஒன்று கூறுகிறது.

நாடு:

மலையமானாடு, மலாடு, சேதிநாடு, திருமுனைப்பாடி நாடு, நடுநாடு என்றெல்லாம் அழைக்கப்படுவது தென்னார்க்காட்டு மாவட்டப் பகுதிதான். இந்தப் பகுதிக்குள்ளேயே வாணர் மரபினர் ஆண்டுவந்த சிறு பகுதி 'மகதநாடு' என அழைக்கப்பட்டது. இதனை, பெருந்தொகை என்னும் நூலில் ஏகம்ப வாணனைப் பற்றியுள்ள,

> "வாரும் ஒத்தகுடி கீருநாமும்
> மகதேசன் ஆறைநகர் காவலன்
> வாண பூபதி மகிழ்ந் தளிக்க மிகு
> வரிசை பெற்றவொரு புலவன் யான்"

என்னும் பாணாற்றுப்படைப் (1192) பாடல் பகுதியால் அறியலாம். இப் பாடலில் ஆறைநகர் காவலனாகிய வாணன் 'மகதேசன்' எனச் சுட்டப்பட்டுள்ளான். மகத+ஈசன் = மகதேசன். அஃதாவது மகதநாட்டின் தலைவன் மகதேசன் என்பது பொருளாம். எனவே வாணர் ஆண்ட பகுதிக்கு 'மகதநாடு' என்னும் பெயர் உண்மை புலப்படும்.

இவ்வாறு காலந்தோறும் கெடிலநாட்டுப் பகுதிகளை ஆண்ட அரசர்கள் பலராவர். விரிப்பிற் பெருகுமாதலின் விடுப்பாம்.

---

# 9. கெடில நாட்டுப் பெருமக்கள்

வரலாற்றுக் காலந்தொட்டு இன்றுவரை கெடிலக்கரைப் பகுதிகளில் பிறந்தும்—வளர்ந்தும் — வாழ்ந்தும் — தொடர்பு கொண்டும் புகழ்பெற்று விளங்கின பெருமக்கள் பலராவர். சமயப் பெரியார்கள் என்ன! புலவர்கள் என்ன! கலைஞர்கள் என்ன! இப்படியாகப் பலதுறைப் பெரியார்கள் கெடிலநாடாகிய திருமுனைப்பாடி நாட்டில் சிறந்து விளங்கினர்; இன்றும் விளங்கி வருகின்றனர்.

ஒரு நாடு நல்ல நாடா அல்லது கெட்ட நாடா என்று எதைக்கொண்டு தீர்மானிப்பது? ஒரு நாடு, தன்மாட்டுள்ள நிலவளம் - நீர்வளத்தாலோ, இயற்கைக் கனிப்பொருள் வளத்தாலோ, இன்னும் பிற வளத்தாலோ சிறந்த நாடாகக் கருதப்பட முடியாது. ஒரு நாடு மேட்டுப் பாங்காகவோ அல்லது பள்ளம் படுகுழியாகவோ இருக்கலாம்; ஒரு நாடு காட்டுப் பகுதியாகவோ அல்லது கடல் சார்ந்ததாகவோ இருக்கலாம்; இன்ன பிற அமைப்புகளைக் கொண்டு நல்ல நாடு என்றோ கெட்ட நாடு என்றோ முடிவுகட்டிவிட முடியாது. ஒரு நாட்டில் வாழும் மக்களின் தகுதியைக் கொண்டே அந்நாட்டின் தகுதியையும் வரையறுக்க முடியும். இதனை ஔவையார் பாடிய,

> "நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்னும் புறநானூற்றுப் பாடல் (187) புலப்படுத்தும். இவ்வகை கெடில நாடாகிய திருமுனைப்பாடி நாட்டில் வாழ்ந்த பெருமக்கட்குக் குறைவே யில்லை. அவர்களால் அந்நாட்டிற்கு உண்டான பெருமைக்கும் அளவே யில்லை. அவர்தம் வாழ்க்கைக் குறிப்புகள் வருமாறு:

## சமயப் பெரியார்கள்

திருமுனைப்பாடி நாட்டோடு தொடர்பு கொண்டிருந்த சமயப் பெரியார்களுள் மிகவும் புகழ்பெற்று விளங்கியவர்களின் வரிசையில் முதல்முதலாக அறியக் கிடைத்திருப்பவர்கள் திலகவதியாரும் திருநாவுக்கரசருமே. இவர்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள்.

### திலகவதியார்:

கெடிலத்தின் வடகரையிலே உள்ள திருவாமூர் என்னும் ஊரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகளாகத் தோன்றியவர் திலகவதியார். இவர்க்கு மருள் நீக்கியார் என்னும் தம்பியொருவர் இருந்தார். திலகவதியார் மணப்பருவம் எய்தியதும் கலிப்பகையார் என்னும் படை வீரருக்கு இவரை மணம் பேசி முடிவு செய்திருந்தனர். திருமணம் நடைபெறுவதற்குமுன் போர் மூண்டதால், கலிப்பகையார் தம் மன்னனது படையோடு போந்து பகைவரொடு நெடுநாள் போர் புரிந்து கொண்டிருந்தார். இந்த நேரத்தில் தீயூழாகப் புகழனாரும் மாதினியாரும் ஒருவர் பின் ஒருவராக உயிர் துறந்தனர். கலிப்பகையாரும் போரில் மாண்டு போனார். திருமணம் ஆகாவிடினும் மணம் பேசி முடிவு செய்த கலிப்பகையாரைத் தம் கணவராகத் திலகவதியார் முன்னமேயே உள்ளத்தில் வரித்துக்கொண்டிருந்ததால், இப்போது அவர் இறந்ததும் அம்மையார் செய்வதறியாது திகைத்தார். கணவரை யிழந்த அவர் தாமும் உயிர் துறக்கத் துணிந்தார். அப்போது தம்பி மருள்நீக்கியார் தமக்கை திலகவதியார் இறந்தால் தாமும் இறந்துவிடப் போவதாகக் கூறினார். பின்னர்த் திலகவதியார் தமது முடிவை மாற்றிக்கொண்டு தம்பிக்காக உயிர்வாழத் தொடங்கினார்; கைம்மைக் கோலம் பூண்டு திருவதிகை போந்து திருக்கோயிலில் திருத்தொண்டு புரிந்து வரலாயினார்.

பூந்தோட்டம் வளர்த்தல், சிவபெருமானுக்குப் பூத் தொடுத்து அளித்தல், திருக்கோயிலில் அலகிடல், மெழுகிடல், புல் பூண்டு களைதல் முதலிய திருப்பணிகளைத் திலகவதியார்



புரிந்து வருகையில் தம்பி மருள்நீக்கியாரின் உள்ளத்தைச் சமண சமயம் கவர்ந்தது. அவர் தமது சைவ சமயத்தையும் தமக்கையாரையும் ஒரு சேரத் துறந்து சமண சமயத்தில் சேர்ந்து பாடலிபுத்திரம் என்னும் நகர்புக்குச் சமணத் தலைவராய் விளங்கினார். தருமசேனர் என்னும் தலைமைப் பட்டத்துடன் அங்கு வாழ்ந்துவந்த போது அவருக்கு வயிற்றில் சூலை நோய் கண்டது. சமணர்கள் எத்தனையோ மருத்துவங்கள் செய்து பார்த்தனர்; மருள் நீக்கியாரின் வயிற்று வலி தீர்ந்தபாடில்லை.

வலி பொறுக்க முடியாத மருள்நீக்கியார் சமணர்க்குத் தெரியாமல் தமக்கை திலகவதியாருக்குத் தமது நிலையைச் சொல்லியனுப்பினார். திருவதிகை வந்துவிடுமாறு தமக்கையார் பதில் மாற்றம் அனுப்பினார். அவ்வாறே சமணர் அறியாதபடி இரவோடிரவாகத் திருவதிகை போந்து தமக்கையின் அடிபணிந்தார் தம்பி. தமக்கையார் தம்பியின் நெற்றியில் திருநீறு பூசித் திருவதிகைச் சிவனை வணங்குவித்தார். மருள்நீக்கியாரின் சூலைநோய் பறந்தோடியது. சமணர்கள் இழைத்த பல கொடுமைகளினின்றும் மருள்நீக்கியார் தப்பிப் பிழைத்து, 'அப்பர்' 'திருநாவுக்கரசு' என்னும் பெயர்களுடன், சிவப்பதிகள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு ஆயிரக்கணக்கான தேவாரப் பாடல்களை அருளிச்செய்து சைவமும் தமிழும் ஒருசேரத் தழைக்கச் செய்தார். தருமசேனராக மாறிய மருள்நீக்கியாரைத் திருநாவுக்கரசராக மாற்றித் தந்த பெருமை திலகவதியாரையே சாரும்.

அந்தோ! அம்மையாரின் வாழ்க்கையை எண்ணும்போது இரக்கம் ஏற்படுகின்றது. ''கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி!'' என்று வாசகம் சொல்வது வழக்கம். ஆனால், அம்மையாரோ, 'கல்யாணம் பண்ணாமலேயே கைம்பெண்' ஆகிவிட்டார். என்ன கொடுமை! இந் நிலைமை அம்மையாரின் உயர்ந்த பண்பை அறிவிக்கிறது. அதே நேரத்தில் சமுதாயத்தின் கொடுமையையும் அறிவிக்கிறது. ஒருவேளை திருநாவுக்கரசரை உருவாக்கி உலகிற்கு அளிப்பதற்காகத்தான் திலகவதியார்க்கு இரங்கத்தக்க இந் நிலை ஏற்பட்டதோ! அம்மையார் வீட்டு வாழ்க்கையில்

தோல்வியுற்றாலும், நாட்டு வாழ்க்கையில் முழு வெற்றிபெற்று நற்பணியாற்றி நற்பெயர் பெற்றிருப்பது, உள்ளத்திற்கு ஆறுதலும் நிறைவும் ஒருசேர அளிக்கின்றது.

திலகவதியார் சைவ வேளாளர் குலத்தினர். இவர்க்கு நேர்ந்த இரங்கத்தக்க நிலைமை தொடர்பான அச்சம், இன்னமும் திருவாமூர்ப் பகுதிச் சைவ வேளாளர்களிடம் இருப்பதாகத் தெரிகின்றது. மணம் பேசி உறுதி செய்ததும் மணம் நிறைவேறுவதற்கு முன்னே மணமகன் கலிப்பகையார் போரில் மாண்டு விட்டதால் திலகவதியார் கைம்மை பூண நேர்ந்ததல்லவா? இந்த அச்ச உணர்வால், திருவாமூர்ப் பகுதி வேளாண் மக்கள், மணம் பேசி உறுதி (நிச்சயதார்த்தம்) செய்தல், திருமணம் நிகழ்த்துதல் ஆகிய இரண்டு வினைகளையும் ஒரே நாளில் நடத்தி வருகின்றனராம்.

தமது பெருந்தகுதியால் தமிழ்மக்களின் உள்ளங்களில் நீங்காது நிலைபெற்றுள்ள திலகவதியார் தம் கண்ணேபோல் போற்றிக் காத்துவந்த மலர்வனத்தை இன்றும் திருவதிகையில் காணலாம். அஃதாவது, அந்த இடத்தில் வாழையடி வாழையாகத் தொடர்ந்து செடிகொடிகள் இருந்து வருவதைச் சிதைந்த நிலையில் இன்று காணலாம்.

திலகவதியாரின் பெருமைக்கு அழியாச் சான்றாக, திருவதிகைச் சிவன்கோயிலுக்குள் அவருக்கும் ஒரு சிறு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. தெய்வங்களொடு தெய்வமாய்ச் சேர்த்து வழிபடும் அளவிற்கு அம்மையாரின் புகழ் வானளாவ உயர்ந்து விட்டது. உயர்ந்த உழைப்பின் பயன் வீண்போகாது போலும்! பெண்ணுலகிற்கு ஒரு பெருந் திலகமாய் வதிந்த திலகவதியார் புகழ் ஓங்குக! அவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கோயில் கொண்டுள்ள கெடிலக்கரை வாழ்க!

## திருநாவுக்கரசர்

**வரலாறு :**

திலகவதியாரின் தம்பி திருநாவுக்கரசரின் வரலாறு, முன்னேயுள்ள திலகவதியாரின் வரலாற்றுப் பகுதியில் ஒருசிறிது சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.



திருநாவுக்கரசரின் இயற்பெயர்—இளமைப் பெயர் மருள் நீக்கியார் என்பது. அறியாமையாம் மயக்கம் நீக்கியவர் என்பது அதன் பொருள். எவ்வளவு அழகிய இனிய பொருள் பொதிந்த தமிழ்ப்பெயர்! இப்பெயரை இலங்கைத் தமிழரிடையே இன்றும் காணலாம். இவ்வளவு நல்ல பெயரைச் சூட்டிய பெற்றோரை யிழந்து தமக்கையின் ஆதரவில் வளர்ந்து வந்த மருள்நீக்கியார் சமண சமயம் புகுந்து, தருமசேனர் என்னும் பெயருடன் பாடலிபுத்திரத்தில் ஒரு பெரிய சமணத் தலைவராய் விளங்கினமை, அவருடைய இயற்கைத் திறமைக்கு ஒரு பெரிய சான்றாகும். குறுகிய கால அளவில் ஒரு தலைவராய் விளங்குவது என்பது எல்லோர்க்கும் இயலக் கூடியதன்று. தருமசேனர் திறமைமிக்க தலைவராய் விளங்கியதனால் தான், அவர் சைவத்திற்கு மீண்டதும் சமணர்கள் மிகுந்த பரபரப்பு அடைந்தனர். அவர் சோற்றுக்குக் கேடான ஓர் எளிய சமணத் தொண்டராய் இருந்திருந்தால், அவர் சைவத்திற்கு மீண்டதற்காகச் சமணர்கள் கவலைப்பட்டிருக்கமாட்டார்கள். தலைசிறந்த தலைவனை இழந்துவிட்ட ஏமாற்றத்தால்-ஏக்கத்தால், சமணர்கள் பல்லவ மன்னனின் துணைகொண்டு நாவுக்கரசரைச் சுண்ணாம்பு நீற்றறையில் இட்டனர்; நஞ்சூட்டினர், யானையைக் கொண்டு தலையை இடறச்செய்ய முயன்றனர்; கல்லிலே கட்டிக் கடலிலே எறிந்தனர்; இன்னும் என்னென்னவோ தொல்லைகள் தந்தனர். எல்லாக் கொடுமைகளினின்றும் நாவுக்கரசர் தப்பினார்; நாட்டு மன்னனையும் மக்களையும் மீட்டு நாட்டில் சைவத்தை நிலைநாட்டினார்.

இவர் திருவதிகைச் சிவன் திருமுன்பு, 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்னும் திருப்பதிகம் பாடிச் சூலைநோய் நீங்கப் பெற்றதும், இவரது நாவன்மையை - சொல்வன்மையைப் பாராட்டி இறைவன் இவரை 'நாவுக்கரசு' என அழைத்ததாகச் சொல்லப்படுகின்றது. இவர் சீர்காழிசென்று திருஞானசம்பந்தரைக் கண்டபோது, அவர் இவரை 'அப்பரே' வருக என அழைத்தாராம். பிற்காலத்தில் இவர்க்குத் திருநாவுக்கரசர், அப்பர் என்னும் இரு பெயர்களும் நின்று நிலைத்துவிட்டன. வாகீசர், ஆளுடைய அரசு எனவும் இவர் அழைக்கப்படுவதுண்டு

நாவுக்கரசர் நடுநாடு, சோழநாடு, தொண்டைநாடு, பாண்டி நாடு ஆகிய இடங்கட்கெல்லாம் முறையே சென்று ஆங்காங்குள்ள திருப்பதிகள் தோறும் இறைவனை வணங்கித் திருப்பதிகங்கள் பல பாடியருளினார்; பல வியத்தகு நிகழ்ச்சிகளும் புரிந்தார். கைலை கண்டு வணங்கவேண்டும் என வடநாடு நோக்கிக் காசிவரையும் சென்றார். கைலை செல்வது அரிது என உணர்த்தப்பட்டுத், தென்னாட்டிலுள்ள திருவையாறு அடைந்து அங்கே கைலைக் கோலத்தைக் கண்டு வழிபட்டாராம். இந்தக் காலத்தைப் போல் போக்குவரவு வசதியில்லாத அந்தக் காலத்தில் காலே துணையாக அவ்வளவு தொலைவு பயணம் செய்ததை எண்ணும்போது, அடுத்த தெருவிற்கு வண்டியில் செல்லும் இருபதாம் நூற்றாண்டினர்க்குத் தலை சுற்றத்தான் செய்யும் அப்பர் பெருமான் பற்பல ஊர்கட்கும் சென்று பண்ணோடு தேவாரப் பாமாலை பல புனைந்து தமிழ்மொழியையும் தமிழ்நாட்டையும் ஒருசேர வளப்படுத்தி இறுதியில் திருப்புகலூரில் எண்பத்தோராவது வயதில் சித்திரைச் சதய நாளில் இறைவனடி சேர்ந்தார்.


**அப்பர் பிறந்த மனை**

திருவாமூரில் அப்பர் பிறந்த மனை மிகவும் பொலிவுற்றுத் திகழ்கின்றது. இதுதான் அப்பர் பிறந்த மனை என அவ்வூரார் வழிவழியாக அறிந்து வைத்து வந்துள்ளனர். அந்த மனை 'வெள்ளாழர் மனை' என ஊர்மக்களால் வழக்கப்படுகிறது. வெள்ளாழர் என்பது வேளாளர் என்பதன் கொச்சை உருவம். அப்பர் வேளாள மரபைச் சேர்ந்தவராதலின், அவர் பிறந்த மனை 'வேளாளர் மனை' என வழங்கப்படுவதில் தக்க பொருத்தம் உள்ளது. இதுதான் அப்பர் பிறந்த மனை என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்று அவ்வூராரைக் கேட்டதற்கு, 'வெள்ளாழர் மனை என்ற பெயரே போதிய ஆதாரமாயிற்றே' என்ற பதில் கிடைத்தது. அந்த மனையில் அப்பர் நினைவாக அவருக்கு அழகிய திருக்கோயில் கட்டப்பட்டு .4-7-1963 இல் குடமுழுக்கும் நடத்தப்பட்டுள்ளது. அடுத்த பக்கம் உள்ள படத்தில் அந்தக் கோயிலின் தோற்றத்தில் ஒரு பகுதியைக் காணலாம்,



படத்தில் கோயிலுக்குச் செல்லும் முகப்பு வாயிலில், 'திருநாவுக்கரசு நாயனார் திருக்கோயில்' என்னும் தொடர் பொறிக்கப்பட்ட வளைவினைக் காணலாம். கோயிலின் கருவறையில் திருநாவுக்கரசரின் அழகிய திருவுருவம் பொலிவுடன் திகழ்கிறது. திருநாவுக்கரசரின் திருமுன் (சந்நிதி) கிழக்கு நோக்கியுள்ளது. கோயிலின் வாயில் வடக்கு நோக்கியுள்ளது.

திருநாவுக்கரசர் பிறந்த திருமனையின் பெருமையை அறிவிக்கும் அறிகுறியாகவும், அவர் பிறந்த மனை இதுதான்



அப்பர் மனை - அப்பர் கோயில்

என்பதை நிலைநாட்டும் தெய்வச் சான்றாகவும், திருநாவுக்கரசர் திருக்கோயிலின் தென்மேற்கு மூலையில் 'களரிவாகை' என்னும் ஒருவகை மரம் காணப்படுகின்றது.

களரிவாகை என்னும் பெயருடைய அம் மரம், ஐந்நூறு அறுநூறு ஆண்டுகளாக அந்த இடத்தில் இருப்பதாகத் திருவாமூர் மக்கள் தெரிவிக்கின்றனர். இன்னும் கேட்டால்,

அம் மரத்தின் வயது என்ன? எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன் அம் மரம் தோன்றியது என்று எவரும் திட்டவட்டமாகக் கூற முடியாதபடி மிகப் பழங்காலந்தொட்டு அம் மரம் இருந்து வருவதாக வாழையடி வாழையாகப் பெரியவர்கள் சொல்லி வருவதாகச் சிலர் கூறுகின்றனர். மரம் நன்கு தழைத்து அகன்று பரந்துள்ளது. அம் மரத்தின் இலையும் கனியும் பட்டையும் பல்வகை நோய்களைப் போக்கக் கூடியவை என்றும், நச்சுக் கடிகட்கு நல்லவை என்றும் சொல்கின்றனர். எவ்வளவு சொன்னாலும் கேட்காமல் மக்கள் மரத்தின் பட்டையை உரித்துக்கொண்டு போய்விடுவதாகக் கூறிச் சிலர் வருத்தம் தெரிவித்தனர். திருநாவுக்கரசரின் பெருமைக்கு ஒரு தெய்வச் சான்றாக உள்ள அக் களரி வாகை மரம், இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நின்று நிலைத்துச் செழித்து வாழ்க!

## சுந்தரர்

**வரலாறு:**

சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தரர் கெடிலத்தின் வடகரையிலுள்ள திருநாவலூர் என்னும் ஊரில் தோன்றினார். தந்தையார் சடையனார் என்னும் பெயரினர்; தாயார் இசை ஞானியார் என்பவர். இவ்விருவரும் சைவ நாயன்மார் அறுபத்து மூவர் வரிசையில் வைத்துப் போற்றப் படுகின்றனர். திருக்கோயிலில் பூசனை புரியும் குருக்கள் மரபில் தோன்றிய சுந்தரரை, அவ்வூர் அரசர் நரசிங்கமுனையரையர் எடுத்து வளர்த்து ஆளாக்கியதாகச் சொல்லப்படுகின்றது. இவரது இளமைப்பெயர் 'நம்பியாரூரர்' என்பது.

புத்தூர் என்னும் ஊரில் சுந்தரர்க்குத் திருமண ஏற்பாடு நடந்தது. சிவபூசையில் கரடி விட்டாற்போல், திருமண வேளையில் கிழ அந்தணர் ஒருவர் வந்து சுந்தரரை நோக்கி 'நீ என் அடிமை' என வாதிட்டார். சுந்தரர், 'நீ ஒரு பித்தன்; நான் உன் அடிமை அல்லன்' என மறுத்தார். மணம் தடைப் பட்டது. இருவரும் வழக்கிட்டுக்கொண்டு திருவெண்ணெய்



நல்லூரிலிருந்த அறமன்றம் போந்தனர். வந்த அந்தணரே வழக்கில் வென்றார்.

இந் நிகழ்ச்சிக்குக் காரணமாக முற்பிறவி நிகழ்ச்சியொன்று பெரிய புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்பிறவி நிலையில் சுந்தரர் கைலாயத்தில் ஆலால சுந்தரர் என்னும் பெயருடன் சிவனுக்குத் தொண்டு புரிந்து வந்தாராம். ஒரு நாள் மலர் கொய்ய மலர்வனத்திற்குச் சென்றிருந்தார். அங்கே, பார்வதி தேவியின் தொண்டர்களாகிய அநிந்திதை, கமலினி என்னும் மகளிர் இருவரையும் கண்டு காதல் கொண்டார். அக் குற்றத்திற்காக மூவரும் மண்ணுலகில் சென்று பிறக்கும்படி பணிக்கப்பட்டனர். ஆலால சுந்தரர் அஞ்சித் தம்மை ஆட்கொள்ளும்படி இறைவனை வேண்டினார். அவ்வாறே செய்வதாக இறைவன் அருள் புரிந்தார். பின்னர், ஆலால சுந்தரர் திருநாவலூரில் நம்பியாரூரராய்த் தோன்றினார். கமலினி திருவாரூரில் பரவையார் என்னும் பெண்மணியாகவும், அநிந்திதை திருவொற்றியூரில் சங்கிலியார் என்னும் பெண்மணியாகவும் பிறந்தனர். இது புராணக்கதை.

இந்தக் கதைக்கு ஏற்பச், சிவபெருமான் கிழ அந்தணராக வந்து, சுந்தரரின் திருமணத்தைக் கலைத்து வழக்கில் வென்று, உலகப்பற்றிலிருந்து அவரை ஆட்கொண்டதாகச் சொல்லப் படுகின்றது. அந்தணராக வந்து வழக்கு வென்ற இறைவன் கடவுட்கோலத்துடன் காட்சி தந்து 'பித்தன்' என்று வைத சுந்தரரை அவ்வாறே சொல்லிப் பாடும்படி பணிக்க, 'பித்தா பிறை சூடீ' என்று தொடங்கிப் பாடினாராம். இதுதான் சுந்தரரின் முதல் தேவாரப் பாடல்.

பின்னர்ச் சுந்தரர் பல திருப்பதிகட்கும் சென்று இறைவனை வணங்கித் தேவாரப் பதிகங்கள் பல பாடினார். திருவாரூர் சென்றபோது அங்கே பரவையாரை மணந்துகொண்டார். திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்துகொண்டார். இந்த இரண்டு திருமணங்கட்கும் பழைய கைலாய நிகழ்ச்சி காரணம் என்று புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

சுந்தரர்க்குச் சேர மன்னராகிய சேரமான் பெருமாள் நாயனார் சிறந்த நண்பரானார். சுந்தரர் திருவஞ்சைக்களம் என்னும் திருப்பதி போந்து திருக்கோயில் வழிபாடு செய்து கொண்டிருந்தபோது, சிவனது கட்டளைப்படி தேவர்கள் வெள்ளையானை கொண்டுவந்து அதில் இவரை அமர்த்திக் கைலைக்கு அழைத்துச் சென்றதாகவும், அஃதறிந்த சேரமானும் குதிரைமீதமர்ந்து சுந்தரருடன் கைலை சேர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

**சுந்தரர் பிறந்த மனை**

சுந்தரர் சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சிறப்புப் பெயராலும், நம்பி ஆரூரர் என்னும் பிள்ளைமைப் பெயராலும் அழைக்கப்படுவதல்லாமல், திருநாவலூரில் பிறந்து வளர்ந்தவரானதால், திருநாவலூரார் என ஊர்ப் பெயராலும் வழங்கப்படுகின்றார். இவர் பிறந்த மனை இஃது என இன்றும் திருநாவலூரில் சுட்டிக் காட்டப்படுகின்றது. அந்த மனை, திருநாவலூர்க் கோயிலுக்கு வடபுறமாகப் பக்கத்திலேயே உள்ளது. கோயில் பூசனை புரியும் குருக்கள் மரபினர் கோயிலுக்குப் பக்கத்திலேயே வீடு அமைத்துக்கொண்டு இருப்பது வழக்கம். சுந்தரர் குருக்கள் மரபினராதலால், கோயிலுக்குப் பக்கத்தில் சுட்டிக் காட்டப்படும் அந்த மனையைச் சுந்தரர் பிறந்த மனையாகத் துணிந்து நம்பலாம். அந்த மனையில் சுந்தரர் நினைவாக இப்போது ஒரு கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

இயற்கைச் சூழ்நிலையில் அமைக்கப்படும் இந்தக் கட்டடம், சுந்தரர் நினைவை என்றென்றும் உலகிற்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கும். சுந்தரர்க்குத் திருநாவலூரில் இந்த நினைவு மாளிகை எழுப்பப்படுவதல்லாமல், பெரிய திருக்கோயிலுக்குள் அவருக்கென்று தனியாகச் சிறிய திருக்கோயில் ஒன்றும் எழுப்பப்பட்டுள்ளது. திருக்கோயிலில் உள்ள சுந்தரரின் வார்ப்படச் சிலை, சுந்தரர் என்னும் பெயருக்கு ஏற்ப மிகவும் அழகாகக் கவர்ச்சியாக உள்ளது. கெடிலக்கரையில் பிறந்து வளர்ந்து தேவாரப் பாடல்கள் பல பாடித் தமிழையும் சமயத்தையும் வளப்படுத்திய சுந்தரர் புகழ் நீடு வாழ்க!



'திருநாவுக்கரசரும் சுந்தரரும் பிறந்ததால் திருமுனைப்பாடி நாடு நாடுகளுக்குள் மிகச் சிறந்ததாகும்; இதற்கு மேல் இந்நாட்டிற்கு இன்னும் என்ன பெருமை வேண்டும்? இஃதொன்றே போதும்'—எனச் சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறியுள்ள கருத்து ஈண்டு நினைவு கூரத்தக்கது.

## மெய்கண்ட தேவர்

**சந்தான குரவர் :**

சைவ மதத்தில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்க வாசகர் ஆகிய நால்வரையும் 'சமய குரவர் நால்வர்' அல்லது 'சமயாசாரியார் நால்வர்' என அழைப்பது மரபு. அதுபோலவே, மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்னும் நால்வரையும் 'சந்தான குரவர் நால்வர்' அல்லது 'சந்தானாசாரியார் நால்வர்' எனச் சைவர்கள் அழைப்பர். இந்தச் சந்தான குரவர் நால்வருமே தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்; முன் இருவருமோ, முறையே கெடிலம் பாயும் திருக்கோவலூர் வட்டத்தையும் கடலூர் வட்டத்தையும் சேர்ந்தவர்கள். இந் நால்வர்க்குள்ளும் முதல் ஆசான் மெய்கண்ட தேவர். மெய்கண்டார் எனவும் இவர் அழைக்கப்படுவார்.

**பிறப்பு :**

மெய்கண்டார், நடுநாடு எனப்படும் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள பெண்ணாகடம் என்னும் ஊரில் வேளாளர் மரபில் தோன்றினார். தந்தை பெயர் அச்சுதக் களப்பாளர். இவரை இவர் தாய்மாமன் திருக்கோவலூர் வட்டத்திலுள்ள திருவெண்ணெய் நல்லூருக்குக் குழந்தைப் பருவத்திலேயே அழைத்துச்சென்று வளர்த்து வந்தார். இவரது இளமைப் பெயர் 'சுவேதவனன்' என்பது.

## [illegible]:

சுவேதனன் இளமையிலேயே மெய்யுணர்வு உடையவராய்த் திகழ்ந்தார். ஒரு நாள் இவர் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தபொழுது பரஞ்சோதி முனிவர் என்பார் இவருக்கு மெய்யறிவு கொளுத்தி 'மெய்கண்டார்' என்னும் சிறப்புப் பெயர் ஈந்து சென்றார். மெய்கண்டார் சைவசித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகளை ஆய்ந்துணர்ந்து 'சிவஞான போதம்' என்னும் சிறந்த நூல் ஒன்று இயற்றினார்.

## அறிவாசான்:

மெய்கண்டார் குடும்பத்தாருக்குத் திருத்துறையூர்ச் சகலாகம பண்டிதர் என்பவர் குருவாவார். இவர் ஆதிசைவ அந்தணர் மரபைச் சேர்ந்தவர். குருவாகிய இவரிடம் அறிவு பெற மெய்கண்டார் செல்லவில்லை. அதனால் இவரே மெய்கண்டாரிடம் வராத காரணம் வினவச் சென்றார். அப்போது மெய்கண்டார் ஆணவத்தைப் பற்றி மாணாக்கர்கட்கு விளக்கிக்கொண்டிருந்தார். 'ஆணவம் எப்படியிருக்கும்' என்று சகலாகம பண்டிதர் மெய்கண்டாரைக் கேட்டார். 'இதோ இப்படித்தான் இருக்கும்' என்று மெய்கண்டார் பண்டிதரையே சுட்டிக் காட்டினார். பின்னர்ப் பண்டிதர் உண்மை தெளிந்து மெய்கண்டார்க்கு மாணாக்கரானார். மாணவர் குருவாகவும் குரு மாணவராகவும் மாறியது வியப்பே. மற்றும், வேளாள மரபினர் ஒருவர், ஆதிசைவ அந்தணக் குருக்கள் மரபினருக்கு அறிவாசானாக (ஞானகுருவாக) விளங்கியது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. மெய்கண்டார் சகலாகம பண்டிதர்க்கு மெய்யறிவு நல்கி 'அருள் நந்தி' (அருணந்தி) என்னும் திருப்பெயரையும் சூட்டினார். இத்தகு சிறப்பிற்குரியவர் மெய்கண்டார். இவருக்கு அருணந்தி உட்பட மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மர் இருந்தனர்.

மெய்கண்டார் காலம் பதின்மூன்றும் நூற்றாண்டின் நடும் பகுதி எனச் சொல்லப்படுகின்றது.



## அருணந்தி சிவாசாரியார்:

இவர் கடலூர் வட்டத்தில் பண்ணுருட்டிக்கு வடமேற்கே 10 கி. மீ. தொலைவிலுள்ள திருத்துறையூர் என்னும் ஊரில் ஆதிசைவ அந்தண மரபில் தோன்றினார். இவரது இயற்பெயர் சதாசிவம். இவர் பலவகைக் கலை நூல்களையும் கற்றுப் பெரும் புலவராய் விளங்கியதால் 'சகலாகம பண்டிதர்' என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்பட்டார்.

சகலாகம பண்டிதர், குல மரபுப்படி தம் மாணாக்கரான திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவரால் மெய்யறிவு கொளுத்தப்பட்டு அநுள் நந்தி என்னும் சிறப்புப் பெயர் பெற்ற வரலாறு முன்னரே கூறப்பட்டுள்ளது. இவர் சந்தானாசாரியார் நால்வர் வரிசையில், மெய்கண்டாருக்கு அடுத்தபடி இரண்டாம் தகுதி உடையவர். இவர் இயற்றிய நூல்கள்: சிவஞானசித்தியார், இரு பா இருபஃது என்பன. காலம்: பதின்மூன்றும் நூற்றாண்டெனக் கருதப்படுகின்றது.

## மனவாசகம் கடந்தார்:

இவர் கடலூர் வட்டத்தில் கெடிலத்தின் வடகரையிலுள்ள திருவதிகையில் பிறந்தவர். இதனால், இவர் 'திருவதிகை மனவாசகம் கடந்தார்' என அழைக்கப்படுவார். முதல் சந்தான குரவராகிய மெய்கண்டாரின் மாணவருள் இவரும் ஒருவர். இவர் 1255 ஆம் ஆண்டளவில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. இவர் 'உண்மை விளக்கம்' என்னும் உயரிய நூல் ஒன்று இயற்றியுள்ளார்.

## வேதாந்த தேசிகர்:

கெடிலம் ஆற்றின் கரையிலுள்ள ஒரே வைணவத் திருப்பதி திருவயிந்திரபுரமாகும். இங்கேதான் வேதாந்த தேசிகர் என்னும் வைணவப் பெரியார் வாழ்ந்து நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் இயற்றினார். இவர் கெடிலக்கரையில் வாழ்ந்து பெருமையுற்றிருப்பினும், இவர் பிறந்தது பாலாற்றங்

கரை. இவர் காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாகிய துப்புல் என்னுமிடத்தில் அனந்தசூரி என்னும் பெரியாருக்கும் தோதாரம்பையார் என்னும் அம்மையாருக்கும் 1269 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இளமைப் பெயர் வேங்கடநாதன் எனபதாகும். இருபது வயதிற்குள் பல்கலை நூல்களும் பயின்று பெரிய அறிஞரானார். காஞ்சியினின்றும் வந்து திருவயிந்திரபுரத்தில் நிலையாகத் தங்கிப் பல்லாண்டுகள் இருந்தார். தமிழிலும் வடமொழியிலும் கைதேர்ந்த வேங்கடநாதர் அவ்விரு மொழிகளிலும் நூற்றுக்கும் மிக்க தரமான நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய தமிழ்ப் படைப்புக்கள் ஆழ்வார்களின் அருட் பாடல்களுக்கு ஒப்பான பெருமையுடையவை எனவும், வடமொழிப் படைப்புக்களிற் பல காளிதாசன், வால்மீகி போன்ற மாபெரு வடமொழி அறிஞர்களின் படைப்புக்களோடு ஒத்த தகுதி உடையவை எனவும் போற்றப்படுகின்றன.

வேங்கடநாதர் தமிழ்மொழிக்காக ஆற்றியுள்ள தொண்டு மிகப் பெரிய பெறுமானம் உடையது. தமிழில் பல நூல்கள் இயற்றியிருப்பதோடு இவரது தமிழ்த் தொண்டு அமைந்துவிடவில்லை; அதனினும் மிக்கது இவரது தமிழ்த்தொண்டு. இவர் செய்திருப்பது போன்ற செயல்களை இக் காலத்தினர் சிலர் ‘தமிழ்வெறி’ என்றுகூடச் சொல்லக் கூடும். ‘வடமொழியே உயர்ந்தது தமிழ்’ தாழ்ந்தது’ என்று பலர் எண்ணியும் பேசியும் எழுதியும் வந்த சூழ்நிலையில், “வடமொழிக்குத் தமிழ்மொழி எவ்வகையிலும் குறைந்ததில்லை. வடமொழி போன்றே தமிழ்மொழியும் மிகவும் உயர்ந்தமொழி; தமிழில் ஆழ்வார்கள் அருளியுள்ள பாடல்கள், வடமொழியிலுள்ள வேதங்களுக்கு ஒப்பான பெருமை உடையவை; அவை தமிழ் வேதங்கள் எனப்படும்” என்றெல்லாம் அடித்துப் பேசியும் எழுதியும் தமிழின் பெருமையை நிலைநாட்டினவர் வேங்கடநாதர். திருவரங்கப் பெருமான், இவரது தமிழ் அன்பையும் அறிவையும் அறிந்து வியந்து இவருக்கு ‘உபய வேதாந்தாசாரியர்’ என்ற விருதுப் பெயரை ஈந்ததாகக் கூறுவர். உபயம் என்றால் இரண்டு. அஃதாவது, ‘இருமொழிகளிலும் வல்ல வேதாந்த ஆசிரியன்’ என்பது அதன் பொருள். அதிலிருந்து இவர் வேதாந்த



ஆசாரியர் எனவும் வேதாந்த தேசிகர் எனவும் அழைக்கப்படலானார். தேசிகர் என்றால் ஆசாரியர். தேசிகர் என்னும் பெயர் பொதுவாக ஆசாரியர்கள் அனைவர்க்கும் உரித்தான பெயர் என்றாலும் இவர் பிறந்தபின் இவரையே குறிக்கும் சிறப்புப்பெயராக மிளிர்கின்றது. இஃதொன்றே இவர் பெருமைக்குப் போதிய சான்று பகரும்.

வேதாந்த தேசிகரின் தமிழ்த்தொண்டு இம்மட்டோடும் நின்றுவிடவில்லை. பெருமாள்கோயில்களில் ஆழ்வார்களின் தமிழ்ப்பாடல்களைப் பூசனையின்போது பயன்படுத்தக் கூடாது என்று பலர் செய்த எதிர்ப்புகளுக்கிடையே, அவற்றைப் பயன்படுத்தியே தீரவேண்டும் என வாதிட்டு வெற்றியும் பெற்றார் வேதாந்த தேசிகர். இப்போது கோயில்களில் ஆழ்வார்களின் தமிழ்ப் பாடல்களும் நடமாடுவதைக் காணலாம்.

## வடலூர் வள்ளலார்

உலகில் கோடிக்கணக்கான மக்கள் தோன்றுகின்றனர்—வாழ்கின்றனர்—மறைகின்றனர். அவர்களுள் ‘தோன்றிற் புகழொடு தோன்றுக’ என்னும் வள்ளுவர் வாய்மொழிப்படி புகழோடு தோன்றி வாழ்ந்தவர்கள் விரல் விட்டு எண்ணத்தக்க அளவில் மிகச் சிலரேயாவர். அனைத்துலகையும் ஆட்டிப் படைத்த அரசர்கள், மாமல்லர்கள், மாபெருஞ் செல்வர்கள், இன்ன பிறரும் வரலாற்று நூல்களில் பொறிக்கப்பட்டதோடு நின்று மறைந்துவிடுகின்றனர். ஆனால், வள்ளல்கள், சமய குரவர்கள், புலவர்கள், புரட்சி எழுத்தாளர்கள் ஆகியோர் மட்டும் என்றும் மறைவதில்லை.

பாரி, குமணன், நோபெல், ராக்பெல்லர் முதலிய வள்ளல்கள் தாம் செய்த அறங்களாலும், புத்தர், ஏசு, முகமது நபி, நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய சமய குரவர்கள் தாம் நிறுவிய திருநெறிகளாலும், திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், காளிதாசர், சேக்சுபியர், விக்தோரிகோ முதலிய புலவர்கள் தாம் படைத்த இலக்கியங்களாலும், சுப்பிரமணிய பாரதியார், ருசோ,

…ன்ற புரட்சி எழுத்தாளர்கள் தம் புரட்சிக் கருத்துகளாலும் …ள் உள்ளங்களில் என்றும் நின்று நிலைத்துள்ளனர். …பெரும் புகழ்ச்சிக்கும் வணக்கத்திற்கும் உரிய இத்தலை…த்தாரின் இயல்புகளும் சிறப்புகளும் ஒருசேரப் பெற்றுத் திகழ்ந்தவர் வடலூர் வள்ளலார் எனப்படும் இராமலிங்க அடிகளாராவர். ஆம்! இவர் ஒரு வள்ளலாகவும்—சமய …ரவராகவும்—புலவராகவும்—புரட்சியாளராகவும் மிளிர்ந்தார்.

இத்தகு மாபெரும் பெரியார் இராமலிங்கர், தென்னார்க்காடு மாவட்டத்தில் தில்லைக்கு வடமேற்கே உள்ள மருதூர் என்னும் ஊரில், இராமையா பிள்ளை—சின்னம்மை என்பார்க்கு 5-10-1823 ஆம் நாள் பிறந்தார். இளமையிலேயே தந்தையை இழந்த இவர் தமையனார் ஆதரவில் இருந்து வந்தார். இவர் பள்ளிப் படிப்பில் போதிய திறமை காட்டாததால் தமையனார் கடிந்து கொண்டதுமுண்டு. இவர் தமையனாருடன் சென்னையில் இருந்தபோது, சென்னை முத்தியாலுப் பேட்டையில் தமையனார் ஆற்ற இருந்த சொற்பொழிவிற்கு அவர் செல்லமுடியாமற் போகவே, அவருக்குப் பதில் இவர் சென்று சிறந்த முறையில் சொற்பொழிவாற்றினார். அதிலிருந்து இராமலிங்கர் புகழ் எங்கும் பரவத் தொடங்கியது. பின்னர், இவர் சென்னையி லிருந்து சிதம்பரம் வந்து தங்கினார்.

இராமலிங்கர் பலரது வேண்டுகோளின்படி தனக்கோட்டி அம்மையார் என்பவரை மணந்துகொள்ளினும், புளியம் பழமும் ஓடும்போல் இல்லறத் துறவியாகவே இருந்து வந்தார்.

இராமலிங்கர் எல்லா வகை உயிரினங்களிடத்தும் பேரன்பும் பேரிரக்கமும் கொண்டிருந்தார். உலகத்தை, சாதி—சமய வேறுபாடற்ற ஒன்றிய ஒரே சமுதாயமாக மாற்றவேண்டு மென்று கனவு கண்டார். தம் கொள்கைகளை நிறைவேற்ற வடலூரில் ‘சத்திய ஞான சபை’ நிறுவினார்; ‘சத்திய தருமச்சாலை’ அமைத்தார்; ‘சமரச சன்மார்க்க சங்கம்’ ஒன்றும் உருவாக்கினார்.

வடலூர் கடலூர் வட்டத்தில், கடலூர்—விருத்தாசலம் போகும் வழியில் உள்ளது. அங்கே இராமலிங்க அடிகளாரால்



அமைக்கப்பட்டுள்ள ‘சத்திய ஞானசபை’ தாமரை வடிவில் எண்கோணமுடையதாய்ப் புதிய முறையில் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து காட்சியளிக்கிறது. அதிலே, அருளொளி வடிவினனான இறைவனை, ஏழு திரைகள் விலக்கி ஒளிக் காட்சியாய்க் காணும் ‘ஒளி வழிபாடு’ நடைபெறுகின்றது. பொது வாக எல்லாத் திங்களிலும் வரும் பூச நாளிலும்—சிறப்பாகத் தைப்பூச நாளிலும்—அங்கே திருவிழா நடைபெறும். தைப் பூசத்தில் நடைபெறுவதோ மிகப்பெரிய திருவிழாவாகும்.

வடலூரில் சத்திய ஞானசபை அமைத்த வள்ளலார், அதற்கு அண்மையில் தெற்கே 5 கி. மீ. தொலைவிலுள்ள மேட்டுக் குப்பம் என்னும் ஊரிலேயே தங்கியிருந்தார். அங்கே அவர் தங்கியிருந்த மனைக்குச் சித்திவளாகம் என்பது பெயர். அஃது எளிய குடில் வடிவில் இன்றும் திகழ்கிறது. இராமலிங்க அடிகளார் தம் வாழ்நாளின் இறுதியில் (1874 ஆம் ஆண்டு) ஒரு நாள் சித்திவளாகத்தின் ஓர் அறைக்குள் புகுந்து காப்பிட்டுக் கொண்டதாகவும், பின்னர் வெளிவரவே யில்லை என்பதாகவும் சொல்லப்படுகின்றது. ‘மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம் கண்டீர்’ என்று சாகாக் கலையை உலகிற்கு அறிவுறுத்திய அடிகளார் சாகாப் பெருநிலை எய்தினார்.

## திருவருட்பா

இராமலிங்க அடிகளாரின் மாணாக்கருள் ஒருவராய தொழுவூர் வேலாயுத முதலியார், அடிகளார் அருளியுள்ள பாடல்களையெல்லாம் ‘திருவருட்பா’ என்னும் பெயரில் தொகுத் துள்ளார். திருவருட்பா என்பதற்கு, இறைவன் திருவருளால் எழுந்த பாடல்—இறைவன் திருவருளைப் பற்றிய பாடல் என்றெல்லாம் பொருள் விளக்கம் கூறப்படுகின்றது. திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் (Volumes) பகுக்கப்பட்டுள்ளது. அருட்பாவில் இயல்தமிழ்ப் பாக்களோடு கீர்த்தனம், கண்ணி, கும்மி முதலிய இசைத்தமிழ்ப் பாக்களும் உள்ளன. பாடல்களே யன்றி, சீவகாருணிய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலிய இனிய உரைநடைகளும் அடிகளார் எழுதியுள்ளார்கள்.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டுமானால், இராமலிங்க அடிகளாரையும் அவரது அருட்பாவையும்பற்றி அறியாத தமிழர் உலகில் இல்லை எனலாம்.

## ஞானியார் அடிகளார்

இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் தமிழ்நாட்டில் 'ஞானியார் சுவாமிகள்' என்றால், சிறுவர் முதல் முதியோர் வரை—கற்றவர் கல்லாதவர், தொழிலாளர் அரசாங்க அலுவலர், ஏழையர் செல்வர் முதலிய பலரும் அறிவர். அருள்மிகு சமயத் தலைவராயும், கற்றுத் துறைபோகிய பெரும் புலவராயும் தலைசிறந்த பேச்சாளராயும் திகழ்ந்த திருவருட் செல்வர் ஞானியார் அடிகள். அவர்களிடம் முறையே பாடங் கேட்டுப் பெரும் புலவரானவர்கள் நூற்றுக்கணக்கானவர். அடிகளாரின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் புலமை பெற்றவர்கள் ஆயிரக்கணக்கானவர். அவர்தம் அறிவுரைகளைச் செவிமடுத்து நல்லறமும் நல்லொழுக்கமும் உடையவராய்த் திகழ்ந்தவர்கள் நூறாயிரக்கணக்கானவர்கள்.

### பிறப்பு வளர்ப்பு :

கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருநாகேசுரம் என்னும் திருப்பதியில், சீமுக ஆண்டு வைகாசித் திங்கள் நான்காம் நாள் (17—5—1873), வீரசைவ மரபினரான அண்ணாமலை என்னும் ஐயாவுக்கும் பார்வதி என்னும் அம்மையாருக்கும் திருமகனாராக அடிகளார் தோன்றினார். பெற்றோர் இட்ட பிள்ளைமைப் பெயர் 'பழநி' என்பது. காவிரிக்கரையில் பிறந்த பழநி, பிறந்த ஆறு திங்களுக்குள் கெடிலக்கரைக்கு வந்துவிட்டார்.

கெடிலம் சுற்றி வளைத்துக் கொண்டு ஓடும் திருப்பாதிரிப் புலியூர் நகர்பற்றி முன்பே பேசப்பட்டுள்ளது. அந்நகரில் கோயில் தெருவில் 'ஞானியார் மடாலயம்' என்னும் 'அருள் நெறியகம்' ஒன்று உள்ளது. அவ்வருள்நெறியகத்தின் தலைவராய் (மடாதிபதியாய்) அப்போது 'சிவ சண்முக



மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்' என்னும் அடிகளார் வீற்றிருந்தார். இவர் நான்காம் பட்டத்து அடிகளாராவர். இவருக்கு முன்பு அருள் நெறியகத் தலைவராய் மூவர் வீற்றிருந்தனர். முதல் பட்டத்து அடிகளார் திருக்கோவலூரில் அருள் நெறியகம் அமைத்து அருளாட்சி புரிந்து வந்தார். அவர்கட்கு 'ஆறுமுக சுவாமிகள்' என்பது அருள்நெறிப் பட்டப்பெயர். திருக்கோவலூரிலுள்ள தலைமை நிலையத்திற்கு, செஞ்சி, திருவண்ணாமலை, விருத்தாசலம், ஆரணி, திருப்பாதிரிப்புலியூர் முதலிய ஊர்களில் கிளை நிலையங்கள் ஏற்பட்டிருந்தன. அடிகளார் எல்லா ஊர் நிலையங்கட்கும் சென்று தங்கினரினும், திருக்கோவலூரிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தார். அவர்கள் இறுதி யெய்தியதும் அங்கேயே.

ஆறுமுக சுவாமிகட்குப் பின், இரண்டாம் முறை பட்டத்து அடிகளார் பெரும்பாலும் திருப்பாதிரிப்புலியூர் அருள்நெறியகத்திலேயே தங்கி வாழ்ந்து வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இன்று வரையும் அடுத்தடுத்துப் பட்டத்திற்கு வந்த அடிகளார் அனைவரும் திருப்பாதிரிப்புலியூர் நிலையத்தையே தலைமை நிலையமாகக் கொண்டுவிட்டனர். இருப்பினும், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடம், 'திருக்கோவலூர் ஆதீனம்' என்றே இன்றும் சிறப்பாக அழைக்கப்படுகிறது.

திருப்பாதிரிப் புலியூரில் அருளாட்சி புரிந்து வந்த நான்காம் பட்டத்து அடிகளார்க்கு, திருநாகேசுரத்தில் பிறந்த பழநியின் குடும்பத்தினர் உறவுமுறை உடையவர்கள். எனவே, அடிகளார், பழநியின் தந்தையைக் குடும்பத்துடன் பாதிரிப் புலியூருக்கு வந்து அருள் நெறியகத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே அவரும் ஆறு திங்களும் நிரம்பாத பச்சிளங் குழந்தை பழநியுடன் குடும்பத்தை அழைத்துக்கொண்டு வந்து பாதிரிப்புலியூரில் குடியேறினர்.

### பட்டம் சூடுதல் :

குழந்தை பழநி வளர்பிறையென வளர்ந்து வந்தது. தமிழ், தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைச் சிறுவர்

பழநிக்குக் கற்பிக்கப்பட்டன. 1889 ஆம் ஆண்டில் இளைஞர் பழநி 'பிரீ—மெட்ரிகுலேசன்' (Pre—Matriculation) வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது நான்காம் பட்டத்து அடிகள், தமக்கு உடல்நிலை மாறுபாடுற்று இறுதிநிலை அணுகிக் கொண்டிருப்பதை உணர்ந்தார்; பள்ளிப் படிப்பை நிறுத்திப் பழநிக்கு, விரோதி ஆண்டு ஐப்பதித் திங்கள் மூன்றாம் நாள் (20-11-1889) துறவு (சந்நியாசம்) ஈந்தார்; ஞானியார் மடத்தின் அருள் தலைவராகப் பட்டம் சூட்டினார்; 'சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்' என்னும் பட்டப் பெயரும் ஈந்தார். நான்காம் பட்டத்து அடிகளார் இறையடி யெய்த, பழநி தமது பதினேழாவது வயதில் ஐந்தாம் பட்டத்து அடிகளாராகப் பதவியேற்றார்.

இளமையிலேயே துறவறமும் அருளாசிரியத் தலைமையும் ஏற்ற ஐந்தாம் முறை அடிகளார், மடத்துச் சோற்றை வளமாக உண்டுகொண்டு வறிதே தசைமூட்டையை வளர்த்துக் கொண்டிருக்கவில்லை; தக்க ஆசிரியர்களை அமர்த்திக்கொண்டு தமிழ் மொழியையும் வடமொழியையும் பரந்த அளவில் பயின்று பெரும் புலமை பெற்றார், தமது நேரம் முழுவதையும் நூல் ஆராய்ச்சியிலேயே ஈடுபடுத்தினார்.

### அடிகளாரின் அருட்பணிகள்

கடல் நீரை முகந்து கறுத்துத் திரண்ட முகில்கள் பெரு மழை பொழிவது போன்று, சிறக்கக் கற்றுத் தெளிந்த அடிகளார் கருத்துச்செறிந்த சொல்மழை பொழியத் தொடங்கினார். ஒரு மணிநேரம் பேசினாலே பெருமூச்செறிந்து மின்விசிறியைவிட்டு அகலாதிருக்கும் பெருமக்கள் நிறைந்த இவ்வுலகில், அடிகளார் ஒரே நாளில் ஒரே மூச்சாக ஐந்து மணிநேரம் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவது வழக்கம். இவ்வாறு பல நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவார். யார் வேண்டுமானாலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தொடர்ந்து சொற்பொழிவாற்றலாம்—ஆனால், கேட்பதற்கு ஆட்கள் வேண்டுமே! மக்கள் ஐந்து மணிநேரம் தொடர்ந்து அமர்ந்து கேட்பதென்றால்,



மிகவும் கவர்ச்சியான, சுவையான, பயன்மிக்க கருத்துகளை வரையாது வாரி வழங்க வேண்டுமல்லவா? அதைத்தான் அடிகளார் செய்து வந்தார்.

ஒரு நாளில் மாலை ஐந்து மணி தொடங்கி இரவு பத்து மணி வரையும் சொற்பொழிவாற்றுவதோடு அடிகளாரின் பணி அமைந்துவிட்டதா? இல்லை யில்லை. நாடோறும் முற்பகலிலும் பிற்பகலிலும் இடையறாது மாறி மாறி வரும் மாணாக்கர்கட்கு மணிக்கணக்கில் பாடம் கற்பிப்பதில் அடிகளார் பொழுதைச் செலவிடுவார். மாணாக்கர் குழுவில் எளிய இளைஞர்களும் இருப்பர்; அரசாங்க உயர் அலுவலர்களும் இருப்பர். சொற்பொழிவாற்றும் நேரம் போக—பாடங்கற்பிக்கும் நேரம் போக—எஞ்சிய நேரங்களிலும் இடையறாது பலர் வந்து அடிகளாருடன் உரையாடிக்கொண்டிருப்பர். ஒவ்வோர் உரையாடலும் ஒரு பாடம் போலவே—ஒரு சொற்பொழிவு போலவே சுவை மிக்கதாய்—பயன் நிரம்பியதாயிருக்கும். தமிழை அடிகளாரின் திருவாயிலிருந்து கேட்க வேண்டும். உரையாடும் போதும், வழுவற்ற—கொச்சையில்லாத செவ்விய இலக்கண நடையிலேயே அடிகளார் பேசுவார். இத்தகு பயன் செறிந்த உரையாடல்களும் பாடங்களும் சொற்பொழிவுகளும் திருப்பாதிரிப் புலியூரில் மட்டுமன்று—அடிகளார் செல்லும் ஊர்களில் எல்லாம் நடக்கும். ஓராண்டன்று—ஈராண்டல்ல. தமது வாழ்நாள் முழுதும் அடிகளார் இந்த அருட்பணியை ஆற்றிவந்தார்கள்.

இப்படியொரு கல்விக் கடல்—அறிவுக் கதிர்—குணக்குன்று தன்னிடத்தே திகழக் கெடிலக்கரை நாடு மிகவும் கொடுத்து வைத்ததுதான்! கெடிலக்கரைக்குப் பெரும்புகழ் ஈட்டித்தந்த ஞானியார் அடிகளார் 1—3—1942 இல் 69 ஆம் வயதில் இறைவனடி எய்தினார்கள்.

### பல்வேறு பெருமக்கள் :

இதுகாறும் இப் பகுதியில், தன்னிடம் பிறந்தும்—வளர்ந்தும்—வந்து நிலையாகத் தங்கி வாழ்ந்தும் அருட்பணி

புரிந்த பெருமக்களால் திருமுனைப்பாடி நாடு பெற்ற பெரும்பேறு விளக்கப்பட்டது. இஃதன்றி, தன்பால் அவ்வப்போது வந்து சென்ற பெருமக்கள் பலரால் திருமுனைப்பாடி நாடு பெற்றுள்ள பெருமைக்கும் குறைவில்லை. திருஞானசம்பந்தர், மாணிக்க வாசகர், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், பட்டினத்தார் முதலிய பெருமக்கள் பலர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள பல ஊர்கட்கும் வந்தருளி இறைவனை வழிபட்டுப் பாடல்கள் பல பாடி நாட்டிற்குப் பெருமையளித்துள்ளனர். சமயப் பெரியார்களாகிய இவர்களன்றித், திருமுனைப்பாடி நாட்டிலேயே பிறந்து வளர்ந்த புலவர் பெருமக்கள் பலரும் அண்டைப் பகுதிகளிலிருந்து வந்த புலவர் பெருமக்கள் பலரும் திருமுனைப்பாடி நாட்டு ஊர்களின்மேல் பல இலக்கியங்கள் இயற்றியருளி நாட்டின் புகழைப் பெருக்கியுள்ளனர். இவர்களேயன்றித் திருமுனைப்பாடி நாட்டிற்குப் பெருமை தேடித் தந்ததில் பல்வேறு கலைஞர்கட்கும் பங்கு உண்டு. அனைவருடைய புகழும் திருமுனைப்பாடி நாட்டின் புகழுடன் ஒரு சேர வாழ்க!

---

## 10. கெடிலக் கரைத் துறைமுகம்


பெரிய துறைமுகங்களில் பெரும்பாலும் கப்பல்கள் கரையை யொட்டித் துறைமுகப் பகுதியிலேயே நிற்கும். சிறிய துறைமுகங்களிலோ, கரைக்கு வெகு தொலைவில் கடல் நடுவே கப்பல்கள் நின்றுகொண்டிருக்கும். பெரிய துறைமுகங்களில் கரைக்கும் கப்பலுக்குமாகப் பொறிகளின் துணைகொண்டு அப்படியே சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் செய்யலாம்; சென்னைத் துறைமுகத்தில் இப்படி நடப்பதை நேரில் காணலாம். ஆனால், சிறிய துறைமுகங்களிலோ, கரையோரத் துறைமுகப் பகுதிக்கும்—கடல் நடுவே நிற்கும் கப்பல்களுக்கும் இடையே படகுகள் தூதுபோய் வரும். படகுகளின் வாயிலாகவே சரக்குகளின் ஏற்றுமதி—இறக்குமதி நடைபெறும்.



சிறிய துறைமுகங்களிலும் பல வகை யுண்டு. கடற்கரையிலிருந்து படகுகள் சரக்குகளை ஏற்றிக்கொண்டு கப்பலுக்குச் செல்வதும், அதேபோல் கப்பலிலிருந்து ஏற்றிக்கொண்டு கரைக்கு வருவதுமாக உள்ளது ஒரு வகை. இத்தகைய இடங்களில் கரைக்கும் படகுக்குமாகச் சில அடி தொலைவாயினும் சரக்குகளைக் கைகளால் தூக்கிக்கொண்டு கால்களால் நடந்து போகவும் வரவும் வேண்டும். மற்றும், சரக்குகளின் கனத்துடன் கரையின் மணற்பகுதிக்கும்—ஓரளவு ஆழமான தண்ணீர்ப் பகுதிக்குமாகப் படகுகளை நகர்த்திக்கொண்டு போவதற்கும் வருவதற்கும் மனித முயற்சி பெரிதும் தேவைப்படுகிறது. இந்த நிலைமையைக் காரைக்கால் துறைமுகம் போன்றவற்றில் காணலாம். (காரைக்காலில் மழைகாலத்தில் மட்டும் அரசலாற்றின் வாயிலாய்ப் போக்குவரவு நடைபெறுவதுண்டு. மற்ற காலத்தில் முகத்துவாரம் அடைபட்டுவிடும்.) இன்னவை சிறிய துறைமுகங்களுக்குள் மிக மிகச் சிறிய வசதி குறைந்த துறைமுகங்களாம். இந்த வசதிக் குறைவைப் போக்குவதற்காக, கரையிலிருந்து கடலுக்குள் ஓரளவு தொலைவு வரையும் இரும்புப் பாலம் கட்டி ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்ற துறைமுகங்கள் மற்றொருவகை. இது செயற்கை முறைதான். இந்த நிலைமையைப் புதுச்சேரித் துறைமுகம், தூத்துக்குடித் துறைமுகம் முதலியவற்றில் காணலாம். இந்தப் பாலத்தின் முடிவில் கீழே கடலில் படகுகள் மிதந்துகொண்டிருக்கும். தரையிலிருந்து பாலத்தின் வழியாகச் சரக்குகளைக் கொண்டு சென்று படகுகளில் ஏற்றுவர். படகுகள் அவற்றைத் தொலைவில் நிற்கும் கப்பல்களில் கொண்டு போய் ஏற்றும். அதேபோல் கப்பல்களிலிருந்து சரக்குகள் படகுகளின் வழியாகப் பாலத்தை யடைந்து பின்னர்த் தரைக்குக் கொண்டுவரப்படும். இந்தப் பாலத்திலிருந்து அண்மையிலுள்ள புகைவண்டி நிலயத்திற்குப் புகைவண்டிப் பாதை இணைப்பு இருப்பதும் உண்டு. இது முன்னர்ப் புதுச்சேரியில் இருந்தது.

இவற்றினும், கெடிலக்கரைக் கூடலூர்த் துறைமுகம் வேறுபட்டது. இத்துறைமுகத்தில், மணலிலிருந்து படகுகளை வலிந்து ஓட்டிச் சென்று கப்பல்களை யடையவேண்டுவதில்லை.

செயற்கைத் துறைமுக அமைப்பான கடற்பாலமும் இங்கே வேண்டியது—தேவையும் இல்லை. கூடலூரிலுள்ள கெடிலக் கரைத்துறைமுகம் ஓர் இயற்கைத் துறைமுகமாகும். கடற்பாலத்தின் வேலையை இங்கே கெடிலத்தின் கிளையாகிய உப்பனாறு செய்துவிடுகின்றது. உப்பனாற்றிலிருந்து படகுகள் நேரே கடலுக்குள் புகுந்து கப்பல்களை அடைகின்றன. எனவேதான் இஃது இயற்கைத் துறைமுகம் எனச் சொல்லப்



கூடலூர்த் துறைமுகம்

படுகின்றது. ஏற்றுமதி—இறக்குமதிகள் உப்பனாற்றின் மேற்குக் கரையில் நடக்கின்றன. இந்தத் துறைமுகப் பகுதியில் உப்பனாறு வடக்கும் தெற்குமாக உள்ளது; பின்னர்த் தெற்கிலிருந்து கிழக்கு நோக்கி வளைந்து திரும்பிக் கடலை அடைகின்றது. கடல்நீரின் ஏற்ற வற்றத்திற்கு ஏற்ப உப்பனாற்றின் நீர் மட்டம் பார்த்துப் படகுகள் விடப்படும். உப்பனாற்றங்கரையில் இருக்கும் கூடலூர்த் துறைமுகத்தை மேலுள்ள படத்தில் காணலாம்.



இதுதான் கூடலூர்த் துறைமுகத்தின் படம். இஃது உப்பனாற்றின் மேற்குக் கரையில் நின்றுகொண்டு எடுத்த படம். ஆற்றுக்கு அப்புறம் இருப்பது கிழக்குக்கரை. கிழக்குக் கரையில் ஒரு பெரிய தோப்பு தெரிவதைக் காணலாம். அந்தத் தோப்பில் மரங்கள் நீண்டு உயர்ந்திருப்பது தெரியும். ஆனால், அத்தனை மரங்களும் இலைதழை இல்லாத மொட்டை மரங்களே. இந்த மரங்களில் எப்போதுமே இலை—தழைகள் இருப்பதில்லை. அப்படியென்றால் இஃது என்ன தோப்பு? இது தோணித் தோப்பு. அஃதாவது, தோப்பு ஒன்றுமில்லை; கிழக்குக் கரையில் நூற்றுக்கணக்கான தோணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீண்டு உயர்ந்து தெரியும் மரங்கள் எனப்படுபவை, தோணிகளின் நடுவே உள்ள பாய்மரங்களே. அந்தப் பாய்மரங்களின் எண்ணிக்கையைக் கொண்டு தோணிகளின் எண்ணிக்கையை அறியலாம். படத்தில் தோணிகள் தனித்தனியாகத் தெரியவில்லை. ஏதோ ஐந்து அல்லது பத்துத் தோணிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தால் தோணிகளின் உருவம் தனித்தனியாகத் தெரியும். கணக்கற்ற தோணிகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கும்பலாய்க் குவிந்திருக்கும் இடத்தில் தனித்தனி உருவம் எப்படித் தெரியும்? இந்தக் காட்சியைக் கொண்டு, கூடலூர்த் துறைமுகத்தின் தகுதியை நாம் மதிப்பிட முடியும்.

படத்தில் நமது வலக்கைப் பக்கமாக—அஃதாவது ஆற்றின் மேற்குக் கரையிலும் சில தோணிகள் நின்றுகொண்டிருக்கக் காணலாம். அந்தத் தோணிகளில் சரக்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருக்கின்றது. இந்தப் படம் எடுத்தபோது, சேலம், ஹாஸ்பெட் ஆகிய இடங்களிலிருந்து புகைவண்டி வாயிலாக வந்த இரும்புக் கனிக் கற்கள் தோணிகளில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. இவை, சப்பானுக்கும், ஐரோப்பாவிலுள்ள மேற்கு செர்மனி முதலிய நாடுகட்கும் அனுப்பப்படுகின்றனவாம்.

இந்தத் துறைமுகப் பகுதியில் உப்பனாறு ஏறக்குறைய 'முக்கால் பர்லாங்கு' அகலம் உள்ளது. அதனால் தோணிகள் வசதியாக இயங்கமுடிகின்றது. கூடலூர்ப் புகைவண்டி சந்திப்பு

நிலையத்திலிருந்து துறைமுகப் பகுதிக்குப் புகைவண்டிப் பாதைத் தொடர்பு இருக்கின்றது. சரக்குகளைச் சுமந்துகொண்டுவரும் புகைவண்டிப் பெட்டி ஆற்றின் கரையிலேயே வந்து நிற்கும். புகைவண்டிப் பெட்டியிலிருந்து சரக்குகளை எளிதாகத் தோணியில் இறக்கலாம்; அதேபோல் தோணியிலிருந்து பெட்டியில் ஏற்றலாம். சிறுபிள்ளைகளும் இந்த வேலையைச் செய்யும் அளவுக்கு அவ்வளவு அண்மையில் கரையை யொட்டித் தோணிகளும் உள்ளன—புகைவண்டிப் பெட்டிகளும் உள்ளன. இதற்கேற்றாற் போல், ஆற்றின் கரை படிப்படியான சரிவாயில்லாமல் செங்குத்தாய்த் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருக்கின்றது.

துறைமுகப் பகுதியில் நின்றுகொண்டு கிழக்கே நோக்கினால், இடையிலேயுள்ள அக்கரை எனப்படும் கழிமுகத் தீவுக்கு அப்பால் கடலிலே கப்பல்கள் நின்றுகொண்டிருப்பதைக் காணலாம்.

**பெரிய சிறிய துறைமுகம்:**

கூடலூர்த் துறைமுகம் சிறிய துறைமுகமே யெனினும் சிறிய துறைமுகங்களுக்குள் பெரிய துறைமுகமாகும். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் நான்கு பெரிய நல்ல துறைமுகங்கள் உள்ளன. அவை: (1) தமிழ் மாநிலத்திலுள்ள சென்னைத் துறைமுகம், (2) ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினம் துறைமுகம், (3) ஒரிசா மாநிலத்திலுள்ள பாராதிப் (Paradip) துறைமுகம், (4) மேற்கு வங்காள மாநிலத்திலுள்ள கல்கத்தா துறைமுகம் ஆகியவையாம். இந் நான்கனுள் கல்கத்தா துறைமுகம் கடற்கரையில் இல்லை. உள்ளே வெகு தொலைவு தள்ளி ஃகூக்ளி ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டுள்ளது. மற்ற மூன்றும் வங்கக் கடற்கரையில் உள்ளன. தமிழ்நாட்டின் தூத்துக்குடித் துறைமுகத்தை, இந் நான்கிற்கும் அடுத்த படியாகப் பெரிய துறைமுகங்கள் பட்டியலின் இறுதியில் சேர்க்கலாம். அஃதாவது, இஃது இரண்டாந்தரப் பெரிய துறைமுகமாகும். இந்தப் பெரிய துறைமுகங்கள் தவிர, ஒவ்வொரு மாநிலத்திலும் வங்கக் கடற்கரையில் சிறிய துறைமுகங்கள் சிற்சிலவும் உள்ளன. ஒரிசா மாநிலத்திலுள்ள 'ஃபால்ஸ்



பாயின்ட்' (False point) துறைமுகமும் தர்மா துறைமுகமும், ஆந்திர மாநிலத்திலுள்ள காகிநாடா துறைமுகமும், மசூலிப்பட்டினம் துறைமுகமும், தமிழ்மாநிலத்திலுள்ள கூடலூர்த் துறைமுகமும், நாகப்பட்டினம் துறைமுகமும் புதுவை மாநிலத்திலுள்ள புதுச்சேரித் துறைமுகமும், காரைக்கால் துறைமுகமும் சிறியவை. இந்தத் துறைமுகங்களுக்குள் புதுச்சேரியில் கடற்பாலம் வழியாகவும், மற்ற இடங்களில் ஆற்றங்கழி வழியாகவும் ஏற்றுமதி - இறக்குமதிகள் நடைபெறுகின்றன. இந்தச் சிறிய துறைமுகங்களுக்குள் மிகப் பெரியது கூடலூர்த் துறைமுகம். அஃதாவது, இந்தியாவின் கிழக்குக் கரையிலுள்ள சிறிய துறைமுகங்களுக்குள் பெரிய துறைமுகம் கூடலூர்த் துறைமுகமே.

**பாடல் பெற்ற பழைய துறைமுகம்**

தமிழ்மாநிலத்திற் தொண்டை நாட்டின் துறைமுகமாயிருந்த மாமல்ல(மகாபலி)புரமும், சோழ நாட்டின் துறைமுகமாயிருந்த காவிரிப்பூம் பட்டினமும், பாண்டி நாட்டின் துறைமுகமாயிருந்த கொற்கையும், சேரநாட்டின் துறைமுகமாயிருந்த முசிறியும், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே சங்க இலக்கியங்களில் பழம் பெரு முதுபுலவர்களால் பாராட்டிப் பாடப்பட்டுள்ளன. அந்தோ! அந்தத் துறைமுகங்கள் இப்போது எங்கே? அனைத்துலக நாடுகளுடன் பெரு வாணிகம் புரிந்த அந்தப் பழம்பெருந் துறைமுகங்கள் இப்போது எங்கே? உலகின் பல நாட்டினரும் வந்து சூழ்ந்து மொய்த்துக்கொண்டிருந்த அந்த மாபெருந்துறைமுகங்கள் இப்போது எங்கே? அவற்றைப் பேணிக் காத்து வந்த தமிழரசர்கள் இப்போது எங்கே? அந்தோ தமிழகமே! நீ அளியை!

தமிழகத்தின் பழம் பெருந் துறைமுகங்கள் மறைந்துவிடினும், நடு நாடு எனப்படும் திருமுனைப்பாடி நாட்டின் துறைமுகமாகிய பழைய கூடலூர்த் துறைமுகமாவது இன்னும் 'கண்ணை - மூஞ்சை' காட்டிக்கொண்டிருப்பது ஒரு நற்பேறு. பழம்பெரு நூல்களில் இல்லாவிடினும், பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட திருப்பாதிரிப் புலியூர்ப் புராணத்தில், கெடிலக்

கினையின் வாயிலாக நடைபெறும் கூடலூர்த் துறைமுகம் பாராட்டிப் பாடப்பெற்றுள்ளது. இங்கிருந்து சிங்களம், சோனகம், கொங்கணம், கன்னடம் முதலிய நாடுகளுடன் கப்பல் போக்கு வரவு இருந்ததாம். பல நாடுகளிலிருந்தும் பல்வகைப் பொருள்கள் வந்து குவிந்தனவாம். இச் செய்திகளை, திருப் பாதிரிப் புலியூர்ப் புராணம் - திருநகரப் படலத்திலுள்ள,

* 'சிங்களம் சோனகம் சென்று பின்னரும்
கொங்கணம் கன்னடம் குறுகி மீட்டும்
வங்கம் வெந் நரகினுஞ் சுவர்க்க மற்றினும்
தங்கிமீள் சூக்குமத் தனுவை மானுமால்' (15)

'பன்னிறக் கோசிக மணிப் பரப்பு மற்று
உன்னரும் பொருளெலாம் ஒருங்கு தாங்கிவந்து
இந்நகர்க்கு உதவிய வங்கம் யாவையும்
தன்னிடம் தருமரு மாயை சாலுமால்' (17)

'எவ்வகைத் தேசத்தின் வளமும் இந்நகர்க்
கவ்வியந் தீர்தரக் கொணர்ந் தளிக்குமந்
நவ்வியை நால்வகைப் பொருளு நாட்டுநூற்
செவ்விய வென்னவே தெரிக்க லாமரோ!'' (20)

முதலிய பாடல்களால் அறியலாம். கூடலூர்த் துறைமுகத்திலிருந்து புறப்படும் கப்பல், இலங்கை வழியாகத் தூரக் கிழக்கு ஆசிய நாடுகட்குச் சென்றும், பின்னர் மேற்கு நாடுகட்குச் சென்றும், பின்னர்க் கொங்கணம் - கர்நாடக மாநிலக் கடற்கரை வழியாகக் கன்னியாகுமரி முனையைக் கடந்து மீண்டும் கூடலூர்த் துறைமுகத்தை யடையும் என்ற குறிப்பு மேலுள்ள பாடல்களிலிருந்து புலனாகின்றது. அஃதாவது, நுண்

* 15. சிங்களம்—இலங்கை; சோனகம்—சீனம், மலாசியா, இந்தோனேசியா, அரேபியா, யவனம், சோனகம் போன்ற நாடுகளைக் குறிக்கும் பொதுப்பெயர். கொங்கணம்—மகாராட்டிரத்திற்கும் மைசூர் மாநிலத்திற்கும் இடையில் கொங்கணமொழி பேசும் பகுதி; கன்னடம்—கன்னடம் பேசும் கர்நாடக மாநிலம்; வங்கம்—கப்பல். 20. நவ்வி—கப்பல்.



ணுடம்பு (சூக்குமதனு), செய்துள்ள தீவினையை நுகர நிரயத் திற்கும் (நரகத்திற்கும்) நல்வினையை நுகர வானுலகிற்கும் (சுவர்க்கத்திற்கும்) சென்று மீண்டும் மண்ணுலகத்திற்கு வருவது போல், கூடலூர்த் துறைமுகத்திலிருந்து புறப்படும் கப்பல், கீழை நாடுகட்கும் மேலை நாடுகட்கும் சென்று மீண்டும் கூடலூரை அடைவதாக முதல் பாட்டில் ('சிங்களம்...மானுமால்') கூறப்பட்டுள்ளது.

இந்த நிலைமையைத் திருப்பாதிரிப் புலியூர்ப் புராண ஆசிரியராகிய சிதம்பர முனிவர் நேரில் பார்த்தே எழுதியிருக்க வேண்டும். இப்பொழுதும் கூடலூர் மீனவர்கள் படகுகள் வாயிலாகவே இலங்கை வரையும் சென்று சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்துவரும் திறல் உடையவராயிருக்கின்றனர்.

பாடல் பெற்றதும் பழமையானதுமாகிய இந்தத் துறைமுகத்தில், ஒரு துறைமுகத்திற்கு இருக்கவேண்டிய கலங்கரை விளக்கு, சுமை தூக்கிகள் (Cranes), ஏராளமான படகுகள், தொழிலாளிகள், சேமிப்புக் கிடங்கு, கப்பல் வாணிக நிலையங்கள், புகைவண்டி இணைப்பு முதலிய அனைத்து வசதிகளும் உள்ளன. மிக்க பொருட் செலவுடன் மேலும் முயன்றால், இந்தத் துறைமுகமும் ஒரு பெரிய துறைமுகமாக மாறலாம்; பக்கத்திலேயே நெய்வேலித் திட்டமும் அதன் இணைப்பான சேலம் உருக்காலைத் திட்டமும் இருப்பதால் எதிர்காலத்தில் இது நடைபெறலாம்.

———

## 11. கெடிலக்கரை ஊர்கள்

### தென்னார்க்காடு மாவட்டம்

கெடிலம் ஆறு ஓடும் பகுதி இப்போது தென்னார்க்காடு மாவட்டம் என அழைக்கப்படுகின்றது. இப்பெயர் ஆங்கிலேயர்களால் இடப்பட்டது. தமிழகத்தில் முதல் முதலாக ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட மாவட்டம் இதுதான். பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் வடபகுதி ஆர்க்காட்டு நவாபுகளால் ஆளப்பட்டது. அவர்கள் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள 'ஆர்க்காடு' என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். ஆர் என்றால் ஆத்தி; ஆத்தி மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியாயிருந்ததால் 'ஆர்க்காடு' எனப்பட்டது. ஆர்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆளப்பட்ட பகுதி ஆர்க்காட்டுச் சீமையாயிற்று. அப் பகுதி ஆங்கிலேயர் கைக்கு மாறியதும் அதன் வடபகுதி வடார்க்காடு மாவட்டம் எனவும், தென்பகுதி தென்னார்க்காடு மாவட்டம் எனவும் ஆங்கிலேயர்களால் பெயர் சூட்டப்பட்டன. தென்னார்க்காடு மாவட்டத்தின் பரப்பு 10,770 சதுர கி. மீ. ஆகும்; தலைநகர் கடலூர்.

இம் மாவட்டத்தில் கெடிலம் ஓடும் கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர் ஆகிய மூன்று வட்டங்களிலும் கெடிலத்தின் அக்கரையிலும் இக்கரையிலும் கரைக்குப் பத்துக்கல் தொலைவிற்குள் உள்ள இன்றியமையாச் சிறப்புடைய சில ஊர்களைப் பற்றிய விவரங்களை வட்டவாரியாக இப் பகுதியில் காண்பாம்:

### மையனூர்

'கெடிலத்தின் தோற்றம்' என்ற தலைப்பில் மையனூரைப் பற்றிய விவரங்கள் ஓரளவு கூறப்பட்டுள்ளன. அவ்வூருக்குத் தெற்கேயுள்ள மையனூர் மலையடிவாரத்துப் பாறைச் சுனையிலிருந்து கெடிலம் தோன்றி மையனூர் ஏரியில் கலந்து



அங்கிருந்து ஆற்றுருவம் பெற்று[illegible] முன்பு விளக்கப் பட்டுள்ளது.

மலையடிவாரத்துப் பள்ளத்தாக்கில் இருப்பதால் மையனூர் மிக்க வளம் பெற்றுத் திகழ்கின்றது. நூறு அல்லது நூற்றிருபத்தைந்து வீடுகள் இச் சிற்றூரில் உள்ளன. இவ்வூர் வயல்கள் மிக்க வளமுடையவை. நெல், கரும்பு முதலியவை விளைவிக்கப் படுகின்றன. தங்கள் ஊர் வயல்களின் [illegible] மையனூர் மக்கள் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். கெடிலத்தாளைப் பெற்றளித்த மையனூர் நீடூழி வாழ்க!

### ரிசிவந்தியம்

கள்ளக்குறிச்சி வட்டத்தில் கெடிலத்தின் நீளம் மிகக் குறைவு. கெடிலக் கரையை யொட்டியுள்ள இன்றியமையாத ஊர் இவ் வட்டத்தில் ரிசிவந்தியம் ஒன்றுதான். இவ்வூர், கள்ளக் குறிச்சிக்கு வடகிழக்கே 18 கி. மீ. தொலைவிலும் - திருக்கோவலூர்க்குத் தென்மேற்கே 20 கி. மீ. தொலைவிலும் - கெடிலம் ஆற்றிற்குத் தெற்கே 4 கி.மீ. தொலைவிலுமாக உள்ளது.

ரிசிவந்தியத்திலுள்ள உமையொருபாகரின் கோயிலில் தட்டினால் பண் இசைக்கும் தூண்கள் உள்ளன. இந்தக் கோயிலின் சிற்ப வேலைப்பாட்டுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு உண்டு; அஃதாவது, இங்கே உள்ள ஒரு யாளிச் சிலையின் திறந்த வாய்க்குள் ஒரு கல் உருண்டை உள்ளது; பந்து போன்ற அவ் வுருண்டையை நம் கைவிரலால் எப் பக்கம் வேண்டுமானாலும் உருட்டலாம்; ஆனால், வெளியில் எடுக்க முடியாது; இது சிறந்த சிற்ப வேலைப்பாடாகும். இந்தக் கோயிலில் திருமலை நாயக்கரின் உருவச்சிலை யிருப்பது, வரலாற்றுக் குறிப்புக்கு உதவி செய்கின்றது.

### திருநறுங்குன்றம்

இவ்வூர், திருக்கோவலூருக்குத் தென்கிழக்கே 19 கி. மீ. தொலைவில் கெடிலத்தின் தென்கரையில் ஒரு கி. மீ தொலைவில்

பட்டது. இது, திருநறுங்கொன்றை எனவும் திருநறுங்கொண்டை எனவுங்கூட அழைக்கப்படுகின்றது.

**ஆற்றூர்**

இவ்வூர், திருக்கோவலூருக்குத் தென்கிழக்கே 22 கி. மீ. தொலைவில் திருநறுங்குன்றத்திற்குக் கிழக்கே 3 கி. மீ. தொலைவில் கெடிலத்தின் தென்கரையில் இருக்கின்றது. ஆற்றங்கரையில் இருப்பதால் ஆற்றூர் எனப்பட்டது போலும். இது பேச்சு வழக்கில் ஆத்தூர் என மருவி வழங்கப்படுகின்றது. இவ்வூர் பேட்டு ஆத்தூர், பள்ள ஆத்தூர் என இரு பிரிவினதாயுள்ளது. பள்ள ஆத்தூரில் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது.

**கிளியூர்**


மலையமான்களின் தலைநகராயிருந்த ஊர் கிளியூர். திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மலையமான் மரபினருள் ஒரு பிரிவினர், இந்தக் கிளியூரைத் தலைநகராகக் கொண்டு திருக்கோவலூர் வட்டத்தின் தென்பகுதியை ஆண்டதால் கிளியூர் மலையமான்கள் என அழைக்கப்பட்டனர். ஒரு காலத்தில் கிளியூர் ஒரு தலைநகராயிருந்தது என்பதை மெய்ப்பிக்கும் சுவடுகள் சில அவ்வூர் வட்டாரத்தில் உள்ளன. கிளியூர்பற்றிய வரலாற்றுச் செய்திகள் பல அவ் வட்டாரத்து மக்களால் மிகவும் பெருமையாகப் பேசப்படுகின்றன.

**சேந்தமங்கலம்:**

சேந்தமங்கலம், சென்னை - திருச்சி பெருநாட்டு நெடுஞ்சாலையில் சென்னைக்கு 183ஆம் கி. மீட்டரில் (114 ஆம் மைலில்) கெடிலத்தின் தென்கரைக்கு அண்மையில் உள்ளது. இவ்வூர் திருக்கோவலூருக்குத் தென்கிழக்கே 30 கி. மீ. தொலைவிலும் விழுப்புரத்திற்கு (மேற்குச் சாய்ந்த) தெற்கே 25 கி. மீ. தொலைவிலும் - பண்ணுருட்டிக்கு (தெற்குச் சாய்ந்த) மேற்கே 20 கி. மீ. தொலைவிலும்-உளுந்தூர்ப் பேட்டைக்கு வடகிழக்கே 10 கி. மீ. தொலைவிலுமாக இருக்கின்றது. சேந்தமங்கலத்திற்கும் திருநாவலூருக்கும் நடுவே கெடிலம் ஓடுகிறது. ஆற்றின் தென்கரையில் சேந்தமங்கலமும் வடகரையில் திருநாவலூரும் உள்ளன. சேந்தமங்கலத்தில் கோட்டையும் கோயிலும் இணைப்பாக உள்ளன.



சேந்தமங்கலம் வட்டாரத்தில் நிலத்தைத் தோண்டினால், எத்தனையோ கட்டடங்களும் பல்வேறு பொருள்களும் கிடைக்குமென அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். சேந்தமங்கலத்தைச்



சேந்தமங்கலம் கோட்டைக்கோயில் முழுத்தோற்றம்

சுற்றி 10 கி. மீ. வட்டாரத்தில் நிலத்தைத் தோண்டினால் கட்டடங்களின் இடிபாட்டுக் கற்கள் கிடைப்பதால் கோட்டை-அரண்மனை உட்படத் தலைநகரம் 10 கி. மீ. சுற்று வட்டாரத்திற்குப் பரவியிருந்திருக்க வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. இந்தப் பரப்பெல்லைக்குள் திருநாவலூரும் அடங்கியிருக்க வேண்டும். இதற்குச் சான்று, திருநாவலூரில் உள்ள 'கச்சேரி மேடு' என்னும் பகுதியாகும். கச்சேரி மேடு என்பது, அரசன் கொலு வீற்றிருந்து நாட்டு நடப்புக்களைக் கவனிக்கும் திருவோலக்க மாளிகை இருந்த இடமாகும்.

## திருநாவலூர்

ஒரு காலத்தில் முனையரையர் மரபு மன்னர்களின் தலைநகராயிருந்ததும், இப்போது திருநாவலூர் ஊராட்சி மன்ற ஒன்றியத்தின் தலைநகராயிருப்பதும் ஆகிய திருநாவலூர், பண்ணுருட்டிக்கு மேற்கே 16 கி. மீ. தொலைவில் கெடிலத்தின் வடகரையில் உள்ளது.

பண்டு நாவல் மரம் நிறைந்திருந்ததால் நாவலூர் என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், பேச்சு வழக்கில் திருநாம நல்லூர் என்னும் பெயரே பெருவாரியாக அடிபடுகிறது.

சைவ உலகில் திருநாவலூர் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. சைவ நாயன்மார் அறுபத்துமூவருள் நால்வர் பிறந்து வாழ்ந்த ஊர் திருநாவலூர். அந்நால்வர்: சுந்தரமூர்த்தி நாயனார், அந்தச் சுந்தரரின் தந்தை சடைய நாயனார், தாய் இசை ஞானியார், சுந்தரரை எடுத்து வளர்த்தவரும் அப் பகுதியை ஆண்டவருமாகிய நரசிங்க முனையரைய நாயனார் என்பவராவர். நாவலூரில் பிறந்ததால் 'நாவலூரர்' என அழைக்கப்பட்டார் சுந்தரர்.

திருநாவலூர்ப் பெரிய கோயிலுக்குள் சிவன் கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் நடுவில் வரதராசப் பெருமாள் கோயில் இருப்பது குறிப்பிடத்தக்கது. பெரிய கோயிலின் தென்கிழக்கு மூலையில் சுந்தரர் - பரவையார் - சங்கிலியார் ஆகியோர்க்கு ஒரு தனிக்கோயில் உள்ளது. கோயிலிலுள்ள இம் மூவரின் உலோக உருவச் சிலைகள் மிக மிக அழகானவை. இங்கே சுந்தரர் பிறந்த நாள் (ஆவணி - உத்திரம்) விழாவும், வீடு பேறுற்ற நாள் (ஆடி - சுவாதி) விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. கோயிலின் வடபால் சுந்தரர் பிறந்த மனையில் அவரது நினைவுக்குறியாக ஒரு மாளிகை கட்டப்பட்டு வருகிறது.

திருநாவலூர்க் கோயிலில் பல்லவர் காலச் சிற்பங்களும் பலர் காலத்துக் கல்வெட்டுகளும் உள்ளன. தட்சணாமூர்த்தி இங்கே நின்ற கோலத்திலிருப்பது குறிப்பிடத்தக்கது.



## திருவாமூர்

திலகவதியாரும் திருநாவுக்கரசரும் பிறந்த பெருஞ் சிறப்பிற்குரிய திருவாமூர், கடலூருக்கு மேற்கே 35 கி. மீ. தொலைவில்- பண்ணுருட்டிக்கு மேற்கே 9 கி. மீ தொலைவில் கெடிலத்தின் வடகரையில் உள்ளது. இவ்வூருக்கு மேற்கே சிறிது தொலைவில் மலட்டாறு கெடிலத்தின் வடகரையில் கெடிலத்தோடு கலக்கிறது; சிறிது தொலைவில் 'நரியன் ஓடை' என்னும் ஒரு பெரிய ஓடை தென்கரையில் கெடிலத்தோடு கலக்கிறது. திருவாமூரை அடைய வேண்டுமெனில் கடலூர் திருக்கோவலூர் மாநில நெடுஞ்சாலையில் கடலூருக்கு மேற்கே 34ஆவது கி. மீட்டரில் - பண்ணுருட்டிக்கு மேற்கே 8ஆவது கி. மீட்டரில் இறங்க வேண்டும். பின்னர், அவ்விடத்திலிருந்து தெற்கே ஒரு கி. மீ. தொலைவு அளவுக்கு மண் பாதை வழியே சென்றால் திருவாமூரை அடையலாம்.

திருவாமூர் (திரு + ஆம் + ஊர்) என்றால், எல்லா வளங்களும் நலங்களும் ஆகின்ற ஊர் - வளர்ச்சி பெறுகின்ற ஊர் என்று ஒருவகைப் பொருள் சொல்லப்படுகின்றது. அதற்கேற்றாற் போலவே இவ்வூர் நீர் வளமும் நிலவளமும் செறிந்து திகழ்கின்றது. அப்பர் அடிகளின் காலத்தைத் தொடர்ந்து அறங்கள் பல நிகழ்ந்த ஊர் அல்லவா இது? இவ்வூர் பண்ணுருட்டி ஊராட்சி மன்ற ஒன்றியத்தில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வூர்ச் சிவன் கோயிலின் பெயர் பசுபதீச்சுரம். சிவன் பெயர்; பசுபதீசுரர்; அம்மன் பெயர்: திரிபுரசுந்தரி. சில ஊர்க் கோயில்களில் சிவன் 'திருமுன்பு' (சந்நிதி) கிழக்கு நோக்கியும், அம்மன் 'திருமுன்பு' தெற்கு நோக்கியும் இருக்கும்; அவற்றுள் இவ்வூரும் ஒன்று. கோயில் சிறியது. இவ்வூரில் பிறந்த நாவுக்கரசர் இவ்வூர் இறைவன்மேல் தேவாரப் பதிகம் பாடித்தான் இருக்க வேண்டும். ஆனால் அது கிடைக்கவில்லை. அவருடைய பதிகங்கள் சில கிடைக்கவில்லை என்னும் செய்தி வேறிடத்திலும் கூறப்பட்டுள்ளது. இவ்வூர் முருகன்மேல் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார்.

திருவாமூர் கோயிலால் சிறப்புப் பெற்றது என்று சொல்வதனினும், திலகவதியாரும் திருநாவுக்கரசரும் பிறந்ததாலேயே சிறப்புற்றது என்று சொல்வதே பொருந்தும். நாவுக்கரசர் பிறந்த மனையில் அவருக்குத் தனிக்கோயில் கட்டப்பட்டிருக்கும் செய்தியினையும் அக் கோயிலின் படத்தையும் அது சார்பான விவரங்களையும் இந்நூலில் 'கெடிலக்கரைப் பெருமக்கள்-திருநாவுக்கரசர்' என்னும் தலைப்பில் காணலாம். திருவாமூரில் அப்பர் பிறந்த பங்குனி உரோகிணி நாளிலும் அவர் வீடுபேறுற்ற சித்திரைச் சதய நாளிலும் சிறப்பாக விழாக்கள் நடைபெறுகின்றன. திங்கள்தோறும் வரும் சதயத்திலும் விழா உண்டு. திருமணம் உறுதி செய்த பின்னர்த் திருமணம் நிகழ்வதற்குள்ளாகவே மணமகள் திலகவதியார் மணமகன் கலிப்பகையாரைப் போரில் இழந்துவிட்டதால் அவர் மரபினராகிய வேளாளர்கள், திருமணம் உறுதி செய்த நாளிலேயே திருமணமும் நடத்தி விடுவதைத் திருவாமூர் வட்டாரத்தில் காணலாம்.

## திருவதிகை

திருவதிகை, பண்ணுருட்டி நகருக்குக் கிழக்கே - பண்ணுருட்டிப் புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே ஒன்றரை கி. மீ. தொலைவில், கடலூர் - திருக்கோவலூர் மாவட்ட நெடும்பாதையில் கெடிலத்தின் வடகரையில் உள்ளது.

திலகவதியாரும் திருநாவுக்கரசரும் திருத்தொண்டு புரிந்த இடம் திருவதிகை; பாடலிபுத்திரத்தில் சமணத் தலைவராய் விளங்கிய நாவுக்கரசர் மீண்டும் வந்து சைவராக மாறி, 'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் முதல் தேவாரப் பதிகம் பாடிச் சூலை நோய் நீங்கப்பெற்ற இடம் திருவதிகை; நாவுக்கரசரால் சைவனாக மாற்றப்பட்ட மகேந்திரவர்ம பல்லவன், பாடலிபுத்திரத்தில் இருந்த சமணக் கோயிலை இடித்துக் கொண்டுவந்து 'குணபரேச்சரம்' என்னும் பெயரில் ஒருசைவக் கோயில் கட்டிய இடம் திருவதிகை; சிவபெருமான் தனது புன்னகையால் முப்புர அரக்கர்களை எரித்ததாகச் சொல்லப்படும் இடம்




திருவதிகை; வீரட்டானங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் இடம் திருவதிகை; தமிழகத்திலேயே முதல்முதலாகத் தேவாரப் பாடல் பெற்ற பெருமைக்கு உரிய பதி திருவதிகை; திருநாவுக்கரசரின் தேவாரப்பதிகங்கள் பதினாறும், திருஞானசம்பந்தரின் பதிகம் ஒன்றும், சுந்தரரின் பதிகம் ஒன்றும், அருணகிரியாரின் திருப்புகழ் இரண்டும், பிற்காலப் புராணம் ஒன்றும், மான்மியம் ஒன்றும், உலா ஒன்றும், தொண்ணூற்றாறு கல்வெட்டுகளும் பெற்றுத் திகழும் இடம் திருவதிகை; சிறந்த சைவசித்தாந்த நூலாகிய 'உண்மை விளக்கம்' இயற்றிய 'திருவதிகை மனவாசகங் கடந்தார்' என்னும் பெரியார் பிறந்த இடம் திருவதிகை. அருகிலுள்ள அணையால் செழிப்புற்றுத் திகழும் இடம் திருவதிகை.

## வீரட்டானம்

திருவதிகைக் கோயிலின் பெயர் வீரட்டானம்; இறைவன் பெயர் வீரட்டானேசுரர்; இறைவி பெயர் திரிபுர சுந்தரி, பெரிய நாயகி. திருவதிகையில் சிவபெருமான் உமையம்மையைத் திருமணம் செய்துகொண்டாராம்; அதன் அறிகுறியாகத்தான், சிவலிங்கத்திற்குப் பின்னால் அம்மையப்பர் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம்; இறைவனுக்கும் இறைவிக்கும் திருமணம் நடந்ததாகச் சொல்லப்படும் திருப்பதிகளில் இப்படி அமைந்திருப்பது மரபாம். தேவ - தேவியின் திருமணம் நடைபெற்ற இடம் திருவதிகையாதலால், வெளியூர் மக்கள் பலர் இங்கு வந்து திருமணம் செய்துகொண்டு செல்கின்றனர். இங்கே திருமணம் செய்து கொண்டால் நன்கு வாழலாம் என்பது ஒரு தெய்வ நம்பிக்கை.

வீரட்டானர் கோயிலுக்குள், திலகவதியார்க்கும் திருநாவுக்கரசர்க்கும் தனித்தனிச் சிறு கோயில்கள் உள்ளன. வெளிக் கோபுரத்தைத் தாண்டிக் கோயிலுக்குள் நுழைந்தவுடனேயே வலக்கைப் புறமாக ஒரு சமணச் சிலை தெற்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் இருப்பதைக் காணலாம்.

இந்தச் சிலை, ஒரு மன்னனது தோற்றத்தையும் சமண சமயக் குறிகளையும் குறிக்கின்றது; எனவே, அப்பர் காலத்தில் சமண சமயத்தைத் தழுவியிருந்த பல்லவ மன்னனைக் குறிக்கும் சிலையாக இருக்கலாம் என உய்த்துணரப்படுகின்றது.



திருவதிகைக் கோயில் சமண மன்னன் சிலை

## குணபரேச்சரம்

திருவதிகை வீரட்டானேசுரர் கோயிலுக்குத் தென்கிழக்கே ஒன்றரை கி. மீ. தொலைவில், மாநில நெடுஞ்சாலையிலிருந்து புறப்படும் ஒரு சிறு குறுக்குப் பாதை மாவட்ட நெடும்பாதையுடன் வந்து சேருமிடத்தில் குணபரேச்சரம் என்னும் கோயில்



இருக்கின்றது. இது, குணபர வீச்சரம், குணபரேசுரம், குணதரேச்சரம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. மகேந்திரவர்ம பல்லவனுக்குக் 'குணபரன்' என்றும் ஒரு பெயர் உண்டு. அந்தக் குணபரனால் கட்டப்பட்டதால் குணபரேச்சரம் என்னும் பெயர் பெற்றது இது. பல்லவன் அப்பரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியபின், பாடலிபுத்திரத்திலிருந்த சமண் கோயிலை இடித்துக் கொண்டுவந்து திருவதிகையில் இந்தக் கோயிலைக் கட்டினான் எனப் பெரிய புராணம் கூறுகின்றது.

குணபரேச்சரம் மிகச் சிறியது; திருவதிகையில் இருக்குமிடம் தெரியாமல் இருக்கின்றது.

குணபரேச்சரத்தில் ஆதி சைவ அந்தணக் குருக்கள் பூசனை புரியவில்லை; ஐயனார் கோயில் போல் - காளி கோயில் போல் பூசாரியாரே பூசனை புரிகின்றார்.

## திருமாணிகுழி :

கடலூர் ஊராட்சி மன்ற ஒன்றியத்தைச் சேர்ந்த இவ்வூர், கடலூருக்கு மேற்கே 10கி. மீ. தொலைவிலும் - நெல்லிக்குப்பத்திற்குத் தெற்கே 6கி. மீ. தொலைவிலுமாக, கடலூர்-திருக்கோவலூர் மாவட்ட நெடும் பாதையை ஒட்டிக் கெடிலத்தின் தென்கரையில் இருக்கின்றது. மாவட்ட நெடும்பாதையிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் மண்பாதையில் ஒன்றரை கி. மீ. நடந்து - ஆற்றைக் கடந்து இவ்வூரை அடையவேண்டும். வடக்கே கெடிலத்தையும் தெற்கே கேப்பர் மலைத்தொடர்ச்சியையும் உடைத்தாகி வாணமாதேவி அணையிலிருந்து நீர்ப்பாசனத்தைப் பெற்று வளங்கொழிக்கும் ஊர் திருமாணிகுழி.

இவ்வூரின் நீர்வள-நிலவளச் செழிப்பைத் திருஞானசம்பந்தர் இவ்வூர்மேல் பாடியுள்ள தமது தேவாரப் பதிகத்தில் மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

மாணி என்பது திருமாலின் வாமன அவதாரத்தைக் குறிக்கும். திருமால் மாணி வடிவங்கொண்டு மாவலியை அழித்த

பின்னர் இவ்வூருக்கு வந்து சிவனை வழிபட்டார் என்பது புராண வரலாறு. மாணி வழிபட்ட இடமாதலின் மாணி குழி எனப் பெயர் பெற்றது. கோயிலில் இலிங்கம் இருக்கும் கருவறைப் பகுதி சிறிது பள்ளமாக—குழியாக இருக்கும். அங்கே எப்போதும் தண்ணீர் சுரந்துகொண்டிருக்கும். எனவே, மாணி வழிபட்ட குழி மாணி குழியாயிற்று என்று பெயர்க் காரணம் கூறப்படுகின்றது.

திருமாணி குழியில் சோழர், பாண்டியர், இராட்டிர கூடர் முதலியோர் காலத்துக் கல்வெட்டுகள் பல உள்ளன. இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1136 - 1150) இவ்வூரில் முடி சூட்டிக்கொண்டதாக ஒரு கல்வெட்டு கூறுகின்றது. சோழன் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய தலைநகரங்களை விட்டுவிட்டு இங்கே வந்து முடி சூட்டிக்கொண்டது ஏன்? இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் பகைவர் எவரும் சோழநாட்டின்மேல் படையெடுக்கவில்லை; பரந்து விரிந்து கிடந்த சோழப் பேரரசில் அன்று அமைதி நிலவியது. ஆயினும், சோழப் பேரரசால் ஆங்காங்கே அமர்த்தப்பட்டிருந்த ஆட்சிப் பேராளர்கள் (பிரதிநிதிகள்) சிலர், தமது மேற்பார்வையில் இருந்த பகுதிகளைத் தமக்கு உரிமையாக்கிக்கொள்ளத் தொடங்கினர். இந்த நிலையில், திருமாணி குழிப்பகுதிக்குப் பொறுப் பேற்றிருந்த ஆளுநரும் (கவர்னரும்) சோழப்பேரரசுக்கு அடங்காது அப் பகுதியைத் தமதாக்கிக் கொண்டிருக்கலாம். செய்தியறிந்த குலோத்துங்கன் ஆங்குச் சென்று அவரை யடக்கி, அப் பகுதிக்குத் தானே தலைவன் என்பதை உறுதிப் படுத்தும் முறையில் திருமாணி குழியில் முடிசூட்டிக்கொண்டிருக்கலாம்.

**திருவயிந்திரபுரம் :**

கெடிலக்கரையை ஒட்டியுள்ள ஒரே ஒரு வைணவத்திருப் பதியான திருவயிந்திரபுரம், கடலூர்த் தலைநகரப் பகுதிக்கு மேற்கே 7 கி. மீ தொலைவில்— கடலூர்த் திரிப்பாதிரிப்புலியூருக்கு மேற்கே 5 கி. மீ. தொலைவில் கடலூர் - திருக்கோவலூர் மாவட்ட நெடும்பாதையில், கெடிலத்தின் கிழக்குக் கரையில்



அமைந்திருக்கிறது. வரகால்பட்டுப் புகைவண்டி நிலையம் திருவயிந்திரபுரத்திற்கு மிகவும் அணித்தாகும். இந்த நிலையத்திற்கும் திருவயிந்திரபுரத்திற்கும் இடையே கெடிலம் ஆறு வடக்கும்-கிழக்குமாக வளைந்து செல்கின்றது. இந்த நிலையத்திலிருந்து ஒன்று அல்லது ஒன்றரை கி. மீ. தொலைவு தெற்கு நோக்கி நடந்து - ஆற்றின் வளைவைக் கடந்து திருவயிந்திரபுரத்தை அடையவேண்டும். நடக்க முடியாதவர்கள் திருப்பாதிரிப் புலியூர்ப் புகைவண்டி நிலையத்தில் இறங்கி வண்டி பிடித்துக்கொள்ள வேண்டும். இந்த நிலையம் விழுப்புரம் — கூடலூர்ப் பாதையில் இருக்கின்றது.

திருவயிந்திரபுரம் கோயில் தேவநாதசாமி கோயில் எனவும் தெய்வநாயகப் பெருமாள் கோயில் எனவும் அழைக்கப்படும். பெருமாள் பெயர்: தேவநாதர், தெய்வநாயகப் பெருமாள்; தாயார் பெயர்: வைகுந்த நாயகி, செங்கமலத் தாயார். ஊரின் பெயர் நாலாயிரப் பிரபந்தத்தில் ‘திருவயிந்திரபுரம்’ எனக் கூறப்பட்டுள்ளது. இப் பெயர் இன்று ‘திருவந்திபுரம்’ எனச் சுருங்கிவிட்டது. இதனையே மக்கள் தமது திருந்தாத கொச்சை வழக்கில் ‘திருந்திபுரம்’ எனக் கூறுகின்றனர்,

வேதாந்த தேசிகர் முதலிய வைணவப் பெருமக்கள் திருவயிந்திரபுரத்தருகில் ஓடும் கெடிலத்திற்கு ஒரு பெருமை கற்பித்துள்ளனர். தமிழ் நாட்டில் ஆறுகள் மேற்கு - கிழக்காக ஓடுகின்றன: இவ்வாறே மேற்கு - கிழக்காக ஓடிவரும் கெடிலம் திருவயிந்திரபுரத்தில் வடக்கு நோக்கித் திரும்பித் தெற்கு, வடக்காக ஓடுகின்றது. இவ்வாறு வடக்கே நோக்கி ஓடுவது ஒரு புதுமையாம் - அற்புதமாம். இங்கே வடக்கு நோக்கி ஓடுவதால் கெடிலத்திற்கு ‘உத்தர வாகினி’ என்னும் சிறப்புப் பெயர் ஈந்து போற்றியுள்ளனர் பெருமக்கள்.

இந்த அடிப்படையில், திருவயிந்திரபுரம் என்னும் பெயர் வந்ததற்கு ஒரு புதுக் காரணம் கற்பித்துக் கூற விரும்புகின்றேன் அடியேன். அயிந்திரம் என்னும் சொல்லுக்குக் கிழக்கு என்னும் பொருளும் உண்டு கெடிலத்தின் கிழக்குக் கரையில் இருக்கும் ஊர் ஆதலின் ‘அயிந்திரபுரம்’ என்னும் பெயர் ஏற்பட்டிருக்

கலாம் என்பது அடியேன் கற்பித்துக் கூறும் காரணம்; தமிழகத்தில் மற்ற ஆறுகள் மேற்கு-கிழக்காக ஓடுவதால், ஆற்றங்கரைத் திருப்பதிகள் ஆற்றின் வடகரையிலோ அல்லது தென்கரையிலோதான் இருக்கும்; ஆற்றின் கிழக்குக் கரையில் திருப்பதிகள் அமைவதற்குப் பெரும்பாலும் வாய்ப்பில்லை. இந்த நிலையில் திருவயிந்திரபுரம் கெடிலத்தின் கிழக்குக் கரையில் அமைந்திருப்பது ஒரு புதுமை - அற்புதம்! எனவே, அயிந்திரக் (கிழக்குக்) கரையில் அமைந்திருக்கும், இவ்வூரை 'அயிந்திரபுரம்' என அக்காலத்தில் பெரியவர்கள் அழைத்திருக்கலாம் என்பது அடியேனது புதிய கற்பனை.

இவ்வூரில் கெடிலத்தில் அணை கட்டப்பட்டிருப்பதால் வளத்திற்கும் குறைவில்லை. இவ்வூர் மலையிலும் மலையடிவாரத்திலும் வெள்ளைக் களிமண் படிவம் இரண்டறக் கலந்துள்ளது. வெள்ளைக் களிமண் வெட்டியெடுக்கப்பட்டு, உரம் செய்வதற்காகக் கூடலூரிலுள்ள தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது. இவ்வாறு பல்வேறு துறைகளிலும் திருவயிந்திரபுரம் புகழ் பெற்றுத் திகழ்கின்றது.

## கடலூர்ப் பெருநகரம்

சென்னைக்கு நேர் தெற்கே 160 கி. மீ. (100 கல்) தொலைவிலுள்ள கடலூர் முதல்தரமான ஒரு பெரிய நகரமாகும். கெடிலம் ஆறு கடலூர் நகரைச் சுற்றி வளைத்து ஓடுகிறது-கடலூர் நகருக்கு நடுவே ஓடுகிறது; கடலூர் நகருக்கு அருகில் (கடலூர்க்) கடலில் கலக்கிறது. கடலூர் நகர எல்லைக்குள் கெடிலத்தின் கரையிலே பாடல் பெற்ற பதி, புகைவண்டி சந்திப்பு நிலையம், உயர்நிலைப் பள்ளிகள், தொழிற்பள்ளிகள், கலைக்கல்லூரிகள், மாவட்ட மருத்துவ நிலையம், திரைப்பட மாளிகைகள், தலைநகர்த் தலைமை அலுவலகங்கள், பெரிய உணவு விடுதிகள், பெரு வெளித் திடல் (மைதானம்), தொழிற்கூடங்கள், வணிக நிலையங்கள், பெரிய கடைத்தெரு, தலைநகர்க் கோட்டை, துறைமுகம் முதலியவை அமைந்துள்ளன. இவையனைத்தும் கடற்



கரைக்கு அருகில் அகப்படும் அளவில் கெடிலம் ஆறு கடலூர் நகர எல்லைக்குள் பல வளைவும் பிரிவும் பெற்றுச் செல்கின்றது.

### நகராட்சி:

கடலூர் முதல்தரமான நகராண்மைக் கழகம் (முனிசிபாலிடி) உள்ள பெருநகர். இந் நகராண்மைக் கழகம் 1866ஆம் ஆண்டு நிறுவப்பட்டது; 1954ஆம் ஆண்டு முதல்தர நகராண்மைக் கழகம் என்னும் தகுதி பெற்றது.

தமிழகத்தில் கடலூருக்கெனத் தனிப் பெரும் பெருமைகள் சில உள; அவையாவன:—

### 1. தமிழகத்தின் முதல் தலைநகர்

இப்பொழுது தமிழகத்தின் தலைநகராயிருப்பது சென்னை. ஆங்கிலேயரின் ஆட்சித் தொடக்கத்தில் தமிழகத்தின் தலைநகராயிருந்தது சென்னை அன்று; கடலூர்தான்! கடலூரில் கெடிலம் கடலோடு கலக்கும் இடத்திற்கு அருகிலுள்ள 'செயின்ட் டேவிட் கோட்டை'யை (St. David Fort) மையமாகக் கொண்டே அன்று ஆங்கிலேயர் தமிழகத்தில் ஆட்சி தொடங்கினர். இந்தக் கோட்டையைப் பிரெஞ்சுக்காரர்கள் பலமுறை தாக்கி அழித்ததால் தமிழகத்தின் தலைநகராய்த் தொடர்ந்து விளங்கும் தகுதியைக் கடலூர் இழந்துவிட்டது. கடலூர்க் கோட்டைக்குப் பிரெஞ்சுக்காரரால் ஊறு நேராதிருக்குமாயின், கடலூர் நகரம் கல்கத்தா நகரம் போல் மிகப் பெரிய நகரமாக விரிவு பெற்றிருக்கும்; சென்னை எடுத்துக்கொண்ட தலைநகர்த் தகுதி கடலூர்க்கே தொடர்ந்து இருந்திருக்கும். தமிழகத்தின் வடக்குக் கோடியிலுள்ள சென்னையினும், தமிழகத்தின் நடுவேயுள்ள கடலூர் தலைநகராயிருப்பது நாடு முழுவதிற்கும் வசதியல்லவா? அன்று கடலூர் தலைநகர்த் தகுதியைப் பெற்றிருந்ததற்குக் காரணமாயிருந்தது கெடிலம் ஆற்றுச் சூழ்நிலையே. கெடிலம் கடலோடு கலக்கும் இடத்தில் ஆற்றில் துறைமுகம் அமைந்திருந்ததால், வாணிகத்தின் பெயரில் கப்பல் ஓட்டிக்கொண்டு வந்த ஆங்கி

லேயர்கள் அங்கே கப்பலை நிறுத்தி இறங்கி வந்து ஆண்டிருந்துகொண்டு அமர்ந்துவிட்டனர்.

## 2. மூன்று கழிமுகங்கள்

கடலூரின் வடக்கு எல்லையில் தென்பெண்ணையாறும் தெற்கு எல்லையில் பரவனாறும், நடுவே கெடிலம் ஆறும் கடலில் கலக்கின்றன. இது, எந்த நகரிலும் இல்லாத ஓர் அமைப்பு. ஒரு நகராட்சி எல்லைக்குள் மூன்று ஆறுகள் ஓடிவந்து கடலில் கலப்பது ஒரு தனியமைப்பே. இது, துறைமுகமும் கோட்டையும் உருவாவதற்கு ஏற்ற சூழ்நிலையைத் தந்தது.

## 3. சிறிய பெரிய துறைமுகம்

இந்தியாவின் கிழக்குக் கரையில் கல்கத்தா (வங்காளம்) பாரதீப் (ஒரிசா), விசாகப்பட்டணம் (ஆந்திரம்), சென்னை தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்கள் பெரியவை. இப்பெரிய துறைமுகங்களுக்குள் சிறியது தூத்துக்குடி. இவை போக, பல சிறிய துறைமுகங்களும் உள்ளன. கிழக்குக் கடற்கரையிலுள்ள சிறிய துறைமுகங்களுக்குள் பெரிய துறைமுகம் கடலூர்த் துறைமுகம்தான். சென்னை, புதுச்சேரி தூத்துக்குடி போன்ற செயற்கைத் துறைமுகமாயில்லாமல், ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் இயற்கைத் துறைமுகச் சிறப்பும் கடலூர்த் துறைமுகத்திற்கு உண்டு.

இனி, கடலூர் நகராட்சி எல்லைக்குள் இருக்கும் பகுதிகளுள் இன்றியமையாத சிலவற்றைப்பற்றிய விவரங்களைத் தனித் தனியாகக் காண்பாம்:—

## தேயமெல்லாம் நின்றிறைஞ்சும் திருப்பாதிரிப்புலியூர்

*'தேயமெல்லாம் நின்றிறைஞ்சும் திருப்பாதிரிப் புலியூர்' என ஏழாம் நூற்றாண்டிலேயே திருநாவுக்கரசரால் புகழ்ந்து பாடப்பெற்ற திருப்பாதிரிப் புலியூர், இன்றும் தேயமெல்லாம் நின்றிறைஞ்சும் திருப்பாதிரிப் புலியூராகவே திகழ்கின்றது. திருப்பாதிரிப்புலியூர்க் கோயிலுக்கும் புகைவண்டி நிலையத்திற்கும் உள்ள இடைவெளி ஒரு 'பர்லாங்கு' தொலைவு இருக்கலாம். கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. கோயில் (சந்நிதி) தெருவின் முடிவில் புகைவண்டி நிலையம் இருக்கின்றது. நிலையத்தில் நிற்கும் புகைவண்டிகளில் இருந்தபடி மேற்கே பார்த்தால் கோபுர வாயில் தெரியும். வண்டியில் இருந்தபடியே மக்கள் கோயிலை நோக்கி வழிபடுவது வழக்கம். தேயத்து மக்களை ஏற்றிக் கொண்டு வரும் புகைவண்டிகள் அங்கே நிற்கின்றன; வழிபாடு நடக்கின்றது. இவ்வகையிலும் 'தேயமெல்லாம் நின்று இறைஞ்சும் திருப்பாதிரிப் புலியூர்' என்னும் புகழ்ச்சி பொருந்துகின்றது.

திருப்பாதிரிப் புலியூர் கெடிலம் ஆற்றின் தெற்குக் கரையில் இருக்கின்றதா? - வடக்குக்கரையில் இருக்கின்றதா? - கிழக்குக் கரையில் இருக்கின்றதா? மேற்குக் கரையில் இருக்கின்றதா? என்று சொல்வது அரிது; நான்கு கரைகளிலும் இருப்பதாகச் சொல்லலாம். பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பு கெடிலம் இவ்வூரின் தெற்கே ஓடியது; அப்போது ஆற்றின் வடகரையில் ஊர் இருந்தது; அதனால்தான், அப்போது திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் என்னும் நூல் பாடிய தொல்காப்பியத்தேவர்,

'கடிலமா நதியதன் வடபால்' (45)


'மெத்தி வருகின்ற கெடிலத்து வடபாலே' (100)

என்று கூறியுள்ளார். கிழக்கு நோக்கி ஓடிய கெடிலம் பத்தாம் நூற்றாண்டளவில் திருவயிந்திரபுரம் அருகில் வடக்கு நோக்கித் திரும்பிச் சிறிது தொலைவு ஓடி, பின்னர் மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்பிச் சிறிது தொலைவு ஓடி, பின்னர்த் தெற்கு நோக்கித் திரும்பிச் சிறிது தொலைவு ஓடி, பின்னர் மீண்டும் கிழக்குநோக்கித் திரும்பிச் சிறிது தொலைவு ஓடிக் கடலில் கலக்கின்றது. கெடிலத்தின்—ா—தலைகீழ்ப் 'ப' போன்ற அடைப்புக்கு நடுவில் திருப்பாதிரிப் புலியூர் இருக்கின்றது. இவ்வகையில் பார்க்குங்கால், ஊரின் மேற்கே மூன்று கி. மீ தொலை

* திருநாவுக்கரசர் தேவாரம் - திருப்பாதிரிப் புலியூர்ப் பதிகம் - பாடல் 4.

விலும், வடக்கே அரை கி. மீ தொலைவிலும், கிழக்கே கால் கி. மீ தொலைவிலுமாகக் கெடிலம் ஊரை ஒரு சுற்று சுற்றிக்கொண்டு ஓடுகின்றது எனலாம்.

இப்பகுதியில் அந்தக் காலத்தில் பாதிரிக்காடு நிறைந்திருந்ததாலும், புலிக்கால் உடைய புலி முனிவர் (வியாக்ரபாதர்



திருப்பாதிரிப்புலியூர்ச் சிவன்கோயில்

வழிபாடு செய்ததாலும் ஊருக்குப் பாதிரிப் புலியூர் என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. புலிக்கால் முனிவர் வழிபட்டது ஒருபுறமிருக்க, பாதிரிக் காட்டில் புலிகளும் இருந்திருக்கலாமல்லவா? இவ்வூர்க்கோயில் மரம் (தல விருட்சம்) பாதிரி என்பது குறிப்பிடத்தக்கது. கோயிலுக்குள் பழங்



காலத்தில் இருந்த பாதிரிமரம் ஒன்று பட்டுப்போய் இன்று தகட்டு உறை (கவசம்) போடப்பட்டுப் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றது. கோயிலின் மேற்புற வெளித் திருச்சுற்றில் சில பாதிரி மரங்களை இன்றும் காணலாம். வடமொழியில் பாடலம் என்றால் பாதிரி என்பது பொருள்; எனவே, இவ்வூர் பாடலிபுரம், பாடலி நகர் என அழைக்கப்படுவதும் உண்டு. இவ்வூர் இறைவன் பெயர் பாடலேசுரர் (பாடல + ஈசுரர்) என்பதும் குறிப்பிடற்பாலது.

திருப்பாதிரிப்புலியூர் என்னும் பெயர் ஓரளவு சுருங்கித் திருப்பாப்புலியூர் என்றே இன்று பலராலும் எழுதப்படுகின்றது; பேச்சு வழக்கிலோ, திருப்பாப்புலியூர் என்பது மேலும் மேலும் சுருங்கிச் சுருங்கி, திருப்பாலியூர், திருப்பார், திப்பார் என்ற அளவுக்குக் கொச்சையாய் இறங்கி வந்துவிட்டது.

### பாடலி புத்திரம்

பாடலி புத்திரம் என்னும் ஊர் ஒன்று இருந்ததாகப் பெரிய புராணத்தால் தெரிய வருகின்றது. 'பாடலம் என்றால் பாதிரி; பாடலி புத்திரம் என்றால் பாதிரி மரம் நிறைந்த இடம்; எனவே, திருப்பாதிரிப் புலியூரைக் குறிக்கும் வடமொழிப் பெயர்தான் பாடலி புத்திரம்' எனப் பலரும் கூறுகின்றனர். பாடலி புத்திரமும் திருப்பாதிரிப் புலியூரும் ஒன்றா? அல்லது வெவ்வேறா? இந்த ஐய வினாவிற்குப் பெரியபுராணத்திலேயே விடை இருக்கின்றது. இந்த இரண்டு இடப் பெயர்களையும் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் தனித்தனிச் சூழ்நிலையில் தனித்தனியாகக் கூறியுள்ளார்.

'நாவுக்கரசருக்குப் பல தொல்லைகள் தந்த சமணர்கள் இறுதியாக அவரைக் கல்லிலே கட்டிக் கடலிலே போட்டனர். அவர் தப்பித்துக்கொண்டு திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கத்தில் கரையேறினார்; பின்னர்த் திருப்பாதிரிப்புலியூரை அடைந்து சிவபெருமானை வழிபட்டார்' என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

அப் பாடல்களில், நாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கத்தில் கரையேறியதாகவும், திருப்பாதிரிப்புலியூரில் சிவனை வழிபட்டதாகவும் சேக்கிழார் கூறியிருக்கிறாரேயொழிய, பாடலி

[illegible] பக்கத்தில் கரையேறியதாகவோ பாடலிபுத்திரத்தில் சிவனை வழிபட்டதாகவோ கூறவில்லை. இதைக்கொண்டு பாடலிபுத்திரமும் திருப்பாதிரிப்புலியூரும் வெவ்வேறானவை என்பது சேக்கிழார் கருத்து என உய்த்துணரலாம்.

வடக்கே பாட்னா—பாடலிபுத்திரம் சிறப்புற்றுத் திகழ்ந்ததைப் போலத் தெற்கே திருப்பாதிரிப் புலியூர் சிறப்புற்றுத் திகழ்ந்ததால், இவ்வூரும் முகமனாகப் பாடலி புத்திரம் என அழைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர் சிலர் அறிவிக்கின்றனர்.

வடக்கே பாடலிபுத்திரம் அழிந்துவிட்டதைப்போலவே தெற்கேயும் பாடலிபுத்திரம் அழிந்துவிட்டது. வடக்கே பாட்னாப் பகுதியை அகழ்ந்து ஆராய்ந்தது போலவே, தெற்கே கடலூர்ப்-பாதிரிக்குப்பம் பகுதியை அகழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ உண்மைகள் தெரிய வரலாம்.

இதுகாறும் கூறியவாற்றால் பாடலிபுத்திரம் என்னும் பெயர் ஏற்பட்டதற்குக் காரணம் எதுவாயிருப்பினும், பெரிய புராணச் சான்றின்படி, பாடலிபுத்திரமும் பாதிரிப்புலியூரும் பக்கத்தில் - பக்கத்தில் இருந்த தனித்தனி நகரங்கள் - இரட்டை நகரங்கள் என்பது தெளிவு.

**வண்டிப் பாளையம் என்னும் கரையேற விட்ட குப்பம் :**

வண்டிப்பாளையம் திருப்பாதிரிப்புலியூருக்குத் தெற்கே ஒன்றரை கி. மீ. தொலைவில், கேப்பர் மலைக்குப் போகும் சாலையில் உள்ளது. நகரிலிருந்து இவ்வூருக்கு உள் நகர்ப் பேருந்து வண்டி (டவுன் பஸ்) வசதி உண்டு. வண்டி போகும் சாலை கண்கட்கு விருந்தாகும். சாலையின் இருமருங்கும் தென்னை மரங்கள் வரிசையாக வானளாவி நிற்கும். தென்னைமர வரிசைக்குப் பின்னால் நன்செய் வயல்களும் தென்னந் தோப்புகளும் பின்னிப் பிணைந்திருக்கும். கெடிலம் ஆற்றிலிருந்து பிரியும் பெரிய கால்வாயிலிருந்து பல சிறு கால்வாய்கள் பிரிந்து வண்டிப் பாளையத்தைச் சுற்றிலும் ஊடுருவிச் செல்கின்றன. நகரிலிருந்து வண்டிப் பாளையம் செல்லும் ஒன்றரை கி. மீ. (ஒரு மைல்) நீளச்சாலையில் ஏழு வாய்க்கால் பாலங்களைக் கடக்க வேண்டுமென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!



வண்டிப் பாளையம் ஊரைச் சுற்றிலும் பல தென்னந் தோப்புகள் இருப்பதல்லாமல், ஊருக்கு நடுவிலும் ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் பல தென்னைமரங்கள் இருக்கும். ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்தையும் ஒரு சிறுதோப்பு என்று சொல்லலாம். கோடைக்காலத்தில் குன்னூர்-குற்றாலம்-கோடைக்கானல் செல்ல வேண்டியதில்லை. வீட்டுத் தோட்டத்தில் போய் நின்றால் போதும். வீட்டுத் தோட்டத்தை யடுத்து நன்செய் வயல் இருக்கும். வயலோர வாய்க்கால்களில் கெடிலம் ஆற்றுத் தண்ணீரைக் காணலாம். ஒருமுறை பாவேந்தர் பாரதிதாசனார் வண்டிப் பாளையம் வந்திருந்த போது, தோப்புக்கு நடுவில் இவ்வூர் இருப்பதால்தான் இவ்வளவு குளிர்ச்சியாயிருக்கிறது என்று வியந்து புகழ்ந்தார். கடலூர் நகராட்சி எல்லைக்குள் மிகவும் நீர்வளம் - நிலவளம் செறிந்தது வண்டிப் பாளையம் பகுதிதான்.

**பெயர்க்காரணம் :**

திருவயிந்திரபுரத்தருகில் வடக்கு நோக்கி வளைந்து ஓடும் கெடிலம், பத்தாம் நூற்றாண்டுக்குமுன் அவ்வாறு வளையாமல் நேர் கிழக்காகவே வந்து வண்டிப் பாளையத்தின் தெற்கு எல்லையில் ஓடி இவ்வூருக்குக் கிழக்கே கடலில் கலந்தது. சமணர்கள் நாவுக்கரசரைக் கல்லிலே கட்டிக் கடலில் போட, அவர் தப்பித்துக் கொண்டு, கடலிலிருந்து கெடிலத்தின் வழியாக எதிரேறி வந்து வண்டிப் பாளையத்தருகில் கரையேறினார். அதனால் வண்டிப் பாளையம் அந்தக் காலத்தில் 'கரையேறவிட்ட குப்பம்' என அழைக்கப்பட்டது.

இந்தக் 'கரையேற விட்டவர் குப்பம்' என்னும் பெயர் சிறிது சுருங்கிக் 'கரையேறவிட்ட குப்பம்' என வழங்கப்படுகிறது; இலக்கியங்களில் 'கரையேறவிட்ட நகர்' என்னும் பெயர் காணப்படுகிறது. அப்பர் இங்கே கரையேறியதற்குச் சான்று பகரும் முறையில் இவ்வூரில் அவர் பெயரால் மடம் ஒன்று உள்ளது. மற்றும், அவர் கரையேறிய இடத்தில் ஒரு நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அப்பர் இங்கே கரையேறியதால் கரையேற விட்ட(வர்) குப்பம் என்னும் பெயர் இவ்வூருக்கு ஏற்

பட்டதென்றால் அப்பர் கரையேறுவதற்குமுன் இவ்வூருக்கு என்ன பெயர் இருந்திருக்கக்கூடும்? இவ் வினவுக்கு விடையிறுப்பது கடினம். இருப்பினும் ஒருவாறு பதில் கூறலாம். அப்பர் கரையேறுவதற்கு முன் இவ்வூருக்கு வறிதே 'குப்பம்' என்னும் பெயர் இருந்திருக்கலாம்.

### தேவனாம் பட்டினம்

பட்டினம் என முடிந்திருப்பதிலிருந்தே இவ்வூர் கடற்கரையில் உள்ள சிற்றூர் என்பது புலனாகும். தேவநாதன் பட்டினம் அல்லது தெய்வநாயகன் பட்டினம் என்பதுதான் தேவனாம் பட்டினம் என்றாகியிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. இந்தப் பெயருடைய பெரியார் ஒருவர் முன்பு இங்கே வாழ்ந்திருப்பார் - அல்லது ,- இந்த ஊரோடு சிறப்புத் தொடர்பு கொண்டிருந்திருப்பார்.

தேவனாம் பட்டினம், மஞ்சக் குப்பம் - புதுப் பாளையம் பகுதிக்குக் கிழக்கே கடற்கரையில் உள்ளது. இதனை ஒரு சிறு தீவு என்று சொல்லலாம். கெடிலம் கடலோடு கலக்கும் இடத்திற்கு மேற்கே சிறிது தொலைவில், கெடிலத்திலிருந்து ஒரு கிளை பிரிந்து வடக்கே சிறிது தொலைவு சென்று பிறகு மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்பிக் கடலோடு கலக்கிறது. கெடிலத்தின் இந்த வடகிளைப் பிரிவுக்குள் தேவனாம் பட்டினம் இருக்கிறது. அஃதாவது, இதன் கிழக்குப் பக்கம் கடலும், தெற்குப் பக்கம் கெடிலமும், மேற்குப் பக்கமும் வடக்குப் பக்கமும் கெடிலத்தின் வடகிளைப் பிரிவும் உள்ளன. இவ்வாறு நான்கு பக்கமும் நீர் சூழ்ந்திருப்பதால் இஃது ஒரு சிறு தீவு எனப்படுகிறது. இங்கே மீனவர்கள்தாம் மிகுதியாக வாழ்கின்றனர். மாசிமகத்தன்று நூற்றுக்கணக்கான இறையுருவங்கள் வந்து கடல் நீராடுவது இப்பகுதியில்தான்.

தேவனாம் பட்டினம் கடற்கரைக்குச் செல்லத் 'தார்' போட்ட நல்ல சாலைகள் உண்டு; கடற்கரையிலும் தார்ப்பாதை உண்டு. மாலையில் காற்று வாங்குவதற்கு ஏற்ற இடம் இது. இங்கிலாந்து



நாட்டிலுள்ள 'கவுண்டி பீச்' போன்ற அமைப்பு இங்கே இருப்பதாக அறிந்தவர்களால் புகழப்படுகிறது. அழகும் வசதியும் செய்து மக்களைக் கவர்ந்து இங்கே மாலைவேளைகளில் பெருங் கூட்டம் சேரும்படி செய்யவேண்டும் என்னும் பரந்த நோக்குடன், கடலூர் நகர் மன்றம இங்கே 1938 ஆம் ஆண்டில் மின் விளக்குகள் பொருத்திப் பூங்காவும் வைத்து அணி செய்தது. இருப்பினும் இந்தக் கடற்கரை, சென்னைக் கடற்கரையைப் போல் வளர்ச்சி பெறவில்லை. கோடையில் ஓரளவு மக்களே வந்து போகின்றனர். போதிய அளவு உள்நகர்ப் பேருந்து வண்டி (டவுன் பஸ்) வசதி செய்யப்பட்டால் பெருங்கூட்டம் சேரக்கூடும்.

தேவனாம் பட்டினம் இயற்கைச் சூழ்நிலைச் சிறப்புடன், செயின்ட் டேவிட் கோட்டையை மையமாகக் கொண்ட வரலாற்றுச் சிறப்பும் உடையதாகும்.

### செயின்ட் டேவிட் கோட்டை

கப்பல் வழியாக வாணிகம் புரிய வந்த ஐரோப்பியர்களைத் தேவனாம் பட்டினம் தீவு கவர்ந்தது. இத் தீவிற்குள் பதினாறும் நூற்றாண்டிலேயே ஐரோப்பியர்கள் புகத் தொடங்கி விட்டனர்; இந் நூற்றாண்டின் பிற்பகுதியில் டச்சுக்காரர் தேவனாம்பட்டினத் தீவின் வடபகுதியில் ஒரு தொழில் நிலையம் நிறுவினர். இவர்கள் சரக்கு விற்பனை புரிந்ததன்றி, அடிமை வாணிகமும் செய்தார்களாம்; இங்கிருந்தபடி இந்திய ஏழை மக்களை இந்தோனேசியாவுக்கு அடிமைகளாக விற்றார்களாம். என்னே கொடுமை! அந்தக் காலத்தில் இந்தப் பகுதியில் உரிமை கொண்டிருந்த மராத்தியர்கள் 1678 இல் டச்சுக்காரர்களைத் தேவனாம்பட்டினத் தொழிற் கூடத்திலிருந்து மஞ்சக் குப்பத்திற்கு விரட்டினார்கள்; பின்னர் அங்கிருந்தும் 1945 ஆம் ஆண்டளவில் பரங்கிப் பேட்டைக்கு விரட்டினார்கள்.

டச்சுக்காரர் நிலை இவ்வாறு இருக்க, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் தேவனாம்பட்டினத் தீவின் தெற்கு எல்லையில் கெடிலத்தின் வடகரையில் 'செயின்ட் டேவிட்' என்னும் கோட்டை கட்டினர். முதலில் 'எலிகு யேல்' என்னும்

ஆங்கிலேயர், சரக்குகள் வைப்பதற்காக 'ராமராஜா' என்பவ ரிடமிருந்து ஒரு கிடங்கை விலை பேசி வாங்கினர். அதற்கு அண்மையில் 'செயின்ட் டேவிட் கோட்டை' (Fort St. David) கட்டப்பட்டது. 1683 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தக் கோட்டை, 1693, 1698, 1702, 1725, 1740, 1745 ஆகிய ஆண்டுகளில் மேலும் மேலும் படிப்படியாக விரிவுபடுத்தப் பட்டதோடு வலுப்படுத்தவும் பட்டு வந்தது. 1745 இல் ராபர்ட் கிளைவ் இதன் காவலில் நன்கு கவனம் செலுத்தினர்.


1745 தொட்டு 1750 வரை ஆங்கிலேயர்கள் இந்தக் கோட்டையைத் தங்கள் ஆட்சியின் தலைநகராகப் பயன்படுத்தி னார்கள். அப்போது சென்னை பிரெஞ்சுக்காரர் கையில் இருந்தது. பின்னர் ஆங்கிலேயர்கள் சென்னையைக் கைப்பற்றி, செயின்ட் டேவிட் கோட்டைக்கு இருந்த தலைநகர்த் தகுதியைச் சென்னையில் இருக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றி னார்கள்.

ஆங்கிலேயர்கள் செயின்ட் டேவிட் கோட்டையை எவ்வளவு விழிப்புடன் காத்துங்கூட, அது பகைவர்களால் பலமுறை தாக்கப்பட்டது. செஞ்சியை யாண்ட தேசிங்கு மன்னன் தந்தையான சாரூப்சிங் என்பவர் 1712 ஆம் ஆண்டளவில் இந்தக் கோட்டையை ஒரு கை பார்த்தார். பிரெஞ்சு படைத் தலைவரும் கவர்னருமான டூப்ளே (Dupleix) என்பவர் மட்டும் இந்தக் கோட்டையை நான்கு முறை தாக்கி யிருக்கிறார்.

செயின்ட் டேவிட் கோட்டை பலமுறை பிரெஞ்சுக்காரர்களால் தாக்கப்பட்டு அழிக்கப்படாமல் இருந்திருந்தால், கடலூர் கல்கத்தா போல் பெருநகராக உருவாகிச் சென்னையின் இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும். ஒரு காலத்தில் தமிழ கத்தின் தலைநகராய்த் திகழ்ந்த செயின்ட் டேவிட் கோட்டை இன்றிருக்கும் நிலை மிகவும் இரங்கத்தக்கது. இடிந்து போன இந்தக் கோட்டையின் எளிய நிலையைப் பின்வரும் படத்தில் காணலாம்:



கடலும் கழியும் கெடிலமும் சுற்றியுள்ள சூழ்நிலையில் இருக்கும் கோட்டைப் பகுதி, இப்போது காண்பவர்க்கு, ஒரு காலத்தில் தலைநகராயும் போர்க்களமாயும் இருந்த பகுதியாகத்



கடலூர் செயின்ட் டேவிட் கோட்டை

தோன்றாமல், முனிவர்கள் தவம் செய்வதற்கு ஏற்ற அமைதி யான சூழ்நிலை உடையதாகவே தோற்றமளிக்கும். காலம் செய்யும் கோலம் என்னே!

# 12. கெடில நாட்டு வளங்கள்

கெடிலக்கரை நாடு மிக மிக உயர்ந்த வளங்களை உடைய நாடு என்று சொல்ல முடியாவிடினும், வளம் அற்ற நாடு என்றும் சொல்ல முடியாது; கூடியவரையும் சராசரி வளமுள்ள நாடு என்று சொல்லலாம். மிகுந்த அளவில் இல்லாவிடினும், ஓரளவாயினும் மலை (குறிஞ்சி) வளம், காட்டு (முல்லை) வளம், வயல் (மருதம்) வளம், கடல் (நெய்தல்) வளம் என்னும் நானில வளமும் உடையது கெடில நாடு.

## மலைவளமும் காட்டுவளமும்

### கல்வராயன் மலை

பொதுவாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிறப்பாகக் கெடிலம் ஓடும் மூன்று வட்டங்களுள் கள்ளக்குறிச்சி வட்டமே கூடுதலான மலைவளமும் காட்டுவளமும் உடையது. இங்குள்ள கல்வராயன் மலைத்தொடர் வளமுடையதாகும். இம் மலையில் தேக்கு மரங்கள், சந்தன மரங்கள், கடுக்காய் மரங்கள், மூங்கிற் காடுகள், முந்திரிக் காடுகள் முதலியவை உள்ளன. இங்கே ஏலம், இலவங்கம், காப்பி முதலியனவும் பயிரிடலாம். இன்னும் பல்வேறு காய்கறி கனிவகைகள் பயிரிடவும் ஏற்ற சூழ்நிலையுடையது இம்மலை. இம் மலையேயன்றி இவ் வட்டத்தில் ஆங்காங்கே தனித்தனிக் குன்றுகளும் காட்டுப் பகுதிகளும் உள்ளன. கெடிலம் ஆறு தோன்றும் மையனூர் மலைக் காட்டில் பல்லாண்டுகட்குமுன் அகில், சந்தனம், தேக்கு, பாதிரி, கொன்றை முதலிய மரவகைகள் நிறைந்திருந்ததாக அந்த வட்டாரத்திலுள்ள பெரியவர்கள் தெரிவிக்கின்றனர். இப்போது உயர்வகை மரங்கள் அழிந்தும் அழிக்கப்பட்டும் மறைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. கெடில ஆற்றின் வெள்ளத்தில் பலவகை உயர் மரங்களும் மணிகளும் காட்டு விலங்குகளும் அடித்துக் கொண்டு வரப்பட்டனவாகக் கெடிலக்கரை இலக்கியங்களில்



பாடப்பட்டிருப்பதை உண்மையென்றே நம்பலாம்; ஏனெனில், கெடிலம் ஓரளவு மலைவளமும் காட்டுவளமும் உடைய கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து தோன்றி வருகிறதல்லவா?

### முள்ளூர் மலைக்காடு

அடுத்துத் திருக்கோவலூர் வட்டத்திலும் சிறு சிறு மலைக் குன்றுகளும் சிறுசிறு காட்டுப்பகுதிகளும் உள்ளன. தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சிக்கு அடுத்தபடியாகக் காட்டுவளம் உடையது திருக்கோவலூர் வட்டந்தான். மலையமான் மரபு மன்னர்கட்கு உரியனவாகச் சங்க இலக்கியங்களில் பலபடப் புகழப்பட்டுள்ள முள்ளூர் மலையும் முள்ளூர்க் காடும் இப் பகுதியைச் சேர்ந்தனவே. இந்த முள்ளூர் மலை பின் வருமாறு சங்க நூல்களிற் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது:—

''ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்
பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
ஒருவேற்கு ஓடி யாங்கு''
—நற்றிணை - 170

''மாயிரு முள்ளூர் மன்னன் மாவூர்ந்து''
—நற்றிணை - 29-1 - கபிலர்.

''முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நண்ணுற வந்து''
—குறுந்தொகை - 312 - கபிலர்.

''முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி''
—அகநானூறு - 209 - கல்லாடனார்.

''பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே''
—புறநானூறு-123-கபிலர்.

''கங்குல் துயில்மடிந் தன்ன தூங்கிருள் இறும்பிற்
பறையிசை அருவி முள்ளூர்ப் பொருந''
—புறநானூறு 126 - மாறோக்கத்து நப்பசலையார்.

''பொய்யா நாவின் கபிலன் பாடிய
மையணி நெடுவரை யாங்கண் ஒய்யெனச்

செருப்புகல் மறவர் செல்புறங் கண்ட
என்னாறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி இருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி அக்குடை
புதுமையின் நிறுத்த புகழ்மேம் படுந''

—புறநானூறு - 174 - மாறோக்கத்து நப்பசலையார்.

இந்தப் பாடல்களில் முள்ளூர் மலையும் காடும் மலைமான் மன்னரும் புகழப்பட்டிருத்தலைக் காண்கின்றோம். முள்ளூர் மலையை ஆரியர் முற்றுகையிட்டதாகவும் அவர்களை மலையமான் திருமுடிக்காரி முறியடித்ததாகவும் நற்றிணை கூறுகின்றது. பெரும் புகழுடைய முள்ளூர், மிகப் பெரிய முள்ளூர் என்னும் பொருள்களில் 'பேரிசை முள்ளூர்' 'மா இரு முள்ளூர்' என நற்றிணைப் பாடல்கள் கூறுவது காண்க. 'முள்ளூர்க்கானம்' என முள்ளூர்க் காட்டைக் கபிலரது குறுந்தொகைப்பாடல் குறிக்கிறது. 'முள்ளூர் மலைக்காட்டில் மழை மிகுதியாகப் பெய்வதாகக் கபிலர் புறநானூற்றுப் பாடலில் கூறியுள்ளார். இரவே தூங்குவது போன்ற இருள் செறிந்த அடர்ந்த காடும், பறையொலிபோல் அருவி முழங்கியிறங்கும் மலையும் முள்ளூரில் இருப்பதாகப் புறநானூற்றில் மாறோக்கத்து நப்பசலையார் கூறியுள்ளார்; அவர் மேலும் ஒரு புறப்பாடலில், கபிலர் பாடிய குறைவற்ற பெருஞ்சிறப்புடைய பெரிய முள்ளூர்மலை எனக் குறிப்பிட்டு, அம் மலைக்காட்டில் வந்து பதுங்கியிருந்த சோழ மன்னனை மலையமான் திருக்கண்ணன் காப்பாற்றி, அச் சோழனுக்கு மீண்டும் சோழநாடு கிடைக்கும்படி செய்தான் என்று ஒரு செய்தி தெரிவித்துள்ளார். இவ்வாறு பாடல் பெற்ற பழம்பெரு வரலாற்றுப் புகழுடைய முள்ளூர் மலையையும் காட்டையும் தன்னகத்தே கொண்டது திருக்கோவலூர் வட்டம்.

இவ் வட்டத்தில் திருநாவலூர்வரையும் மலைப்பாங்கைக் காணலாம். ஆங்காங்கே தனித் தனிக் கற்களாயினும் தரைக்கு மேல் தலையை நீட்டிக்கொண்டிருக்கும். தோன்றும் இடத்திலிருந்து திருநாவலூருக்கு மேற்குப் பகுதிவரையும் கெடிலம் பாறைப் பாங்கிலேயே ஓடி வருகிறது என்று சொல்லலாம்.



அந்தப் பகுதியில் சில இடங்களில் ஆற்றில் மணலைக் காண்பதரிது. சில இடங்களில் ஆற்றின் கரைப் பகுதிகளில் கட்டைவண்டியும் செல்ல முடியாத அளவிற்குப் பாறைகள் படர்ந்து பரவி இருக்கும். அப்பர் பெருமான் தமது தேவாரத்தில் 'வரைகள் வந்து இழிதரும் கெடிலம்' எனப் பாடியிருப்பது பொருத்தமே!

**கேப்பர்மலை**

அடுத்துக் கடலூர் வட்டத்திற்குள் வந்தால், கருங்கல் மலைக்குன்றுகளையும் பாறைகளையும் பார்க்க முடியாது. அதற்குப் பதிலாக இங்கே கேப்பர் மலைத் தொடர்ச்சியைக் காணலாம். இம் மலை செம்மண் கலந்த செங்கல் மலையாகும். இம் மலைத் தொடர்ச்சி கூடலூருக்கு மேற்கே உள்ளது. கடல் மட்டத்திற்கு நூறடி உயரம் உடையது இது. கடலூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியில் சில கி. மீ. தொலைவு இம் மலையின் அடிவாரத்தை ஒட்டிக் கெடிலம் ஆறு ஓடி வருகிறது. இம் மலை சார்ந்த பகுதியில் முந்திரி நன்றாய் விளைந்து, முந்திரிப் பயறு வாயிலாக அயல்நாட்டுச் செலாவணி பெற்றுத் தருகிறது. இம் மலையிலிருந்து உடைத்து எடுக்கப்படும் செந்நிறக்கற்கள் பாதைபோடப் பயன்படுகின்றன.

இம் மலை வண்டிப் பாளையத்திற்கு அருகில் இருப்பதால் வண்டிப் பாளையம் மலை எனப் பண்டு வழங்கப்பட்டது. மற்றும் இம் மலையைச் சார்ந்துள்ள ஊர்ப்பெயர்களாலும் அவ்வவ்வூர்ப் பக்கங்களில் குறிப்பிடப்பட்டு வந்தது. செம்மண் மலை - செங்கல் மலை என்றும் இதனைச் சொல்லுவதுண்டு. சில இடங்களில் இதனை மலை என்று சொல்லுவதினும் ஒரு மேட்டு நிலம் (பீடபூமி) என்று சொல்லலாம். இதன்மேல் நிலக்கடலை முதலிய பயிர்வகைகள் விளைவிக்கப்படுகின்றன. 'பிரான்சிஸ் கேப்பர்' (Francis Capper) என்னும் ஆங்கிலேயப் படைத் தலைவர் ஒருவர் 1796 ஆம் ஆண்டு கடலூருக்கு அண்மையில் இம் மலையில் ஒரு பகுதி பெற்று அதில் மாளிகையும் கட்டிக் கொண்டார்; அதிலிருந்து இம் மலை 'கேப்பர் மலை' என அழைக்கப்

படுகின்றது. இம் மாளிகை 1815 இல் அரசாங்கத்துக்கு உரியதாயிற்று. இப்போது இதில் மாவட்டச் சிறைச்சாலையும் நுரையீரல் நோய்த்தடுப்பு நிலையமும் உள்ளன. சிறைச்சாலையில் சமுக்காளம் முதலிய உருப்படிகள் நெய்யப்படுகின்றன. கூடலூருக்குத் தெற்கே இம் மலையடிவாரத்தில் 'கேப்பர் குவாரி' என்னும் பெயரில் புகைவண்டி நிலையம் ஒன்று உள்ளது. மலைக் கற்களை ஏற்றிச் செல்வதற்கு இந்நிலையம் பெரிதும் பயன்படுகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த ஆங்கில பிரெஞ்சுப் போரில் இந்த மலை சிறப்பிடம் பெற்றிருந்தது. இந்த மலைக் காற்றும் நீரும் மூலிகைகளும் பைத்திய நோயைப் போக்குவதாகச் சொல்லப்படுகிறது.

**வயல் வளம் :**

மருதம் எனப்படும் வயல்வளம் கெடில நாட்டில் போதுமான அளவு உள்ளது. கெடிலம் ஓடுமிடமெல்லாம் நிலம் வளங் கொழிக்கின்றது. வழியிலுள்ள அணைகளால் வயல்கள் பெரும் பயன் பெறுகின்றன. கெடிலக்கரைப் பகுதிகளிலுள்ள நன்செய் வயல்கள் மிக்க விலைப்பெறுமானம் உடையவை. கெடிலக்கரை நிலவளத்தைப்பற்றிக் கெடிலக்கரை இலக்கியங்களில் கூறப் பட்டிருக்கும் செய்திகள் முற்றிலும் உண்மையே. எந்தப் பகுதியில் பழம்பெருந் திருக்கோயில்களும் அரசர் தலைநகர்களும் மிக்குச் சிறந்து இருக்கின்றனவோ அல்லது இருந்தனவோ, அந்தப் பகுதியை வளம் நிறைந்த பகுதியெனக் கண்ணை மூடிக்கொண்டு சொல்லலாம். கெடிலக்கரையில் பாடல் பெற்ற பழம் பெரும் பதிகள் பல உள்ளன. மற்றும், திருக்கோவலூர், கிளியூர், ஆற்றூர், சேந்தமங்கலம், திருநாவலூர், திருவதிகை, திருமாணிகுழி, கடலூர் முதலிய ஊர்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு அரச மரபினர்கட்குத் தலைநகரங்களாயிருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று கெடிலக்கரை நிலங்களில் சோற்றுக்கு நெல் விளைவதன்றிக் கரும்பும் நிலக்கடலையும் நிறைய விளைந்து வெளிநாட்டுப் பணத்தைத் தருவிக்கின்றது என்பதை மறந்து விடுவதற்கில்லை.



**கடல் வளம் :**

நெய்தல் எனப்படும் கடல் வளமும் ஓரளவு இங்கே உண்டு. கெடிலம் கடலோடு கலப்பதோடு அமைந்துவிட்டிருந்தால் அவ்வளவு சிறப்பிருக்காது. கலக்குமிடத்தில் இயற்கைத் துறைமுகம் அமைந்திருப்பதால்தான் கடல்வளம் இருப்பதாகச் சொல்ல முடிகிறது. மீன் பிடித்தல், உப்பளம் அமைத்து உப்பு எடுத்தல், படகு கட்டுதல், படகு ஓட்டுதல், ஏற்றுமதி இறக்குமதி செய்தல், கப்பல் பயணம் செய்தல், கடல் வாணிகம் புரிதல் முதலிய நெய்தல் நிலத் தொழில்கள் பலவும், கெடிலம் கடலோடு கலக்கும் கடலூரில் நடைபெறுகின்றன. கூடலூர்த் துறைமுகம் மீன்பிடி துறைமுகமாகவும் இருந்து மீன்வளம் கிடைக்கச் செய்வது குறிப்பிடத்தக்கது.

**நீர் வளம் :**

நீர்வளம்—நிலவளம் என்பார்கள். நானில (நான்கு நில) வளங்கள் விளக்கப்பட்டன. நானில வளங்கள் பெருகுவதற்கு நீர்வளம் இன்றியமையாதது. அதற்கு மழைவளம் வேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தில் ஆண்டுக்குச் சராசரி 1270மில்லி மீட்டர் மழை பெய்கின்றது; கடற்கரையை ஒட்டியுள்ள கடலூர் வட்டத்தில் ஆண்டுக்குச் சராசரி 2000 மில்லி மீட்டர் மழை பெய்கின்றது. சராசரி ஆண்டுக்கு 55 நாள்கள் மழை பெய்கின்றது எனலாம். இப் பகுதியில் பெரும்பான்மை மழை வடகிழக்குப் பருவக் காற்றால் பெய்கின்றது.

இவ் வட்டாரத்தில் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மூன்று திங்கள்களும் மழைக்காலமாகும், மார்கழி, தை, மாசி ஆகிய மூன்றும் பனிக்காலமாகும்; பங்குனி பனிக்காலத்திற்கும் கோடைக்காலத்திற்கும் இடைப்பட்ட தரத்தது; சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மூன்றும் கோடைக்காலமாகும்; ஆடி ஆவணி ஆகிய இரண்டும் கோடைக்காலத்திற்கும் மழைக் காலத்திற்கும் இடைப்பட்ட நிலையுடையவை.

கெடிலத்தைப் பொறுத்த வரையும் எந்தக் காலத்திலும் நீர் வற்றுவதில்லை. மழை பெய்யாத போதும் ஊற்று நீர் ஆற்றில்

...படுகின்றது; அதனால் கெடிலம் வற்றாத 'உயிர் ஆறு' (ஜீவநதி) எனப் புகழப் படுகின்றது.

## ஆற்றுப் பாசனம்:

கெடில ஆற்றுப் பாசனம் பெரும்பாலும் அணைக்கட்டுகள் வாயிலாகவே நடைபெறுகின்றது. கெடில ஆற்றின் குறுக்கே பல்வேறிடங்களில் பாசனத்திற்குப் பயன்படும் ஐந்து அணைக் கட்டுகள் உள்ளன. அவை, முறையே, முகலாற்று அணை, புத்தனேந்தல் அணை, திருவதிகை அணை, வாணமா தேவி அணை, திருவயிந்திரபுரம் அணை என்பனவாம். இவற்றுள் முதல் இரண்டு அணைகளும் திருக்கோவலூர் வட்டத்திலும், இறுதி மூன்று அணைகளும் கடலூர் வட்டத்திலும் உள்ளன. இவ் வைந்தனுள் இறுதி மூன்றுமே சிறந்தவை—பழமையானவை.

கடலூர் வட்டத்தில் உள்ள மூன்று அணைகளாலும் ஏறக்குறைய 8,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மொத்தம் ஐந்து அணைகளாலும், ஏறக்குறைய 10,000 (பத்தாயிரம்) ஏக்கர் நிலங்கள் பயன் அடைகின்றன. உலக ஆறுகளை நோக்கக் கெடிலம் ஆற்றால் பயன்பெறும் நிலப்பகுதி அளவில் சிறியதாயினும், அப்பகுதி, ஐரோப்பாவின் மகிழ்விடம் (இன்பபுரி) ஆகிய—அளவில் சிறிய—சுவிட்சர்லாந்து போன்றதாகும்.

## பிற பாசனங்கள்:

கெடிலக் கரைப் பகுதிகளில் பெரும்பாலும் ஆற்றுப் பாசனமே நடைபெறுகின்றது. மற்றும் சில இடங்களில் ஏரிப் பாசனம், ஊற்றுக் கால்வாய்ப் பாசனம், கிணற்றுப் பாசனம், முதலியனவும் நடைபெறுகின்றன.

## நிலக்கனி வளம்:

தமிழகத்திலேயே தென்னார்க்காடு மாவட்டமும் சேலம்மாவட்டமுந்தான் நிலக்கனிவளம் (Minerals) மிக்க பகுதிகள், தென்னார்க்



காடு மாவட்டத்துப் பழுப்பு நிலக்கரியும் சேலம் மாவட்டத்து இரும்புக் கனியும் சேர்ந்துகொண்டால் கேட்கவா வேண்டும்! பொதுவாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் செம்பு, ஈயம், துத்த நாகம், வனேடியம், செலேனியம், தோரியம், நிலக்கரி, நிலத்தடி எண்ணெய், சுண்ணாம்புக்கல், கெட்டி மண், பொம்மைக் களிமண் முதலிய நிலக்கனி வளங்கள் நிறைந்திருக்கின்றன; சிறப்பாகக் கடலூர் வட்டத்தில் எஃகு உண்டாக்க உதவும் வனேடியம், அணுவிலிருந்து ஆற்றலைப் பெருக்கப் பயன்படும் தோரியம், பல்முனைப் பயனுள்ள கெட்டி மண், உரம் செய்ய உதவும் வெண்காவி மண், பொம்மை செய்ய உதவும் களிமண், சிமிட்டி செய்ய உதவும் வெள்ளை மண், நிலத்தடி எண்ணெய், பல்வேறு பயனளிக்கும் பழுப்பு நிலக்கரி, சிமிட்டி முதலியவை செய்ய உதவும் சுண்ணாம்புக்கல் (சுக்கான் கல்) முதலியவை உள்ளன. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கண்டுபிடிக்கப் பட்டுத் தோண்டி எடுக்கப்படுவது போலவே மற்ற வளங்களும் தோண்டி எடுக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இப் பகுதியிலுள்ள சுண்ணாம்புக்கல் (Limestone) வளம் தோண்டியெடுக்கப்பட்டால் பெரும் பயன் விளையும்.

நெய்வேலியில் நிலக்கரி தோண்டும்போது கிடைப்பது போன்ற வகைக் களிமண் கெடிலக்கரையிலுள்ள கடலூரிலும் பண்ணுருட்டி முதலிய ஊர்ப்பகுதிகளிலும் கிடைக்கின்றது. நெய் வேலிக் களிமண்ணால் என்னென்னவோ செய்யப்படவிருக்கின்றன. கடலூர்—வண்டிப் பாளையம் பகுதியிலும் பண்ணுருட்டியிலும் வண்ணப் பொம்மைகள் பல செய்யப்படுகின்றன. பண்ணுருட்டிப் பொம்மைகள் மிகவும் பெயர் பெற்றனவன்றோ? பண்ணுருட்டிக்கு அடுத்த காடாம்புலியூர்ப் பகுதியில் உள்ள ஒரு வகை வெள்ளைமண் சிமிட்டி செய்ய டால்மியாபுரத்திற்குக் கொண்டுபோகப்படுகின்றது. அடுத்து, திருவயிந்திரபுரம் மலைப் பகுதியில் வெட்டி எடுக்கப்படும் வெண்காவிக் களிமண் குறிப் பிடத்தக்கது. கல்போல் கட்டி கட்டியாக வெட்டி எடுக்கப்படும் இம் மண், உரத்தொழிற்சாலைகட்குக் கொண்டுபோகப்பட்டு, மணிலா பிண்ணாக்கு, மாட்டெலும்பு முதலியவற்றுடன் கலக்கப் பட்டு, உரம் உண்டாக்க உதவுகின்றது. மற்றும், வண்டிப்

மானியம் தென்னங்கீற்றுகள், நெல்லிக்குப்பம் வெற்றிலை பண்ணுருட்டிப் பலாப்பழம் முதலியவை பெயர் பெற்றவை.

**கல்வி—கலைவளம் :**

இந்த இயற்கை வளங்களுடன், கல்வி—கலை வளமும் கெடில நாட்டில் சிறப்புற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் கற்றவர் தொகையை ஆராய்ந்து கணக்கிடுவதற்காகக் கி. பி. 1822-ஆம் ஆண்டில், 'தாமஸ் மன்ரோ' (Sir Thomas Munro) என்பவர் தலைமையில் அமைக்கப்பெற்ற குழு தமிழகத்தில் மற்ற மாவட்டங்களினும் தென்னார்க்காடு மாவட்டத்திலேயே கற்றவர் தொகை மிகுதி என்று ஆய்ந்துரைத்தது.

கடலூரில் கி. பி. 1879 ஆம் ஆண்டில் 'டவுன் காலேஜ்' (Town College) என்னும் பெயரில் ஒரு கலைக் கல்லூரி அரசினரால் தோற்றுவிக்கப்பட்டது. அடுத்து, 1884 ஆம் ஆண்டில் 'செயின்ட். ஜோசப் காலேஜ்' (St. Josephs College) என்னும் பெயரில் தனியார் கலைக் கல்லூரி ஒன்று தோன்றியது. நாளடைவில் இவை மறைந்துவிட்டன. இக்காலத்தில் கெடில நாட்டுப் பகுதியில் பல கல்லூரிகள் உள்ளன.

பண்டு, கடலூரைச் சார்ந்திருந்த பாடலிபுத்திரம், பாகூர், எண்ணாயிரம் முதலிய ஊர்களில் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. இக் கல்வி நிறுவனங்களில் மாணாக்கர்கள் உண்டும் உறைந்தும் (Boarding and Lodging) கல்வி கற்றதாகச் சொல்லப்படுகின்றது.

சங்க காலந்தொட்டு பிற்காலம் வரை, கெடில நாட்டில் தோன்றித் திகழ்ந்த பெரியார்கள்—அறிஞர்கள்—புலவர்கள்—பாவாணர்கள்—கலைஞர்கள்—மிகப் பலராவர்.

கெடில நாட்டுப் பகுதியில் இயல், இசை, கூத்து (நடனம்), ஓவியம், கட்டடம், சிற்பம் முதலிய கலைகள் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தன. பல்லவ மன்னர்களும் சோழ வேந்தர்களும் இக் கலைகட்குப் போதிய ஆதரவு அளித்து வந்தனர். இத்தலை



கலைகளையும் திருக்கோயில்களில காணலாம். எடுத்துக்காட்டாகத் திருக்கோவலூர், திருமாணி குழி திருவயிந்திரபுரம், திருவதிகை, திருப்பாதிரிப் புலியூர், பாகூர் முதலிய ஊர்களில் உள்ள கோயில்களைக் கொள்ளலாம் :

கல்வி—கலைவளமும், நிலக்கரி, சுண்ணாம்புக்கல், வனேடியம், கெலேனியம், தோரியம், பலமுனைப் பயன் தரும் மண் வகைகள்—கல் வகைகள், நிலத்தடி எண்ணெய் முதலிய வளங்களும் ஒருபுறம் இருக்கட்டும்.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய மலையமான் திருமுடிக்காரி வந்தவர்க்கெல்லாம் தன் உடைமைகளைத்தும் வரையாது வாரி வாரி வழங்கிய கொடைவளம் மிக்கிருந்த நாடு கெடிலநாடு என்பதற்குமேல் இன்னும் என்ன கூறிக் கெடில நாட்டு வளத்தைச் சிறப்பிக்க வேண்டும்? இங்கே, பின் வரும் திருக்குறள்களை நினைவு செய்துகொண்டால் போதும்!

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை" (53)

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்." (1010)